20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 பாலம் 13 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JULY 01, 2010

# வெற்றிபெறப் போவது யார்?

## உலகக்கோப்பை கால்பந்து 2010

19 வது உலகக்கிண்ண போட்டிகளின் உச்சக்கட்டம் கால்இறுதி ஆட்டங்களை நெருங்கியுள்ளது. 32 நாடுகள் கலந்து கொண்ட முதல் சுற்று 16 நாடுகள் தெரிவு செய்யப்பட்டு தற்போது 8 நாடுகள் கால் இறுதியை நெருங்கியுள்ளனர். இதில் சிறப்பாக 4 தென்அமெரிக்க நாடுகளும் (பிரேசில், அஜன்ரீனா, உருகுவே, பராகுவே), 3 ஐரோப்பிய நாடுகளும் (ஜேர்மனி, நெதர்லாந்து, ஸ்பெயின்), ஒரேயொரு ஆபிரிக்க நாடாக கானாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆபிரிக்க மண்ணில் நடைபெறும் போட்டிகளில் ஒரேயொரு ஆபிரிக்க நாடான கானா, உருகுவே அணியை கால் இறுதியில் வெல்லுமாக இருந்தால் 1990 ஆம் ஆண்டு இத்தாலியல் நடைபெற்ற உலகக்கிண்ண போட்டியில் ஆபிரிக்க நாடான கமரூன், 2002 தென்கொரியாவில் நடைபெற்றபோது செனக்கல் அணியும் இதுவரையில் கால் இறுதிஆட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட அணிகள் என்ற சாதனையை இளம் வீரர்களை உள்ளடக்கிய கானா அணி முறியடிக்குமா? என்பதனை பொறுத்திருந்து பார்ப்போம்.

எதிர்வரும் கால் இறுதி ஆட்டங்களில் 1930ல் உலகக்கிண்ணத்தை வென்ற உருகுவே அணியை எதிர்த்து கானாவும், 2 தடவை உலகக்கிண்ண இறுதிப்போட்டிக்கு தெரிவான (1974ம், 1978ம்) நெதர்லாந்து அணியை எதிர்த்து 7 தடவைகள் உலகக் கிண்ண இறுதிப்போட்டிக்கும் 5 தடவைகள் உலகக்கிண்ணத்தை வென்றெடுத்த பிரேசில் அணியும், 4 தடவைகள் இறுதிப்போட்சிக்கு தெரிவாகி 2 தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்றெடுத்த (1978, 1986) அஜன்ரீனா அணியை எதிர்த்து 7 தடவை கள், இறதிப்போட்டிக்கு தெரிவாகி 3 தடவை கள் உலகக்கிண்ணத்தை வென்றெடுத்த ஜேர்மன் அணியும் 2008ஆம் ஆண்டு யூரோ கிண்ணத்தை வென்றெடுத் ஸ்பெயின்

தொடர்ச்சி 06ம் பக்கம்




# G8 & G20 மாநாடுகள்

100 கோடி கனேடிய டொலர் ($1 Billion) பாதுகாப்பிற்காக செலவழிக்கப்பட்டு June 25, 26 மற்றும் 27ஆம் திகதிகளில் G8 மற்றும் G20 மாநாடுகளை கனடா நடத்தி முடித்துள்ளது. G8 நாடுகளின் தலைவர்கள் மாநாடு நிறைவு பெற்றதும் வெளியிட்ட கூட்டறிக்கையில் வடகொரியாவினதும், ஈரானினதும் அணுப்பரிசோதனைகளை வன்மையாக கண்டித்துள்ளார்கள். G8



நாடுகளின் தலைவர்கள் வளர்முக நாடுகளில் வாழும் தாய்மார்கள் மற்றும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நலன்களை கவனிக்க 500 கோடி அமெரிக்க டொலர் மேலதிகமாக செலவிட இம்மாநாட்டில் முடிவு எடுத்தார்கள். இவ் உதவி 2015 இல் 1,000 கோடி அமெரிக்க டொலரைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் உதவியால் உலக சுகாதார நிறுவனமும் உலக வங்கியும் 13 இலட்சம் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளையும் 68 ஆயிரம் தாய்மார்களையும் இறப்பிலிருந்து காப்பாற்றும் என கணிப்பிடப்பட்டுள்ளது.

G20 நாடுகளின் தலைவர்கள் மாநாடு நிறைவு பெற்றதும் வெளியிட்ட கூட்டறிக்கையில் பின்வரும் முக்கிய அம்சங்களை தெளிவுபடுத்தியுள்ளனர். உலக நிதி நிறுவனங்களின் வளர்ச்சியை கண்காணிப்பதற்கு ஒரு மிகவும் சக்தி வாய்ந்த ஒழுங்கு முறைகளையும் கட்டமைப்பையும் உருவாக்குதல். G20 நாடுகளின் கடன்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்தி 2013 ஆம் ஆண்டளவில் அதை தற்போது இருக்கும் கடனின் அரைப்பங்காக குறைக்கமுயலுதல்.

இம் மாநாடுகள் நடைபெறும்போது ரொறொன்ரோ நகர வீதிகளில் 10

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

RBC Royal Bank

Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

GSF Golden Store Fixtures
Friend for your Business
www.goldenstorefixtures.com sales@goldenstorefixtures.com Toll Free: 1 877-565-6554
நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம் Golden Store Fixtures Ltd.
» Counter Top Displays » Gift Bags & Ribbons » Glass Displays » Grid Panels & Accessories » Mannequins » Pegboard & Accessories » Racks » Shopping Cart & Baskets » Showcases » Sign & Sign Holders » Slatwall & Accessories » Steel Shelving » Wood Displays » And Much More.........
355 ADMIRAL BLVD. UNIT 5
MISSISSAUGA, ON, L5T 2N1
TEL: (905) 565 6555
FAX: (905) 565 8655

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers.
• Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்

Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING

MARKVILLE TOYOTA

KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# G8 & G20 மாநாடுகள்



ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பல்வேறு காரணங்களுக்காக தமது எதிர்ப்பை தெரிவித்து போராட்டம் நடத்தினார்கள். இப்போராட்டங்களின் போது சிலர் வன்முறைகளில் ஈடுபட்டு பொலீஸ் வாகனங்களுக்கு தீயிட்டும் வீதியோர கடைகளின் கண்ணாடிகளை உடைத்தார்கள். இவ் வன்முறையில் ஈடுபட்ட மற்றும் ஈடுபடமுயன்றவர்கள் என 500 இற்கு மேற்பட்டவர்களை பொலீஸார் கைது செய்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் மறுநாள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## பிரிட்டிஷ் மகாராணியின் கனடா வருகை



ஒன்பது நாட்களை கனடாவில் கழிப்பதற்காக பிரிட்டிஷ் மகாராணியார் June 28, 2010 ஆம் நாள் மாலை Halifax இல் வந்து இறங்கினார். 84 வயது எலிசெபத் மகாராணிக்கு இது கனடாவிற்கான 22வது பிரயாணம் ஆகும். Halifax இல் கனேடிய கடற்படையின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் பங்குபற்றிவிட்டு மகாராணியார் Winnipeg, Waterloo, Toronto இற்கு தனது 9 நாள் சுற்றுபயணத்தின் போது செல்வார்.

## அவுஸ்ரேலியாவின் முதல் பெண் பிரதமர்



அவுஸ்ரேலியாவின் முதல் பெண் பிரதமராக அவுஸ்ரேலியா தொழிற்கட்சியை சேர்ந்த ஜுலியா கில்லார்ட் என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் இக்கட்சிக்குள் நடைபெற்ற தலைவர் தெரிவில் தற்போதைய பிரதமர் கெவின் றொட்டை விட அதிக வாக்குகள் பெற்று கட்சியின் தலைவரானார்.

## கனேடிய தமிழர் தேசிய அவைக்கான தேர்தல்

ஜுன் 20, 2010 ஆம் நாள் நடைபெற்றது. இத்தேர்தலில் 29,035 மக்கள் வாக்களித்திருந்தார்கள். இவ்வாக்களிப்பின் மூலம் பின்வரும் 22 உறுப்பினர்கள் தமிழர் தேசிய அவைக்கு தெரிவு செய்யப்பட்டார்கள்.

## கனடாவின் சனத்தொகை 3 கோடியே 40 இலட்சம்

கடந்த ஏப்ரல் மாதத்தில் கனடாவின் சனத்தொகை 3 கோடியே 40 இலட்சத்தை தாண்டியது (34 Million). பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணமே கனடாவின் சனத்தொகை வளர்ச்சியில் முதலிடத்தை வகிக்கின்றது. கனடாவின் சனத்தொகை அதிகரிப்பில் 71% புதிய குடிவரவாளர்களையும் 29% நாட்டிற்குள் ஏற்படும் இயற்கையான சனத்தொகை அதிகரிப்பையும் கொண்டுள்ளது.

### தேசியப் பட்டியலில் இருந்து பின்வரும் 9 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

திவா பரம்சோதி
மோகன் இராமகிருஷ்ணன்
நீதன் சண்
ராஜ் சுப்பிரமணியம்
கவிதா செந்தில்முருகன்
தர்ஷிக்கா செல்வசிவம்
சாகரி செந்தில்குமார்
கிருஷ்ணா சரவணமுத்து
சிவா விமலச்சந்திரன்

### ஒன்ராரியோ மாகாணத்திற்கு பின்வரும் 7 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

மகேந்திரன் மாணிக்கம்
பிரபா நல்லையா
தேவா சபாபதி
லக்ஸ்மிலா சிறிதரன்
நந்தினி விஜயபவன்
நான்சி கமலநாதன்
அசோக் நித்தியானந்தன்

### கிழக்கு கனாடாவிற்கு பின்வரும் 4 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

செல்லத்துரை தெய்வேந்திரம்
சுபிதா தர்மகுலசிங்கம்
செபஸ்ரியாம்பிள்ளை தோமஸ்
மயூரன் மனோகரன்

### மேற்கு கனடாவிற்கு பின்வரும் 2 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

சுரேகா செல்வரட்ணம்
செல்வன் சின்னத்துரை

இவர்களை விட பிரதேசசபைகளுக்கான 30 உறுப்பினர்களில் ஒன்ராரியோவிற்கான 22 உறுப்பினர்களும் இத்தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

## வாசகர்களின் எண்ணங்கள்



விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

REAL ESTATE வகுப்புகள்

ரொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (Real Estate) வகுப்பு நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு: Vanessa - 416.321.6969



விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்
Jenisha Tailors & Designs
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை
416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON



# வாழத் துடிக்கும் வன்னி

## - ஒரு நேரடி ரிப்போர்ட் பாகம் 2

உடைந்த நிலையில் இருந்த ஒலுமடு பாடசாலையில் 354 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். அதிபர் உட்பட 11 ஆசிரியர்கள் மட்டுமே இருக்கின்றார்கள். எல்லோருமே வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் சிவரஞ்சினி சிவகுமார் மன்னார் ஆண்டான்குளத்தில் வசிக்கிறார். அவரது ஒரே மகளாகிய சிவானியும் இதே பாடசாலையில் தரம் ஐந்தில் படிக்கிறார். திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு ஆண்டான்குளத்தில் பஸ் ஏறி உயிலங்குளம் சந்தியில் இறங்கி, அங்கிருந்து வவுனியா நகரத்திற்குச் சென்று பின்னர் காலை 7.30 மணிக்கு ஒலுமடு நோக்கிச் செல்லும் வேறு பஸ் வண்டியில் ஏறினால் பாடசாலையைச் சென்றடைய 9.30 மணியாகிவிடும்.

பாடசாலை அதிபர் வவுனியாவில் இருந்து திங்கட்கிழமை பாடசாலைக்கு வருவார். ஏனைய ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்சில் வவுனியாவுக்கு வந்து அங்கிருந்து பின்னர் ஒலுமடுவுக்கு வருவார்கள். திங்கள் முதல் வெள்ளிவரை இந்த ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலையிலேயே தங்கியிருப்பார்கள்.

**- செல்வரட்ணம் சிறிதரன் -**

எல்லோரும் இணைந்து சமைத்துச் சாப்பிடுகின்றார்கள். போதிய விடுதி வசதி எல்லோருக்கும் கிடையாது. வெள்ளிக்கிழமை பாடசாலை விட்டதும் அனைவரும் வீடு செல்வார்கள். மீண்டும் திங்கட்கிழமை பாடசாலைக்குப் பயணம் தொடரும்.

மேல் வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமே இங்கு தளபாடங்கள் இருக்கின்றன. கீழ் வகுப்பு மாணவர்கள் தரையில் இருந்துதான் கல்வி கற்கின்றார்கள். தரம் ஐந்தில் கனகலிங்கம் விஜய் என்றொரு மாணவன். புளியங்குளத்தில் இடம்பெயர்ந்து சென்று இருந்த போது பாடசாலைக்குச் சென்று திரும்புகையில் வீதியோரத்தில் இருந்த மிதி-வெடி அவரைப் பதம் பார்த்துவிட்டது. வலது காலை வைத்தியசாலையில் அகற்றி விட்டார்கள். துன்பத்திலும் அதிஸ்டம் என்பார்கள். அதுபோல இந்தச் சம்பவம் அவரது வீட்டுக்கு அருகில் இடம்பெற்றதனால், வீட்டார் உடனடியாக ஓடிவந்து அவரைத் தூக்கி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். இல்லையானால், இரத்தப்பெருக்கினால் அந்தச் சிறுவன் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும். இவரது வகுப்பில் எல்லோரும் இவருடன் அன்பாக இருக்கின்றார்கள். எதிர்காலத்தில் நன்றாகப் படித்து ஓர் ஆசிரியராக


கல்லூரியின் இடிபாடுகளில் இப்போது நடைபெறும் வகுப்புகள்

வேண்டும் என்பது இவரது ஆசை.

இந்தப் பாடசாலையில் உள்ள 354 மாணவர்களில் 62 பேர் பெற்றோரை இழந்தவர்களாக இருக்கின்றார்கள். இவர்களில் 16 பேர் தாய் தந்தையர் இருவரையும் இழந்தவர்களாகவும், 66 பேர் தாய் அல்லது தந்தையை இழந்துள்ளார்கள். இந்தப் பாடசாலையில் மட்டுமல்ல. வன்னியில் உள்ள எல்லா பாடசாலைகளிலும் இவ்வானான மாணவர்கள் காணப்படுகின்றார்கள். இவர்கள் தமது இரத்த உறவுகளோடும், ஏனைய உறவினர்களோடும் சேர்ந்து பற்றாக்குறைகளுக்கு மத்தியிலேயே வாழ்கின்றார்கள். வன்னியில் ஆதரவற்றவர்களுக்கான நிலையங்கள், அமைப்புக்கள் இன்னும் செயற்படவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது. வன்னியில் மீளக்குடியேறியிருப்பவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். சிலரது பாதிப்பு வெளியில் தெரிகின்றது. பலருக்கு ஏற்பட்ட பாதிப்பு வெளியில் தெரிவதில்லை. அவர்களிடம் எதுவுமே இல்லை. அடிப்படைத் தேவைகளுக்காக அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதேவேளை, அவர்கள் ஒவ்வொருவரும் எதிர்கால வாழ்க்கை குறித்து ஏதோ ஒரு வகையில் அச்சமடைந்திருக்கின்றார்கள்.

நெடுங்கேணி பிரதேச கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அனைவரும் ஷெல் வீச்சுக்கள், விமானக் குண்டுத் தாக்குதல்கள் நேரடி மோதல்கள் என்பவற்றிற்கு அஞ்சி இடம் பெயர்ந்து ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு என்று பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்று இறுதியில் முள்ளிவாய்க்காலை அடைந்து அங்கிருந்து யுத்தத்தின் இறுதி நாட்களின் அவலங்களில் சிக்கியிருந்த பின்பே இராணுவத்தினரிடம் தஞ்சமடைந்ததாகத் தெரிவிக்கின்றார்கள். மிகமோசமாக அழிந்துள்ள நெடுங்கேணி பிரதேசத்திற்கு மின்விநியோகத்தை ஏற்படுத்துவது தொடக்கம் அடிப்படையான பொது வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கை களை எடுத்திருப்பதாக பிரதேச செயலாளர் கே.பரந்தாமன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின ரிடம் தெரிவித்தார். உட்கட்டமைப்பு வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

இதனைக் கேட்டறிந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன், "இவ்வாறான அபிவிருத்திப் பணிகளைச் செய்யும் அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகப் பயன்படக்கூடிய உடனடித்தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய வேலைகளையும் செய்ய வேண்டும். அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக இருக்கும் அவர்களைத் தூக்கி நிறுத்த வேண்டியது அனைவரதும் பொறுப்பாக இருக்கின்றது. இது இப்போது மிகமிக முக்கியமானது. மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தொழில் செய்ய வேண்டும். தொழில் செய்து அவர்கள் தமது சொந்தக்கால்களில் நிற்க வேண்டும். அடிப்படைத் தேவைகளில் இது மிகமிக முக்கியமானது. அரசாங்கத் திட்டமிடல்களில் இது அதிகமாக உள்வாங்கப்படுவதில்லை. மக்களை விட்டுவிட்டு, வீதிகளை அமைப்பதிலும், பாடசாலைகளைக் கட்டுவதிலும் மாத்திரம் கவனம் செலுத்துவதனால் மக்களின் முன்னேற்றத்திற்கான உடனடி செயற்பாடுகள் முடங்கிவிடுகின்றன. எனவே இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். இறுதிகட்ட போரின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதும், 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வேரோடு பிடுங்கியதுபோல, வெறும் கையோடு, முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைத்திருப்பதும் சாதாரண விடயமல்ல. இது மிகத் தீவிரமாக உற்று நோக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகளை நன்கு திட்டமிட்ட முறையில் செயற்படுத்த வேண்டும். அப்போதுதான் மக்கள் பயனடைவார்கள்" எனக் குறிப்பிட்டார்.

இறுதி யுத்தத்தின் போது, இராணுவத்தினரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்ற பொதுமக்கள் 3 லட்சம் பெரும் வவுனியா செட்டிகுளம் மனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். அங்கு பலத்த இராணுவ பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. போர்ப்பிரதேசத்தில் இருந்து தப்பி வந்தவர்களில் விடுதலைப்புலி உறுப்பினர் களும் இருப்பார்கள். அதனால் தான் நாங்கள் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றோம் என்று அப்போது அரசாங்கம் தெரிவித்தது. அதுமட்டுமல்லாமல் மே மாதம் யுத்தம் முடிந்ததைத் தொடர்ந்து சுமார் 7 மாத காலத்தில் - கடந்த வருடம் டிசம்பர் மாத முடிவுக்குள் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி விடுவோம் என்றும் அரசாங்கம் பகிரங்கமாக உறுதியளித்திருந்தது. ஆயினும் அந்த உறுதிமொழியின்படி காரியங்கள் நடைபெறவில்லை. மீள்குடியேற்ற நடவடிக்கைகள் காலத்திற்குக் காலம், நேரத்திற்கு நேரம் மிக வேகமாகவும் அதே போன்று சிலசமயங்களில் நத்தை வேகத்திலும் மேற்கொள்ளப்பட்டது. மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இன்னும் தொடர்கின்றன. மனிக்பாம் முகாமில் இன்னும் சுமார் 65 ஆயிரம் மக்கள் மீள்குடியேற்றப்படுவதற்காகக் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னதாக நன்கு திட்டமிட்ட ஓர் ஒழுங்கில் நடைபெறுவதாகத் தெரியவில்லை. இந்தச் செயற்பாடுகளில் இராணுவமும், அரச

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

STATE FARM INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# குரு என்பவர் உயிருள்ள வரைபடம்



சத்குரு வாசுதேவ்

**“நீங்கள் உலகில் வாழ வேண்டுமேயானால் உங்களுக்கு நம்பிக்கை வேண்டும். இப்போது விழிப்புணர்வில்லாத நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ”**

நீங்கள் கேதார்நாத்திற்குப் போக விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். யாரோ வாகனத்தை ஓட்டிச் செல்கிறார்கள். சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. நீங்கள் தனியாக வந்திருந்து, சரியான வழிகாட்டுதல் இல்லாத பட்சத்தில் என்னிடம் ஒரு வரைபடம் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று யோசித்திருப்பீர்கள். ஒருவகையில் பார்த்தால், குரு என்பவர் ஒரு வரைபடம் தான். உயிருள்ள வரைபடம். இந்த வரைபடத்தை உங்களால் வாசிக்கத் தெரிந்தால் உங்களுக்கு வழி தெரியும். நீங்கள் பயணம் போகலாம். உங்கள் குரு உங்கள் வாகன ஓட்டுநர் போலவும் இருக்கலாம். நீங்கள் ஏறி அமர்ந்து ஒரு தூக்கம் போட்டால் அவர் உங்களை கேதார்நாத்தில் போய் இறக்கிவிடுவார். ஆனால் அந்தப் பயணத்தின் போது தூங்குவதற்கோ, மகிழ்ச்சியாக அந்தப் பயணத்தை செய்வதற்கோ, பேருந்து ஓட்டுநர் மேல் உங்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். ஒவ்வொரு சாலை வளவுகளிலும் ‘இந்த மனிதர் என்னைக் கொன்று விடுவாரா? எங்கேயாவது போய் மோதிவிடுவாரா? என்னைக் கொல்ல வேண்டும் என்ற நோக்கம் இவருக்கு இருக்கிறதா?’ என்ற கேள்விகள் எல்லாம் உங்களுக்கு வந்து கொண்டேயிருந்தால் உங்களுக்கு பைத்தியம் தான் பிடிக்கும். நாம் நம்பிக்கையைப் பற்றி ஏன் பேசுகிறோம் என்றால் ஒரு குருவுக்கு உங்கள் நம்பிக்கை வேண்டுமென்று இல்லை. நம்பிக்கையில்லையென்றால் உங்களை நீங்களே பைத்தியமாக்கிக் கொள்வீர்கள். இது ஆன்மீகப் பயணத்திற்கு மட்டுமல்ல. இந்த உலகத்தில் வாழ்வதற்கே உங்களுக்கு நம்பிக்கை வேண்டும். இப்போது விழிப்புணர்வு இல்லாத நிலையில் உங்கள் நம்பிக்கை செயல்படுகிறது. நீங்கள் ஒரு பேருந்தில் அமர்ந்திருக்கிறீர்கள். அது வேறு ஒன்றுமில்லை. வெவ்வேறு உலகங்கள், உலோகங்கள் மற்றும் முழுக்குகிற பொருட்களின் தொகுப்புதான். விழிப்புணர்வில்லாமலே இந்த வாகனத்தை நீங்கள் நம்புகிறீர்கள். நட்டுக்களும், போல்ட்டுகளும், வயர்களும் மட்டுமே இருக்கிற இந்த கூட்டமைப்பை இவ்வளவு நம்புகிறீர்கள். விழிப்புணர்வு இல்லாமலே நீங்கள் நம்புகிறீர்கள். இதே நம்பிக்கை, விழிப்புணர்வோடு எழுமென்றால் பல அதிசயங்கள் நிகழ்வதைப் நீங்கள் பார்ப்பீர்கள். நம்பிக்கை என்றால் வாழ்வின் புதிய விஷயங்கள் எதையும் நான் சொல்லவில்லை. ஒவ்வொரு விநாடியும் மூச்சுக் காற்றை உள்ளிழுக்கவும், வெளிவிடவும் உங்களுக்கு நம்பிக்கை தேவைப்படுகிறது. உங்கள் நம்பிக்கை விழிப்புணர்வு இல்லாத நிலையில் இருக்கிறது. உங்கள் நம்பிக்கையில் மேலும் கொஞ்சம் விழிப்புணர்வைக் கொண்டுவருமாறு கேட்கிறேன். வாழ்க்கை என்பதே நம்பிக்கைதான். அது இல்லாத பட்சத்தில் நீங்கள் யாரும் இருக்க இயலாது. எனவே, உங்கள் வரைபடத்தை நீங்களே வரைந்து கொண்டு, உங்கள் பேருந்தை நீங்களே ஓட்டிச் கொண்டு போக முடியுமென்றால் அது மிகவும் நல்லது. ஆனால் முன்பின் தெரி யாத பாதையில் ஒரு வரைபடம் இல்லாமல் போவீர்களேயானால், சென்றடைய வேண்டிய இடத்திற்குச் செல்ல பல பிறவிகள் தேவைப்படும். கையில் ஒரு வரைபடமிருந்தால் அதை எளிதில் நீங்கள் கடந்து போவீர்கள்.

ஒரு நல்ல வாகன ஓட்டுநருடன் நீங்கள் போனால் மிக விரைவாகப் போவீர்கள். இதுதான் வித்தியாசம். நீங்களாகப் போக முடியாது என்றில்லை. அதற்கு எவ்வளவு காலம் ஆகுமென்று உங்களுக்குத் தெரியாது. அதுதான் வித்தியாசம்.


## Inner Engineering Program

Date: **August 11th to 17th**

Location: **Toronto Botanical Garden,**
777 Lawrence Avenue East ,
(Lawrence & Leslie intersection), Toronto, ON M3C 1P2 - Canada

Free Introductory talk on August 11th at 6:30pm to 7:30pm
ALL ARE WELCOME

Session Info: **Morning Session : 9:30 am to 12:30 pm** OR
**Evening Session: 6:30 pm to 9:30 pm**

Website: www.ishafoundation.org / www.ishayoga.org

Email: toronto@ishafoundation.org Phone: 1-866-424 - ISHA (4742)





# HOMELIFE/GTA Realty Inc., Brokerage*

Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:*seelansiva@gmail.com*
*Web:www.sivahomes.com*

Uthayan Aiyadurai
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com



**“THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS”**

IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME

**HERE IS YOUR CHANCE TO WIN**




$149,900



Neilson/Mclevin
2 Bedroom 2 washrooms Condominium
Gorgeous Laminate Flooring In Living, Dining And Bedrooms

$1,500




Markham/14th Ave.
Excellent Opportunity! New Town Square Located At The High Traffic Intersection. Super High Density Area Surrounded By Commercial & Residential Areas

$229,900



Neilson/Mclevin
3 Bedroom, 2 Bath
Gleam Parquet Laminate Floor Throughout
New Window (2009), New Roof (2010), ,




1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3 Bus:(416)321-6969
*Independently Owned and Operated
*Some Conditions Apply
This is not intended to solicit properties currently listed for sale.

# தமிழ் மக்களுக்கென தகுதிவாய்ந்த அரசியில் தலைமை தலையெடுக்குமா?

இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தாங்களே என விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தி யிருந்தார்கள். ஓர் இனத்தின் அரசியல் விடுதலைக்காக இத்தகைய சர்வாதிகார அரசியல் இராணுவப்போக்கு ஒரு கால கட்டத்தில் அவசியமாக இருந்தாலும் கூட, விடுதலைப்புலிகளின் இந்த அரசியல் சாணக்கியம் அவர்களால் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தத் தவறிவிட்டது. இந்தத் தோல்விக்குப் பல்வேறு காரணங் களைப் பலரும் கற்பிக்கலாம். ஆனால் போரினால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வந்த தமிழ் மக்கள் இன்று தகுதிவாய்ந்த ஓர் அரசியல் தலைமையின்றி தவிக்க வேண்டிய ஓர் அவல நிலைமைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். இதுதான் இன்றைய யதார்த்தம்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் அரசி யல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே ஆயுதமேந்திப் போராடினார்கள். ஏனைய தமிழ்க்குழுக்களும் அவ்வாறே போராட்டத் தில் தம்மை இணைத்துக் கொண்டிருந்தன. ஆயினும், இந்த விடுதலைப் போராட்டத்தின் போக்கு, முன்னேற்றம் என்பவற்றினால் எழுந்த தேசிய மட்டத்திலான மற்றும் பிராந்திய மட்டத்திலான அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள் தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தரமான, அதிகார பலமுள்ள அரசியல் தலைமைகளை அல்லது ஓர் அரசியல் தலைமையை உருவாக்குவதற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்தவில்லை.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் பலமுள்ள ஒரு சக்தியாக விளங்கினார்கள். இதில் சந்தேகமில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கத்தக்க வகையில், அந்த அரசாங்கத்தின் சுதந்திரமான அரசியல் போக்குகளை தடுக்கவும் பல சந்தர்ப்பங்களில் அவற்றை வளைத்து திசை திருப்பவும் கூடிய செயற்திறன் மிக்கவர் களாகத் திகழ்ந்தார்கள். அவர்களின் துணிவும், இராணுவ வழிமுறையிலான வீரமும், தீரமும் இலங்கை அரசாங்கத்திற்குப் பெரும் சவாலாக இருந்தன. வலிமை மிகுந்த ஓர் இராணுவ முகம் அவர்களிடம் இருந்ததே யொழிய, இராஜதந்திரம் மிக்க, அரசியல் ரீதியான பலம் வாய்ந்த ஒரு முகம் அவர்களிடம் இருக்கவில்லை. இது இலங்கைத் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி களாகத் திகழ்ந்த விடுதலைப் புலிகளினால் விடப்பட்ட ஒரு பெரிய அரசியல் தவறாகவே பார்க்கப்படுகின்றது.

இராணுவ பலமுள்ளவர்களாக விடுதலைப் புலிகள் திகழ்ந்த வேளை, தமிழ் அரசியல் தலைமைகள் அல்லது மிதவாத தமிழ் அரசி யல் தலைவர்கள், அரசியல் ரீதியாகச் செயற்பட்டிருந்தால் இன்றைய அரசியல் அவல நிலைமை இல்லாமல் போயிருக்குமா? இது இயல்பாகவே எழுகின்ற ஒரு கேள்வி. ஆயினும் இதற்கு சாதகமான பதில் இல்லை. அவ்வாறான ஓர் அரசியல் தலைமை வேறாகச் செயற்பட்டிருந்தாலும்கூட, இன்றைய அரசியல் தலைமை வெற்றிடம் ஏற்பட்டிருக்கவே செய்யும். இதனைத் தவிர்த்திருக்க முடியாது. அப்படியானால் என்ன செய்யப்பட்டிருக்க வேண்டும்? தமிழ் மக்களுக்கான அரசியல் போராட்டத்தை முழுமையாகப் பொறுப்பேற்று, அதனை முன்னின்று வழிநடத்திய விடுதலைப் புலிகள் இராணுவ பலத்தை அதிகரித்ததைப் போலவே, அரசியல் பலத்தையும் இராஜதந்திர ரீதியில் வளர்த்தெடுத் திருந்திருக்க வேண்டும். இராணுவ ரீதியாக விடுதலைப் போராட்டத்தை நகர்த்திச் சென்ற விடுதலைப் புலிகள் அதற்கு சமாந்தரமான, அதற்கு வலு சேர்க்கத்தக்க வகையிலான ஓர் அரசியல் தலைமையையும் அவர்கள் உருவாக்கி வழிநடத்திச் சென்றிருக்க வேண்டும்.



'மிதவாத அரசியல் தலைவர்கள் ஊரிலொரு பேச்சும், கொழும்பில் ஒரு பேச்சுமாக இரட்டை வேடம் போட்டுத் திரிந்தார்கள். அவர்களுக்கு இரண்டு முகங்கள். ஊரிலொரு முகம் கொழும்புக்குச் சென்றதும் அங்கு ஒரு முகம் என இரட்டை வேடம் போட்டுத் திரிந்தார்கள்" என்பது ஆரம்ப காலங்களில் ஆயுதக்குழுக்களின் குற்றச்சாட்டாக இருந்தது. இதனால், அரசியல் தலைவர்கள் பலரின் செயற்பாடுகள் விடுதலைப் போராட்டத்திற்கு விரோதமான, துரோகத் தனமான செயற்பாடாகக் கருதப்பட்டது. இதனால் பலருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. சில அரசியல் தலைவர்கள் உண்மையாகவே, விடுதலைப் போராட்டத் திற்கு விரோதமான செயற்பாடுகளைச் செய்திருக்கலாம். அதனை மறுப்பதற்கில்லை.

ஆயினும் காலச்சக்கரம் சுழன்றபோது, விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டபோது, வலுவான அரசியல் காரணங்களுக்காக அவர்கள் ஊரிலொரு கருத்தையும் பேச்சுவார்த்தைகளின்போது வேறு ஒரு கருத்தையும் வெளிப்படுத்த வேண்டிய கட்டாய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள் என்பதை வரலாறு சொல்கின்றது. எனவே, தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் திகழ்ந்த விடுதலைப் புலிகள் இராணுவ தலைமைக்கு மாற்றீடாக ஒரு வலுவான மக்கள் நம்பிக்கை வைத்துத் தங்கியிருக்கத்தக்க வகையிலான ஓர் அரசி யல் தலைமையை உருவாக்கிச் செயற்பட்டிருக்க வேண்டும். அல்லது அதற்கென உறுதியான ஓர் அடித்தளத்தை யாவது இட்டிருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் ஓர் அரசியல் முகமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒரு காலகட்டத்தில் திகழ்ந்ததை அனைவரும் அறிவார்கள். இந்தக் கருத்து சரியான கருத்தல்ல. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்பது விடுதலைப் புலிகளின் அரசியல் முகமல்ல என பலர் வாதிடலாம். அதிலும் நியாயம் இருக்கவே செய்கின்றது. ஆனால், தமிழ் மக்களினால் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டிருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் சுதந்திரமாகச் செயற்பட வில்லை என்ற உண்மையை எவராலும் மறுக்க முடியாது.

கடந்த 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பிலான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் விடுதலைப் புலிகள் பெரும் பங்களிப்பைச் செய்திருந்தார்கள். அவர்களால் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் பலர் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார்கள். யாழ் மாவட்டத்திலிருந்து எஸ்.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பர நாதன், எஸ்.கனகசபை, எஸ்.கனகரட்னம், சிவநாதன் கிஷோர், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, ப.அரியநேந்திரன் ஆகியோர் அவர்களில் சிலராவார்கள்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இலங்கை நாடாளுமன்றத்தில் இடம்பெறப்போகின்றவர் கள் எத்தகையவர்களாக இருக்க வேண்டும் என்பதில் சிறப்பான கவனம் செலுத்தப்பட்டி ருக்க வேண்டும். 2004 ஆம் ஆண்டின் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் களை உற்று நோக்கினால் இத்தகைய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகப் புலனாகும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில், இலங்கை நாடாளுமன்றத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. தேர்தல்களிலும் அவர்களுக்கு அக்கறை இல்லை. ஆனால், தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை நியமிப்பதில் மாத்திரம் அக்கறை இருந்தது. இது ஏன் என்பதை விட அந்த வேளையில் விடுதலைப் புலிகள் தரப்பில் இந்த வேட்பாளர்கள் பற்றி, பொதுத் தேர்தலில் அக்கறை கொண்டவர்கள் வினவினார்கள். 'இந்தத் தேர்தல்களில் எல்லாம் எங்களுக்கு நம்பிக்கையில்லை. சிறிலங்காவின் தேர்தலைக் கொச்சைப்படுத்துவதே எங்கள் நோக்கம்' என்பதுதான் விடுதலைப் புலிகளின் பதிலாக இருந்தது.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தமட்டில் அப்போதைய சூழ்நிலையில் அது சரியான நிலைப்பாடாக இருந்திருக்கலாம். ஆனால், இலங்கையின் பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் தமிழ் மக்களினால் நாடாளு மன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பிர-திநிதிகள்தான் உலகத்தின் பார்வையிலும், சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளின் பார்வையிலும். தென்னிலங்கையில் உள்ள சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் உட் பட்ட அனைத்து அரசியல் தலைவர்களினா

தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# வெற்றி பெறப்போவது யார்?

## விளையாட்டுத் தகவல்கள் 285

அணியை எதிர்த்து பரகுவே அணியும் கால் இறுதி ஆட்டத்தில் களமிறங்குகின்றன. 2008 யூரோ கிண்ணத்தை வென்றெடுத்த ஸ்பெயின் அணி சார்பாக 28 வயதுடைய யூரோ கிண்ணத்தில் அதிக கோல்களை போட்ட David Villa, இம்முறை உலகக்கிண்ண போட்டிகளிலும் 4 கோல்களை போட்டு அஜன்ரீனாவைச் சேர்ந்த Gonzallo வுடன் Golden Shoes விருதுக்கு முன்னிலையில் உள்ளனர்.

பொறுத்திருந்து பார்ப்போம். இம்முறை அசத்தபோவது யார்?

முல்லர் அபாரம் காலிறுதியில் ஜெர்மனி உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் 3-வது காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ஜெர்மனி 4-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. ஜெர்மனியின் தாமஸ் முல்லர் அபாரமாக ஆடி இரு கோல்களை அடித்து வெற்றியை எளிதாக்கினார்.

நடைபெற்ற ஆட்டத்தில் ஜெர்மனிக்கு எந்த சிரமமும் கொடுக்காமல் 4-1 என்ற கோல் கணக்கில் தோல்வி கண்ட இங்கிலாந்து உலகக் கிண்ணத்தை விட்டு வெளியேறியது. ஜெர்மனி கால் இறுதி போட்டிக்கு முன்னேறியது. உலகக் கிண்ண உதைப்பந் தாட்ட போட்டியில் புளுயம்பான்டைன் நகரில் நடைபெற்ற போட்டியில் ஐரோப்பாவின்

**இதுவரை நடைபெற்ற போட்டிகளின் விபரம்**

| நடைபெற்ற ஆண்டு | போட்டி இடம் பெற்ற நாடு | வெற்றிபெற்ற நாடு |
|---|---|---|
| 1930 | உருகுவே | உருகுவே |
| 1934 | இத்தாலி | இத்தாலி |
| 1938 | பிரான்ஸ் | இத்தாலி |
| 1942 இரண்டாம் உலகமகாயுத்தம் காரணமாக போட்டி இடம்பெறவில்லை | | |
| 1946 | | |
| 1950 | பிரேசில் | உருகுவே |
| 1954 | சுவிற்சலாந்து | ஜேர்மனி |
| 1958 | சுவீடன் | பிரேசில் |
| 1962 | சிலி | பிரேசில் |
| 1966 | இங்கிலாந்து | இங்கிலாந்து |
| 1970 | மெக்சிக்கோ | பிரேசில் |
| 1974 | ஜேர்மனி | ஜேர்மனி |
| 1978 | ஆர்ஜன்ரீனா | ஆர்ஜன்ரீனா |
| 1982 | ஸ்பெயின் | இத்தாலி |
| 1986 | மெக்சிக்கோ | ஆர்ஜன்ரீனா |
| 1990 | இத்தாலி | ஜெர்மனி |
| 1994 | அமெரிக்கா | பிரேசில் |
| 1998 | பிரான்ஸ் | பிரான்ஸ் |
| 2002 | கொரியா, ஜப்பான் | பிரேசில் |
| 2006 | ஜேர்மனி | இத்தாலி |

வலுவான அணிகளான ஜெர்மனி, இங்கிலாந்து அணிகள் மோதின.

சுலோவேனியா அணிக்கு எதிராக விளையாடிய இங்கிலாந்து அணியின் அதே 11 வீரர்கள் இந்த போட்டியிலும் களம் இறங்கினர்கள். செர்பியாவுக்கு எதிரான போட்டியில் ஜெர்மனி ஸ்டிரைக்கர், குளோஸ் சிவப்பு அட்டை பெற்றதால், அவருக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து முதல் சுற்றில், கானாவுக்கு எதிரான கடைசி லீக் ஆட்டத்தில் குளோஸ் களம் இறங்கவில்லை.



தடை முடிந்ததும் இங்கிலாந்துக்கு எதிராக அவர் களம் இறங்கினார். அது மட்டுமல்லாமல், இந்த போட்டியில் முதல் கோலை அடித்து ஜெர்மனியின் கோல் கணக்கை துவக்கவும் செய்தார். ஜெர்மனி கோல்கீப்பர் நியூவர் அடித்த பந்து குளோசுக்கு பாசாக கிடைத்தது. மாத்யூ அப்சன் மட்டுமே அப்போது இங்கிலாந்தின் பின்களத்தில் இருந்தார். அவரை எளிதாக கடந்த குளோஸ் அற்புதமாக கோலாக மாற்றினார்.

20ஆவது நிமிடத்தில் அடிக்கப்பட்ட ஜெர்மனியின் முதல் கோல் இது. தொடர்ந்து 32ஆவது நிமிடத்தில் முல்லர் கொடுத்த பாசை பெற்ற புடோஸ்கி ஜெர்மனிக்கான இரண்டாவது கோலை அடிக்க இங்கிலாந்து வீரர்கள் அதிர்ச்சியடைந்தனர். ஆனாலும் போராடிய இங்கிலாந்து 37ஆவது நிமிடத்தில் பதில் கோல் திருப்பியது. ஸ்டீவன் ஜெரார்டு அடித்த "ப்ரீகிக்"கை தலையால் முட்டி அப்சன் இந்த கோலை அடித்தார்.

முதல் பாதி ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் பிராங்க் லேம்பர்டு அடித்த பந்து கோல்கம்பத்தில் மோதி எல்லைக் கோட்டை தாண்டி தரையில் குத்தியது. ஆனால் அதனை உருகுவே நாட்டு நடுவர் ஜார்ஜ் லோரியான்டோ கோல் என்று அறிவிக்காதது இங்கிலாந்தின் துரதிர் ஷ்டமே. இதற்காகத்தான் பல நாடுகள் எல்லைக் கோட்டை பகுதியில் அறவியலை பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றன. ஆனால் "பிபா" அதை கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் இங்கிலாந்து கோல் அடிக்கும் முயற்சியில் இறங்கி தடுப்பாட்டத்தில் கோட்டை விட்டது. இங்கிலாந்து வீரர்கள் கையில்தான் பெரும்பகுதி நேரம் பந்து இருந்தது. பல வாய்ப்புகளும் அந்த அணிக்கு கிடைத்தன. ஜெர்மனி கம்பத்தில் கோலாக தவறிய பந்துகள் அதே வேகத்தில் இங்கிலாந்தின் முன்களத்திற்கு வந்தது.

அந்த சமயத்தில் இங்கிலாந்து பின்களத்தில் இரு தடுப்பாட்டக்காரர்களே இருந்தனர். பிற இங்கிலாந்து வீரர்கள் பின்களத்திற்கு வருவதற்கு முன் அவை கோல்களாக மாறின. அப்படிதான் பிற்பாதியின் 67 மற்றும் 70வது நிமிடங்களில் ஜெர்மனியின் இளம் வீரர் தாமஸ் முல்லர் இரு கோல்களை அடித்தார்.

தாக்குதல் ஆட்டத்தை நம்பி தடுப்பாட்டத்தில் கோட்டை விட்டதால் வந்த விளைவு இது. தொடர்ச்சியான இரு கோல்கள் வாங்கிய இங்கிலாந்து வீரர்கள் சோர்வடைந்தனர். ஆட்ட நேர இறுதியில் ஜெர்மனி 4-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று கால் இறுதிக்கு முன்னேறியது.

சிலியை வென்றதால் தப்பியது ஸ்பெயின் உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் 2-1 என்ற கோல் கணக்கில் சிலியை வென்றதன் மூலம் 6 புள்ளிகளுடன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றது. 3-வது ஆட்டத்தில் ஸ்பெயினிடம் சிலி தோல்விடைந்தாலும் ஏற்கெனவே 2 ஆட்டங்களில் வென்றிருந்ததால் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதிபெற்றது.

வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கிய ஸ்பெயின் அணிக்கு ஆட்டத்தின் 24-வது நிமிடத்தில் டேவிட் வில்லா கோல் அடித்தார். ஆட்டத்தின் 37-வது நிமிடத்தில் ஸ்பெயினின் ஆண்ட்ரேஸ் இனியெஸ்டா கோல் அடித்தார். இதனால் முதல் பாதி ஆட்டத்தின் முடிவில் ஸ்பெயின் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சிலி அபாரமாக ஆடி ஆட்டத்தை தன் வசம் திருப்பியது. இதனால் ஆட்டத்தின் 47-வது நிமிடத்தில் அந்த அணிக்கு கோல் கிடைத்தது. இந்த கோலை அந்த அணியின் ரோடிகோ மில்லர் அடித்தார். பின்னர் இரு அணிகளும் கடைசி வரை போராடியும் கோல் போட இயலவில்லை. இறுதியில் ஸ்பெயின் 2-1 என்ற கோல்கள் கணக்கில் சிலியை வீழ்த்தியது. எச் பிரிவிலிருந்து ஸ்பெயின் மற்றும் சிலி அணிகள் தலா 6 புள்ளிகளுடன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறின.

ஸ்விட்சர்லாந்து, ஹோண்டுராஸ் வெளியேற்றம்: ஸ்விட்சர்லாந்து-ஹோண்டுராஸ் அணிகள் மோதிய மற்றொரு ஆட்டம் இரு அணிகளுக் கும் கோல் கிடைக்காததால் டிராவில் முடிவடைந்தது. இதனால் ஸ்விட்சர்லாந்து 4 புள்ளிகளுடனும், ஹோண்டுராஸ் 1 புள்ளியுடனும் போட்டியிலிருந்து வெளியேறின.

### டிரா செய்து முன்னேறிய பிரேசில், போர்ச்சுகல்

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பிரேசில், போர்ச்சுகல் அணிகள் கோலே போடாமல் டிரா செய்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறின.

ஐவரிகோஸ்ட் அணி வெற்றியுடனும், வடகொரியா தோல்வியுடனும் போட்டியிலிருந்து வெளியேறின. ஜி பிரிவில் பலம் வாய்ந்த அணிகளாக கருதப்படும் பிரேசிலும், போர்ச்சுகலும் நடைபெற்ற ஆட்டத்தில் களம் கண்டன. கடந்த ஆட்டத்தில் வடகொரியாவுடன் போராடி வென்ற பிரேசில், வடகொரியாவுக்கு எதிராக கோல் மழை (7) பொழிந்த போர்ச்சுகல் அணியுடனான ஆட்டத்தை கவனமாக கையாண்டது.

பிரேசில் அணியின் முன்னணி வீரர் காகா, ரெட் கார்டு பெற்றதால் இந்த ஆட்டத்தில் விளையாட தடைவிதிக்கப்பட்டதும் அந்த அணிக்கு சற்று பின்னடைவை ஏற்படுத்தியது. ஆனால் இரு அணிகளும் சமபலத்துடன் ஆடியதால் கடுமையாகப் போராடியும் கடைசி வரை இரு அணிகளுக்கும் கோல் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் ஆட்டம் டிராவில் முடிந்தது. இதன்மூலம் பிரேசில் 7 புள்ளிகளுடன், போர்ச்சுகல் 5 புள்ளிகளுடனும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறின.

வெளியேறிய ஐவரிகோஸ்ட், வடகொரியா: ஐவரிகோஸ்ட்-வடகொரியா அணிகள் மோதிய மற்றொரு ஆட்டத்தில் 3-0 என்ற கணக்கில் ஐவரிகோஸ்ட் வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் ஐவரிகோஸ்ட் வெற்றிபெற்றும் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாமல் போனது. 4 புள்ளிகள் பெற்ற ஐவரிகோஸ்டும், அனைத்து ஆட்டங்களிலும் தோல்வியடைந்த வடகொரியாவும் போட்டியிலிருந்து வெளியேறின.

### இத்தாலியை வெளியேற்றியது ஸ்லோவேகியா (3-2)

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்லோவேகியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 3-2 என்ற கோல் கணக்கில் தோற்று இத்தாலி வெளியேறியது. இத்தாலியை வென்றதன் மூலம் 4 புள்ளிகளுடன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு ஸ்லோவேகியா முன்னேறியது. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் 23-வது நிமிடத்தில் ஸ்லோவேகியாவின் ராபர்ட் 25 மற்றும் 73-வது நிமிடங்களில் கோல் அடித்தார். 81-வது நிமிடத்தில் இத்தாலி வீரர் அன்டோனியோ கோல் அடித்தார். 89-வது நிமிடத்தில் ஸ்லோவேகியாவின் காமிலும், 90-வது நிமிடத்தில் இத்தாலி வீரர் பேபியோவும் கோல் அடித்தனர். இறுதியில் 3-2 என்ற கணக்கில் ஸ்லோவேகியா வெற்றி பெற்றது. இதன்மூலம் எ.்ப் பிரிவில்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# ஆதன வியாபாரத்தில் இணைந்த வரி

### HST - Harmonized Sales Tax

கனடிய பிறந்த தினமாகிய யூலை 01ஆம் திகதி (July 01, 2010)யிலிருந்து 13% பெறுமதியான இணைந்த வரி ஒன்ராரியோ வில் ஆரம்பிக்க இருக்கின்றது. இந்த இணைந்த வரியானது, ஏற்கனவே நடைமுறையிலிருந்த GST மற்றும் PST ஐ சேர்த்த வரியாக இருக்கும் எனக் கொள்ளலாம். ஆதனவியாபாரத்தில் இவ்வரி எவ்வாறு அறவிடப்படும் என்பதனைப்பற்றிப் பார்ப்போம்.

**1. அடமானக் கடன் பெறுவதற்கான செலவு** (Mortgage Fee) (No - HST)
ஒருவர் அடமான நிறுவனத்தைப் பாவித்து தமது அடமானக் கடனைப் பெற்றால் அதற்குரிய செலவிற்கு HST அறவிடப்பட மாட்டாது. (அடமானக் கடனிற்குரிய சேவை, நிதி நிறுவனத்துடன் தொடர்புள்ள சேவை என்பதால் விதி விலக்கு கொடுக்கப்பட்டுள்ளது.)

**2. ஆதனத்திற்கான தரகுச் செலவு** (Real Estae Commission) (Yes - HST)
யூலை 01, ஆந்திகதிக்கு பிற்பாடாக ஆதனம் விற்றல் வாங்கலிற்குரிய சேவைக்கு HST அறவிடப்படும். இருந்தபோதிலும், இந்த அறவிடப்படும் தொகையானது ஆரம்ப காலத்தில் வேறுபடும். அதாவது அறவிடப்படும் முறை வேறுபடும்.

வாங்கல், விற்றல் பத்திரம், யூலை 01, 2010 இற்கு முன்பாக ஒப்பமிடப்பட்டு, 90% இற்கு மேலான, சேவைகள் முடிந்திருந்தால் GST மட்டுமே அறவிடப்படும். (அதாவது, Closing Date, July 01, 2010 இற்கு பின்பாக இருந்த போதிலும்) 90% ஆன சேவை யூலை 01, 2010 இற்கு முன்பாக இருந்தால் 5% GST மட்டுமே இற்கு அறவிடப்படும். (இதனை ஆதனம் விற்பவர்கள் எழுத்து மூலம் பெறுவது சிறந்தது)

**3. வாடகையாளர்களின் செலவில்** HST
a. குடியிருப்பவர்களின் வாடகைக்கு (Residential) HST அறவிடப்படமாட்டாது. உதாரணம் வாடகை $1000 எனில் $1000 மட்டுமே உரிமையாளரிற்கு செலுத்த வேண்டும்.
b. தொழில் நிறுவனம், வியாபார நிறுவனம், அலுவலகம் போன்றவற்றிற்குரிய வாடகைக்கு (Industrial, Commercial Retail + Office) HST அறவிடப்படும். அதாவது வாடகை $1000 எனில் உரிமையாளரிற்கு - ($1000 + 13% x 1000)
$1130 செலுத்தவேண்டும்.

***4. Condominium* மாதாந்த கொடுப்பனவு செலவு**
a. Residential Condominium HST அறவிடப்படமாட்டாது.
b. Industrial, Commercial (Reatil), Office. Condominium களிற்கு HST அறவிடப்படும்.

**5. வீட்டுதிருத்த வேலைகள்** (Home Renovations)
திருத்த வேலைகளிற்குரிய தொழிலாளர் ஊதியத்திற்கும் (Labour charge), பாவிக்கப் படும் பொருட்களிற்கும் (Materials) HST அறவிடப்படும்.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 322**

***6. Resale Residential Property***
a. Resale - House / Condominium (கட்டிட நிறுவனங்களிடமிருந்து வாங்குவது தவிர) ஆதனங்களிற்கு HST அறவிடப்படமாட்டாது. (வாங்கும் விலை மட்டும்)
b. Brand New Property
புதிதாக நிர்மாணம் செய்யப்படும், நிறுவனத்திடமிருந்து வாங்கும் ஆதனங்களிற்கு HST அறவிடப்படும்.

குறிப்பு - புதிதாக நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் HST ஐ சில சந்தர்ப்பங்களில் விலைக்குள் உள்ளடக்கி விடும். இருந்த போதிலும், வாங்கல், விற்றல் பத்திரத்தை தகுந்த, அனுபவமிக்க சட்டத்தரணியுடன்

தொடர்ச்சி 26ஆம் பக்கம்


HomeLife GTA Realty Inc., Brokerage

Independently Owned & Operated
"கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது"



1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng
(Broker/Owner)

BUSINESS FOR SALE $64,000



HWY 401 & WESNEY - AJAX
Best location. Over $7,000 weekly sales.
Very reasonable rent.
DON'T MISS THIS CHANCE

HOUSE FOR SALE AURORA 649,000



BAYVIEW & SPRINGFARM
4 Bedrooms,Walkout bsmt
5 Washrooms, double garage
Ceramic floor, Hardwood floor
Stove, dishwasher,exhaust fan,
All included

HOUSE FOR SALE $288,888



DIXIE & FINCH
SOLD
2 Storey detached house, 3 + 1 Bedroom.
2 Renovated Washrooms.
Fridge, Stove, washer, garage door opener & remote

SPACE FOR RENT



MIDDLEFIELD & FINCH
Second Floor Unit In Gta Square Shopping Mall. Conveniet Location.
High Traffic Area & Underground Parking Available.

HOUSE FOR SALE $349,000



MORNINGSIDE & FINCH
SOLD OVER ASKING PRICE
Absolutley Immac...e, Finish... ...e To All facilitie... ...e, Stove, laundry, B/I Di...sher, All Window Covering And Elfs.

CONDO FOR SALE $107,900



SHEPPARED & NEILSON
2 B.rooms, 2 Washrooms.
Why Rent If You Can Own For Less Money?
Close to TTC, mall, library, hwy 401.
Stove, Fridge, B/I Dishwasher,
Parking, Locker

CONDO FOR SALE $214,000



MCCOWAN & STEELES
Luxury Condo. 2 + 1 Bedroom.
Bright, Clean And Well Kept Unit.
Huge Living & Dining. Fridge, Stove, Dishwasher, Laundry.
Walk To TTC, School,Shopping,Library.

CONDO FOR SALE $139,000



FINCH & WARDEN
2 + 1 Bedroom, 2 washrooms.
Close To Bridlewood Mall, TTC.
Fridge, Stove, Washer, Dryer,
All Elfs, Parking.

HOUSE FOR SALE $565,000



BUR OAK & 9TH LINE
Popular 4 Br + Den, Madison Home In Greensborough Area, 2709 Sq Ft.
2nd Floor Den, Master Bedroom,
Convenient Location. Fridge, Stove, Washer, Dryer, Built-In Dishwasher, Cac, Cvac, Garage

HOUSE FOR SALE &369,500
LAWRENCE & WARDEN
3 + 1 Bedrooms Large Eat-In Kitchen,
Finished Basement, Seperate Side Entrance.
Renovated Home In Disirable, Wexford Community!!
Existing Appliances Fridge, Stove(2),
Washer, Dryer, Californid Shutter.

STORE FOR SALE 64,900 + STOCK



HIGHWAY 401 & WESTNEY
Con/ Store In Good Area Of Ajax.
Lotto Commission And Atm Commission
Over $2000/Month. Steady Custumer Traffic.
All Chattels And Equipment As Is.



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*

# உங்கள் வீடு தேடி தபாலில் வந்து கொண்டிருக்கும் மாகாண அரசின் காசோலை!

## Ontario Sales Tax Transtion Benefit

## கனடிய தகவல் தொடர் 128

ஒன்ராரியோ மாகாண அரசின் பணம் காசோலை வடிவில் உங்கள் இல்லங்களை நோக்கி தபாலில் வந்து கொண்டிருக்கின்றது!

இக்காசோலை உங்கள் கைகளில் கிடைத்துவிட்டதா? 'விற்பனை வரி' என்னும் பெயரில் அரசு அறவிடும் வரிப்பணத்தில் ஒரு சிறு பகுதி தற்போது திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றது.

இதுவரை கைகளில் வந்து சேரவில்லையானால் 2009 ஆம் ஆண்டு வருமானவரி தாக்கல் இதுவரை செய்யவில்லையா? அல்லது காலதாமதமாக செய்தீர்களா? என்பதே கேட்கப்படும் கேள்வி ஆகும். ஏனெனில் 2009 ஆம் ஆண்டு வருமான வரி மதிப்பீடு செய்து 4 - 8 கிழமைக்குள் முதல் காசோலை அனுப்பி வைக்கப்படுகின்றது. அதற்காக இந்த காசோலை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வரும் என்றல்ல.

கடந்த யூன் 10 - 2010 இல் ஆரம்பித்து ஏப்ரல் 30, 2013 க்கு முன்னர் குடும்பமாக இருப்பவருக்கு $1000 உம் தனியாக வசிப்பவர்களுக்கு வருடம் $300 உம் மூன்று பகுதிகளாகப் பிரித்து கொடுக்கப்படும் என்பதே தற்போது மாகாண அரசின் வருமானத்துறை அமைச்சினால் அறிவிக்கப்பட்ட செய்தியாகும்.

**எப்போது கொடுப்பனவு ஆரம்பிக்கும்? அதற்கு என்ன செய்ய வேண்டும்? எவ்வளவு தொகை தபாலில் வந்து சேரும்?**

ஒன்ராரியோ மாகாணத்தில் வசிப்பவர்கள் தங்கள் வருமானவரியினை ஒழுங்காக மனு செய்து, இறுதியாக கடந்த 2009 ஆம் ஆண்டின் வருமானவரியினையும் மனு செய்து விட்டால் மட்டும் போதும். கடந்த மாதத்திலிருந்து யூன், 2010 பண காசோலை தபாலில் வந்து சேர தொடங்கியிருக்கும்.

யூன் 2009 - யூன் 2010 வரை ஒரு வருடமாக கருத்தில் கொள்ளப்பட்டு தனி நபராக இருந்தால் வருடம் $300 டொலரும் குடும்பமாக அல்லது தனி ஒரு பெற்றோராக இருந்து (Single Parent) பிள்ளைகளோடு வசிப்பவராக இருந்தால் வருடம் ஒன்றுக்கு $1000 டொலரும் என இத்தொகை மூன்று பகுதியாக பிரித்து தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

(ஆனால் இங்கு தேறிய வருமானம் என்பது தனிநபராக இருந்தால் வருடம் $80,000 - $82,000 க்கு குறைவாகவும் $160,000 - $166,000 க்குள்ளும் இருத்தல் வேண்டும்)

> “கணவன், மனைவி அல்லது தனித்து இருக்கும் கணவன், மனைவி எவருடனும் எவராவது 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளை ஒன்று இருந்தால் அவர்கள் குடும்பமாக கருதப்படும். இவர்கள் யாவருக்கும் சேர்ந்து வருடம் $1000 டொலர் பெற தகுதியுடையவர்கள் ஆகின்றனர்.”

பணம் வந்து சேரும் மாதம் தனிநபராக இருந்தால் குடும்பத்தினர் அல்லது தனி பெற்றோராக பிள்ளைகளுடன் வாழ்பவர்கள்

| | | |
|---|---|---|
| யூன் 2010 | $100 | $330 |
| டிசம்பர் 2010 | $100 | $335 |
| யூன் 2011 | $100 | $335 |
| **மொத்தம்** | **$300** | **$1000** |

**மாகாண அரசின் இக்காசோலையினை பெற தகுதியுடையவர்கள் யார்?**

- மே 31, 2010 இல் ஒன்ராரியோ மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். (இத்தகைய நிலையில் தனியான நபராக இருந்தால் தனி நபர் என்ற அடிப்படையிலும், குடும்பமாக அல்லது தனி நபர் ஒருவர் குடும்பம் பிரிந்து பிள்ளைகளுடன் இருந்தால் குடும்பமாகவும் கருதப்படும்)
- 2009 ஆம் ஆண்டுக்குரிய வருமானவரி தாக்கல் செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

**மேற்குறிப்பிட்ட நிலையில் இருந்தால் முதல் காசோலை இதுவரை கையில் வந்து சேர்ந்திருக்கும். தொடர்ந்து டிசம்பர் 2010 இல் இரண்டாவது காசோலையினை பெற வேண்டுமானால்**

- நவம்பர் 30, 2010 இல் ஒன்ராரியோ மாகாணத்தில் வசித்து இருத்தல் வேண்டும்.
- இதே தினத்தில் 18 வயதினை அடைந்து இருத்தல் வேண்டும்.

**தொடர்ந்து யூன் 2011 இல் மூன்றாவது காசோலையினை பெற வேண்டுமானால்!**

- மே 31 -2011 இல் ஒன்ராரியோ மாகாணத்தில் வசித்து இருத்தல் வேண்டும்.
- 2010 க்குரிய வருமானவரி தாக்கல் செய்திருத்தல் வேண்டும்.

- மே 31-2011 இல் 18வயதினை அடைந்து இருத்தல் வேண்டும்.

அதாவது ஒவ்வொரு தவணை காசோலையினையும் பெறுவதற்கு மேற்குறிப்பிட்ட தகுதிக்குள் இருத்தல் வேண்டும்.

ஒன்ராரியோ மாகாணத்தின் சிறைசாலைக்குள் இருக்கும் சுமார் 1200 சிறை கைதிகளும் கூட இக்காசோலையினை பெறுகின்றார்கள் என மாகாண எதிர்கட்சியான கன்சவேட்டிவ் கட்சி தலைவர் திரு. ரிம் குடாக் (Mr. Tim Hudak) அரசினை குற்றம் சாட்டியிருந்தார். (செய்தி - 'ரொறொன்ரோ ஸ்ரார்' யூன் 15. 2010)

**இச் சலுகையினை பெற தகுதியுடைய தனிநபர் (Single Individual) என கருதப்படுவோர் யாவர்? குடும்பம் எனப்படுவோர் யாவர்?**

- ஒரு வீட்டில் இருக்கும் 18வயதுக்கு மேற்பட்டவர்கள்.
- பிரிந்து அல்லது விவாகரத்து பெற்று இருக்கும் ஒவ்வொரு தனி மனிதர்.
- கணவனை அல்லது மனைவியை இழந்து தனியாக இருப்பவர்கள்.

இவர்கள் யாவரும் இவ்வருமானத்தினை பெறும் தனிமனிதர்கள் என்ற அம்சத்தினுள் உள்ளடக்கப்பட்டு வருடம் $300 டொலர் பெற உரித்துடையவர்கள் ஆவர்.

கணவன், மனைவி அல்லது தனித்து இருக்கும் கணவன், மனைவி எவருடனும் எவராவது 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளை ஒன்று இருந்தால் அவர்கள் குடும்பமாக கருதப்படும். இவர்கள் யாவருக்கும் சேர்ந்து வருடம் $1000 டொலர் பெற தகுதியுடையவர்கள் ஆகின்றனர்.

**அரசு வழங்கும் இவ் இலவச பண வழங்கல் பெறுபவருக்கு வரி செலுத்தும் ஒரு வருமானமாக கருதப்படுமா?**

இது வரியில்லாத ஒரு வருமானம் மாதிரி இருக்கும். எந்தச் சந்தர்ப்பத்திலும் வரி செலுத்த தேவையில்லை.

**சமூக உதவிப்பணம், வேலை யில்லாதோர் காப்புறுதி வருமானம் பெறுபவர்களை ஏதாவது வழியில் இப்பணம் பெறும்போது பாதிக்குமா?**

எந்த வகையிலும் இக்கொடுப்பனவு என்பது சமூக உதவிப்பணம் பெறுபவர்கள், வேலையற்றோர் காப்புறுதியில் பணம் பெறுபவர்களின் வருமானங்களை பாதிக்காது என ஒன்ராரியோ மாகாண வருமானத்துறை அமைச்சின் (Ontario Ministry of Revenue) தகவல் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான
ஆலோசனைகளுக்கு: 416.321.0999

## வெற்றி பெறப்போவது...

06ஆம் பக்கத்தொடர்ச்சி



இரண்டாம் இடம் பெற்று ஸ்லோவேகியா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

## விம்பிள்டன் டென்னிஸ் : பத்து மணி நேரம் தாண்டி சாதனை..!

விம்பிள்டன் டென்னிஸ் வரலாற்றில் புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஜான் இஸ்னர் மற்றும் பிரான்ஸின் நிக்கோலஸ் மஹூத் ஆகியோருக்கு இடையிலான ஒற்றையர் போட்டி பத்து மணி நேரமாகியும் இன்னும் முடியாமல் நீண்டு கொண்டிருக்கிறது. இரு வீரர்களும் 4 செட்கள் ஆடி முடித்த நிலையில், சம நிலையை எட்டினர். இதையடுத்து 5வது செட் ஆட்டம் தொடங்கியது. அதுதான் இன்னும் முடியாமல் இழுத்துக் கொண்டிருக்கிறது. இரு வீரர்களும் சரியாக 10 மணி நேரம் ஆடி முடித்த நிலையில் இரவு கவிழ்ந்ததால், ஆட்டம் நிறுத்தப்பட்டு இன்று தொடரவுள்ளது. 5-வது செட்டில் இருவரும் தலா 59 புள்ளிகளுடன் சம நிலையில் உள்ளனர். இப்படி ஒரு ஆட்டம் இதுவரை நடைபெற்றதில்லை. இனியும் நடைபெறப் போவதில்லை என்று மிகவும் அயர்ச்சியுடன் கூறினார் இஸ்னர். இந்த மாரத்தான் ஆட்டத்தை மைதானம் முழுவதும் ரசிகர்கள் கூட மூச்சு விடக் கூட நேரமில்லாமல் கவனித்தனர்.

இதற்கு முன்பும் இப்படி ஒரு மாரத்தான் போட்டி நடந்தது. 2004 பிரெஞ்சு ஓபன் போட்டியின்போது பிரான்ஸ் வீரர்கள் பேப்ரிஸ் சான்டோரா மற்றும் அர்னாட் கிளெமன்ட் ஆகியோர் ஆறு மணி நேரம் 33 நிமிடங்கள் ஆடி 6-4, 6-3, 6-7, 3-6, 16-14 என்ற செட் கணக்கில் ஆட்டத்தை முடித்தனர்.

இஸ்னரும், மஹூத்தும் ஆடத் தொடங்கினர். நான்கு செட்களை முடித்தபோது மாலை வந்து ஆட்டத்தை நிறுத்தியது. பின்னர் மீண்டும் ஆட்டம் தொடங்கி இன்னும் முடியாமல் போய்க் கொண்டிருக்கிறது. இஸ்னர் முதல் செட்டை 6-4 என்ற கணக்கில் வென்றார். அடுத்த செட்டை 6-3 என்ற கணக்கில் மஹூத் வென்றார். 3-வது செட்டையும் மஹூத்தே 7-6 என்ற கணக்கில் வென்றார். 4-வது செட்டை இஸ்னர் 7-6 (7-3) என்ற கணக்கில் வெல்லவே இழுபறியாகி விட்டது. தற்போது 5-வது செட் யார் வசம் என்பதில் பெரும் இழுபறி நிலவுகிறது. தொடரும் போட்டியைக் காண ராணி எலிசபெத் நேரில் வருகிறாராம். அந்த அளவுக்கு இந்தப் போட்டி இங்கிலாந்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

# வாழ்க்கை கவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Mccowan/Hwy 401**



**$189,900**
Condo Apt, Bed rooms 1, Washrooms 1, 24 Hr Concierge And Security, All Modern Amenities And Close To All Popular Restaurants.

**Brimley/Eglinton**



**$299,000**
Detached Bungalow Bed rooms 3+3, Washrooms 2 Beautiful Bunglow With Sep Enterance. Newly Renovated, Shows Well. Close To Ttc,

**Markham/Eglinton**



**$329,900**
Townhouse 3 Story Bed rooms 3, Washroom 3 Lees Than 6 Years Old No Maintenances Fee Close To School, All Other Amenities.

**Kennedy/Denison**



**$339,000**
Link 2 story, Bed rooms 3+2 Washrooms 2, Steps To Schools,Shops And Malls,Fresh Paint,Interlock Driveway

**Steeles And Markham Rd**



**$369,900**
Townhouse 2 Story Bedrooms 3+1, Washrooms 4, Immaculate Freehold Town Home In Demand Location Finished Basement

**Mccowan/Major Mackenzie**



**$389,000**
Link 2 Story, Bedrooms 3, Wasroom 3 Great School Zone. Hardwood Floors On Main With Matching Oak Staircase

**Hooverpark- 9th Line**



**$393,500**
Detached 2 Story, Bed rooms 3 Washromss 3, Brand New Home Under Construction!10 Min Walk To Go Station! South Facing Yard.

**Markham/Denison**



**$397,500**
Semi Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3 This 5 Yr New Home Has An Enclosed Glass Porch, Double Door Entry

**Bur Oak Ave/Markham Rd**



**$399,000**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Spacious Front Porch, Direct Access From Garage, Close To Schools,,Go Train, Park

**9th Line & 19**



**$399,800**
Detached 2 story, Bed rooms 3 Washrooms 3, 3 Years New, Family Sized Kitchen Has Walkout To Deck, Close To Shopping

**Mccowan/Steeles**



**$419,900**
Link 2 Story, Bedrooms 4+2, Washrooms 4, Separate Entrance To Bsmt. Vacant Property

**Markham Rd/16th**



**$419, 900**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Beautifully Upgraded Home, Fully Fenced Backyard, Gas Fireplace

**Middlefield/Denison**



**$429,900**
Link 2 Story, Bedrooms 3+1, Washrooms 4, Absolutely Well Maintained Home, Prof Finished Basement, Close To Schools And All Amenities.

**Hwy 48/Hoover Park**



**$430,000**
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3, Bright With Lots Of Natural Sunlight, Close To Schools, Shops, And All Amenities

**9th. Line / Castlemore/Bur**



**$445,000**
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3, Upgraded Kitchen, Hardwood Floors Fully Fenced Yard. Access From House To Garage,

**Sheppard/Meadowvale**



**$529,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, 5 1/2 Yr Old Hardwood Floors In Liv/Din Area.Close To All Conveniences, Close To School

**14th Ave & 9th Line**



**$453,000**
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3 Than 3 Years New.Approx 2000Sf, Basement Has Cold Room & 3Pc Rough In Bath

**16th Ave. & 9th Line**



**$499,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Lovely Tile Front Porch, Upgraded Cabinets. All Upgraded Appliances.

**Mccowan/N 16th/Bur Oak**



**$499,900**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3, Modern Kitchen, Fully Fenced Back Yard, Minutes From 24 Hr Sobeys And All Amenities.

**Hoover Park/Sandiford**



**$529,900**
Detached 2 Story Bed rooms 4, Washrooms 3, Loads Of Upgrades Incl. Kitchen Has Solid Maple Cabinets, Beautiful Landscaping Inc

**Port Union / 401**



**$564,900**
Detached 2 Story. Bed rooms 4, Washrooms 4, Almost 3000Sq Ft,Great Location,Custom Interior Design

**Sales of Business**



sale of business with property 2 acres parcel of land Esso Gas station, Country Style drive-thru, restaurant, convenience
**1.3 million dollars**

**Sales of Business**



sale of business with propertyGas station, convenience,Auto repair garage, 3 bedroom bungalow, 30 minutes away from toronto

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# கனடாவில் கலை இலக்கிய முயற்சிகள்

நாள்: 29.11.2009 ஞாயிற்றுக்கிழமை
இடம்: கொழும்புத் தமிழ்ச் சங்கம், வினோதன் மண்டபம்
நிகழ்வு: இலக்கியச் சந்திப்பு
ஏற்பாடு: மகவம் கலைஞர் வட்டம்.
ஆதரவு: புனிதம் நட்புறவுச் சங்கம்
தலைமை: குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதன்

அன்புக்குரிய -
மாயெழு வேல் அமுதன் அவர்களே!
சட்டத்தரணி மகாதேவன் அவர்களே!
திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களே!
திருமதி பத்மா சோமகாந்தன் அவர்களே!
அவையிலுள்ள பெருமக்களே!

சில கூத்துகளிலே தொடக்கத்தில் கட்டியம் கூறப்படுவது வழக்கம். அதுபோல எனது பேச்சையும் ஒரு கட்டியம் கூறித் தொடங்குவது நல்லதென நினைக்கிறேன். நான் இருக்கும் விடுதியிலே என்னை வந்து சந்தித்த முதல் எழுத்தாளர் மாயெழு வேல் அமுதன் அவர்கள்தான். அப்பொழுது இப்படியொரு கூட்டம் ஒழுங்கு செய்யப்போவதாக அவர் கூறி அனுமதி கேட்டார். ஒரு தனிப்பட்ட அலுவல்குறித்து வந்த வருகையைப் பிரபலியப்படுத்த வேண்டாம் என்று சொல்லி மறுத்து விட்டேன். அவரும் அதனை ஏற்றுக்கொண்டவர்போல வேறு பல விடயங்களைப்பற்றித் தலைக்கூடிப் பிரிந்தார்.

அவர் சென்று இரண்டு மணிப் பொழுது கழிந்திருக்கும் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. மறுமுனையில் சட்டத்தரணி கே.வி. மகாதேவன். கூட்டம் உங்களுக்கு



விருப்பமில்லாமல் இருக்கலாம். ஆனால் உங்களைக் காண எங்களுக்கு ஆசையாக இருக்கிறது என்று தொடர்ந்தார். யாருக்கும் மயங்காத பவானியை மயக்கி மனைவியாக்கிக் கொண்ட அவருக்கு என்னை மயக்க அதிக நேரம் பிடிக்கவில்லை.

இப்பொழுது இங்கு எனது பழைய இலக்கிய நண்பர்களையும் உறவினர்களையும் பார்க்கின்றபொழுது இந்த இலக்கிச் சந்திப்பை ஒழுங்குசெய்த மகவம் கலைஞர் வட்டத் தலைவர் மாயெழு வேல் அமுதன் அவர்களுக்கும் அவருக்கு ஆதரவாக இருந்த பெருமக்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

வரவேற்புரை நிகழ்த்திய சட்டத்தரணி மகாதேவன் அவர்களை அவரது வீட்டுக்குச் சென்று சந்திக்க இருந்தேன். இனி அது தேவையில்லாமற் போய்விட்டது. தலைவர் அவர்கள் என்மீது கொண்ட அன்பு காரணமாக என்னைப்பற்றி அதிகமாகவே பேசிவிட்டார். இருந்தாலும் அவரது மனம் நிறைவாகவில்லைப் போலத் தெரிகின்றது. எனக்கு நன்கு தெரிந்த வினோதன் அவர்களின் பெயரைத் தாங்கிநிற்கும் இம் மண்டபத்திலே அதிகம் தெரியாத கவிஞர் மாவை வரோதயன் பற்றித் திருமதி கோகிலா மகேந்திரன் ஆற்றிய உரை பயனுள்ளதாக இருந்தது. கோகிலா மகேந்திரன் அவர்கள் கொள்கைப் பிடிப்பும் சான்றாண்மையும் உடைய ஒரு சிந்தனையாளர். அவரை இங்கு சந்தித்தது மகிழ்ச்சியைத் தருகின்றது.

தலைவர் அவர்கள் கனடாவில் கலை இலக்கிய முயற்சிகள்பற்றிப் பேசும்படி பணித்திருக்கின்றார். கனடா குளிர் மிகுந்த நாடு என்பது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற ஒரு நாடுமாகும். கோடை வெப்பச் சூடு இங்குள்ள சூட்டிலும் அதிகமாக இருக்கும். இத்தகைய நாட்டிலே எமது மக்கள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து கிட்டத்தட் 25 ஆண்டுகள் ஆகின்றன. பொதுவாக 1986ஆம் ஆண்டைத்தான் நாங்கள் அங்கு செல்லத் தொடங்கிய ஆண்டாக வைத்துக் கொண்டிருக்கின்றோம். அதற்கு முன்னதாகக் குடியேறியவர்களும் உள்ளனர். அவர்கள் பெரும்பாலும் தொழில்பெற்றுச் சென்றவர்கள்; தொகை அளவிற் குறைந்தவர்கள்.

எமது மக்கள் முயற்சியுள்ளவர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். கல்வி, தொழில், இலக்கியம் என்று எல்லாத்துறைகளிலும் முன்னேறி வருகின்றார்கள். அரசியலிலும் ஈடுபாடு அதிகம்.

கலை இலக்கிய முயற்சிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதே எனது மதிப்பீடு. பிற மேற்குலக நாடுகளுக்கும் முன்மாதிரியாக அமையக்கூடிய அளவுக்கு அவற்றின் தரம் கனதியாக உள்ளதென்றும் துணிந்து சொல்லலாம். அதற்குக் காரணம் பல ஈழத்து மூத்த எழுத்தாளரும் கலைஞரும் அங்கு வாழ்ந்துவருவதுதான்.

இத்தகைய ஒரு மூத்த எழுத்தாளர்தான் ஈழத்துப்பூராடனார் என்று அழைக்கப்படுகின்ற செல்வராஜ கோபால் அவர்கள். அவர் ஒரு பழுத்த எழுத்தாளர்; புலவர்; கனடிய எழுத்துலகத்தின் முன்னோடி. கனடாவில் முதன்முதலாக Reflex Printers என்ற அச்சகத்தை இவர் நிறுவினார். இது ஒரு கணினிமுறை அச்சகம். Charles என்பவரின் Ramya Printing, யாழ்ப்பாணத்தில் விவேகா அச்சகத்தை நடத்திய திரு. செல்வநாயகம் அவர்களின் புதல்வர்கள் அதே பெயரில் ஒரு அச்சுக்கூடத்தை அங்கு நிறுவினார்கள். தொடக்கத்தில் இவ் அச்சுக்கூடங்களும் எழுத்தாளருக்குப் பெரும் வசதியாக இருந்தன. இன்று கனடாவில் தமிழர் மத்தியில் பல அச்சகங்கள் இயங்கிவருகின்றன.

தமிழர் தகவல் என்ற சஞ்சிகை ஒரு முன்னோடியான மாத இதழ். இதனைக் கடந்த 19 ஆண்டுகளாக திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் நடத்திவருகின்றார்கள். தமிழர் தகவலைப் படித்து வருகின்றவர் கனடாவின் கலை இலக்கிய முயற்சிகளை நன்கு அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். கனடாவில் தோன்றிய பிற சஞ்சிகைகள் பல மறைந்துவிட்டன. அவற்றுள் ஆனந்த் என்பவர் நடத்திய ரோஜா, க. நவம் அவர்களின் நான்காவது பரிமாணம், ராஜா மகேந்திரன் அவர்களின் முயற்சியால் வெளியிடப்பெற்ற உலகத் தமிழோசை, திரு. எஸ். ஜெகதீசனின் பொதிகை ஆகிய கலை இலக்கிய இதழ்கள் குறிப்பிடத் தக்கன.

பத்திரிகைகளும் கலை இலக்கிய முயற்சிகளை வளர்த்து வருகின்றன. முக்கியமாக எழுத்தாளருக்குக் களங்களை அமைத்துக் கொடுத்துவருவதில் முன்னணியில் நிற்கின்றன. அவை எல்லாமே வார இதழ்கள்தாம். அவற்றுள்ளும் பல பத்திரிகைகள் மறைந்து விட்டன. மூத்த பத்திரிகைகளில் ஒன்றான செந்தாமரை நின்றுபோக தமிழர் செந்தாமரை என்ற பெயரில் இன்று வந்துகொண்டிருக்கின்றது. மற்றுமொரு மூத்த இதழ் விளம்பரம். நல்ல தரமான கட்டுரைகளையும் செய்திகளையும் தாங்கித் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. இவற்றைத் தொடர்ந்து பல பத்திரிகைகள் படிப்படியாக வெளிவரலாயின. அவற்றிலும் சில மறைந்துவிட்டன. ஈழநாடு, உலகத் தமிழர், உதயன், ஈழமுரசு, முரசொலி, தாய்வீடு, தங்கத்தீபம், சுதந்திரன், பரபரப்பு, இருசு ஆகியன



கவிஞர் வி. கந்தவனம்

தொடர்ச்சி 27ஆம் பக்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்




Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கோடி தமிழா உன் கோழை வாழ்வு போதும்

அலவாங்கிற்குப் பயந்து வீடு கட்டாமல் இருக்கும் இனம் எதுவென்று ஆராய்ச்சி செய்ய ஓர் அளவுகோல் இருக்கிறது. உலகத்தில் ஆறு கோடி மக்கள் இருந்தும் தமக்கான சுய நிர்ணய உரிமையுடன் வாழ்வதற்குரிய நாடில்லாத இனமாக இருப்பது தமிழினம்தான்.

வீட்டைக் கட்டிப்பார் அதுபோல கல்யாணத்தைக் கட்டிப்பார் என்று கூறுவார்கள், அதுபோல உனக்கான நாட்டைக் கட்டிப்பார் என்று யாரும் கேட்பதில்லை ஏனென்றால் அது அவ்வளவு இலகுவான காரியமல்ல. வீட்டைக் கட்டுவதற்கு பணம், உபகரணங்கள், ஆளணிகள் என்று ஏகப்பட்ட விடயங்கள் தேவை. ஆனால் அதை உடைப்பதற்கு ஓர் அலவாங்கு போதும்.

அழிப்பது இலகு ஆக்குவது மிகவும் கடினம். புதுமாத்தளனில் நாம் ஆக்கசக்தியாகவும், எதிரிகள் அலவாங்கு தூக்கிய அழிவு சக்தியாகவும் இருந்தார்கள் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டிய தில்லை.

அன்று...

வள்ளுவர் போன்ற பெரும் மகான்கள் தோன்றி நீ உன் கையில் அலவாங்கை எடுக்காதே, என்று போதித்தார்கள். உனக்கு வீடில்லாவிட்டாலும் மற்றவன் வீடுகட்டி வாழ அனுமதிக்கும் இனமாக நீ இருக்க வேண்டும் என்றும் போதித்தார்கள். தமிழ்மொழியில் கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாக நல்லறிவூட்டும் அறிஞர்கள் மற்றவர் வாழ வேண்டுமென வழிவிட்டு, தாம் வறுமையில் வாழ்ந்த பெருமக்களாகவே இருந்தார்கள்.

இதற்கு ஓர் உதாரணம். தம்பியாக இருந்த இளங்கோவடிகள் சேரநாட்டின் அரசனாக வருவான் என்று அவனுடைய ஜாதகம் கூறுவதாக அரண்மனைச் சோதிடர்கள் கூறினார்கள். அவனுடைய அண்ணனான சேரன் செங்குட்டுவனுக்கு சவாலாக வர இந்தியாவில் வேறு யாருமே கிடையாது என்றும் கூறினார்கள். அவ்வளவுதான், இளவரசர் பட்டத்தைத் துறந்து, காவிதரித்து புத்தமதத் துறவியானார் இளங்கோவடிகள். அண்ணனுக்கு போட்டியாக அல்ல அண்ணனுக்கு அடுத்ததாகவும் அரசனாகமாட்டேன் என்ற உறுதி மொழியை அவர் எடுத்தார். அதன் பின்னர் வட இந்தியருடன் போர் புரிந்து கனகவிஜயர் தலையில் கல்லெடுத்துவந்து கண்ணகிக்கு கோயில் கட்டினான் அவர் அண்ணனான சேரன் செங்குட்டுவன். அவன் எடுத்த விழாவில் கடல்சூழ் இலங்கை மன்னன் கஜபாகுவும் கலந்து கொண்டான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இங்கே கோயில் கட்டியது என்ற சொல்லே முக்கியமாகும். மற்றவர்கள் நாட்டைக் கட்டவும், வீட்டைக் கட்டவும், கோயிலைக் கட்டவும் தடைபோடாத இனமாக இருக்க வேண்டும் என்பதே ஆன்றவிந்த தமிழ் அறிவாக இருந்தமைக்கு இளங்கோவடிகள் ஓர் உதாரணம், இதுபோல எண்ணற்ற உதாரணங்களைக் கூறலாம். இந்தியா சுதந்திரம் பெற்றபோது ஜின்னா பாகிஸ்தான் தனிநாடாக வேண்டுமென உறுதியாக நின்றார். புதிய நாடு உருவானது. ஆனால் சோழப்பேரரசையே உருவாக்கி சாதனை படைத்த தமிழன் வட இந்தியர் நாட்டை அமைக்கட்டும், பாகிஸ்தானியர் நாட்டை அமைக்கட்டும், உலக யுத்தத்தின் பின்னர் இஸ்ரேல் போன்ற சில இலட்சம் மக்கள் கூட நாட்டை அமைக்கட்டும். ஆனால் கோடி கோடியாகக் ஜனத்தொகை கொட்டிக் கிடக்கும் தமிழனுக்கு ஒரு தனிநாடு வேண்டுமென கேட்காமல் அமைதியாக இருந்தனர்.

மற்றவன் வீட்டை அழிக்க அலவாங்கைத் தூக்காத இனம் என்று அகிலத்திற்கும் உரைத்தனர். இந்தியாவை விடுங்கள். நமது இலங்கையில் என்ன நடந்தது. இலங்கையின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட சேர். பொன். இராமநாதன் இங்கிலாந்து சென்று பேசிவிட்டு வந்தபோது, அவரை குதிரை வண்டியில் இருத்தி, குதிரைகளை அகற்றிவிட்டு தாமே இழுத்துச் சென்றார்கள் சிங்களத் தலைவர்கள். இராமநாதன் சிங்களவருடன் இணைந்து நாடற்று வாழ தமிழருக்கு வழிகாட்டி சிங்களவர் கட்டிய வீட்டில் அலவாங்கு போடாமல் அமைதி காத்தார்.

மற்றவர்கள் நலமாக வாழ நாம் தோள் கொடுப்போம் என்ற பழந்தமிழரின் பண்பார்ந்த கொள்கை நாடுள்ள இனங்களால் புரிந்து கொள்ளப்படவில்லை. எல்லோரும் வாழ வழிவிட்ட தமிழன் நெருப்பில் எரிந்தான். வேறு வழியின்றி தமிழனுக்கு ஒரு நாடு வேண்டுமென்று ஈழ மண்ணில் சில இளைஞர்கள் புறப்பட்டார்கள். அப்போதுதான் ஓர் உண்மை நமக்குப் புரிந்தது.

தாம் நாடுகாண வழிவிட்ட தமிழனுக்கு அதே உலக நாடுகள் பயங்கரவாதிப் பட்டம் கட்டின. அதையே காரணம்காட்டி அலவாங்குகளை ஏந்தியபடி தமிழன் கட்டிய நாட்டை குத்தி அழித்தன. கட்டப்பட்ட கட்டிடத்தின் ஈரம் காயமுன்னர் இடித்து விடுவோமென அவசரப்பட்டு, ஈரமில்லாத இதயம் கொண்டோர் இணைந்து நின்று நம் கண் முன்னே. இடித்தார்கள். வீடு கட்டியவர்கள் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கிறார்கள். கட்டிய வீடு புதுமாத்தளனில் அத்திவாரத்தோடு கிளறப்பட்டு அலங்கோலமாகக் கிடக்கிறது.

இப்போது நாம் என்ன செய்வது.. அழுவதா? இல்லை ஆளையாள் துரோகிப்பட்டம் கட்டி வேரோடு அழிவதா? மாற்று வழி இல்லாமல் மகிந்த அரசுடன் சேருவதா.? இல்லை நாடுகடந்த அரசை அமைப்பதா.? இப்படி பல கேள்விகள் எழும்...

எல்லாக் கேள்விகளையும் ஓரமாக வைத்துவிட்டு, நாம் கொஞ்சம் பின்நோக்கிப் பார்க்க வேண்டும். தமிழ் அறிஞர்கள் சொன்னது சரியா இல்லை தமிழ் தலைவர்கள் செய்தது சரியா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். குற்றம் ஒன்றும் பாராட்டி திரிய வேண்டாம் என்று உலகநீதி சொல்லுவதை மனதில் வைத்து, நமது கொள்கைகளை இன்னொரு தடவை சீர்தூக்க வேண்டும்.

உலகத்தில் மிக மிக பழைய கலாச்சாரம் கொண்டது தமிழினம் அதனுடைய தத்துவங்கள் மிகச் சிறந்த தத்துவங்கள் தான். ஆனால் காலம் மாறி விட்டது. அக்கருத்துக்கள் உலகம் மாறிய மாற்றத்திற்கு அமைவாக புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இருபத்தியோராம் நூற்றாண்டுக்கு அமைவான தமிழர் அரசியல் சமுதாய வாழ்விற்கான பொதுக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். உலகளாவிய தமிழர்கள் அதுபற்றி சிந்திக்க வேண்டும். செம்மொழி மாநாடு நடாத்துவது போல தமிழர் அரசியல், சமுதாய எதிர்கால வாழ்விற்கான புதிய நெறி அறிமுகம் செய்யப்பட வேண்டும். அதற்கு அமைவாக உலகளாவிய தமிழினம் கருமங்களை முன்னெடுக்க வேண்டும். உயர் தமிழ் கருத்துக்கள் வடஇந்தியரின் பிற்போக்குக் கருத்துக்களோடு கலந்து சீரழிக்கப்பட்டிருக்கும் இடங்களை முதலில் துல்லியமாக, உத்தியோக பூர்வமாக அறிவிக்க வேண்டும்.

இதற்கு ஓர் உதாரணம். சாதிக்கொடுமை முற்றாக அழிக்கப்பட வேண்டும், அது தமிழர் கலாச்சாரமல்ல என்பதை தெளிவாக முன் வைக்க வேண்டும். சாதிக் கொடுமையே ஈழத்தில் முப்பதுக்கு மேற்பட்ட சாதி இயக்கங்கங்களாகத் தோன்றி ஆளையாள் காட்டிக் கொடுத்து அழிவில் தள்ளியதை நாம் கண் முன் பார்த்துவிட்டோம். இது ஒரு வட இந்தியத் தவறு, இதுபோல மேலும் எழுத எண்ணற்ற உதாரணங்கள் உண்டு.

இனி... ஈழத் தமிழர்கள் அடுத்த ஐந்து வருடங்களுக்கு நகர வேண்டிய நகர்வுகள் என்ன?

அதற்கடுத்த பத்தாண்டுத் திட்டமென்ன, இருபத்தியோராம் நூற்றாண்டுக்காக அவனுடைய பொதுமைத் திட்டமென்ன. அதை எட்டித்தொட அவன் உருவாக்க வேண்டிய கட்டுமானங்கள் எவை..? ஆறு கோடி தமிழரின் தலைவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அந்தத் திட்டத்தை முதலில் வரைய வேண்டும். நாம் ஆளையாள் இரகசி யமாகக் கூடி, நமக்கு வேண்டியவர்களுக்கு இருட்டறையில் பதவி கொடுத்துவிட்டு ஈழப் பிரச்சனைக்கு இதுதான் தீர்வு, இதற்கு இணங்காதவன் துரோகி என்றபடி தெருவிற்கு வரக்கூடாது. விளக்குமாற்றுக்கு பட்டுக்குஞ்சம் சுற்றிவிட்டு வீரம் பேசக்கூடாது. அழிவிற்காக அழுதோம். இனி அழிவிற்குப் பின்னும் மூடர்களாக இருக்கிறார்களே என்பதற்காகவும் அழக்கூடாது. நாம் இந்த வாழ்வை சுமப்பதற்கு என்ன அர்த்தம்.

அழுவதா.? மற்றவருக்கு பயப்படுவதா.? இல்லை துரோகிப்பட்டத்திற்கு பயந்து பேடிகளாக இருப்பதா? மானமுள்ள ஒவ்வொரு தமிழனும் தானாகச் சிந்தித்து வீதிக்கு வரவேண்டும். இனிமேலாவது கொஞ்சம் வித்தியாசமாக சிந்திப்பாய் தமிழ் வீரா...!

புதுமாத்தளன் சோகமல்ல புலிபோல பாய்வதற்கான வீர வலுவை உனக்குத் தந்துள்ளதை மறந்துவிடாதே. துரோகிப்பட்டம் என்ற அலவாங்கை தூக்கி, நீ கட்டும் வீட்டை உடைக்க வரும் துன்மார்க்கர்களை தொலைத்துவிட்டு துணிந்து நில். அற்பர்களின் அலவாங்குகளுக்குப் பயந்து அடிமையாக வாழப்போகிறாயா..? திருடரும், மொள்ளமாறிகளும், முடிச்சவிழ்ப்போரும் உன் முதுகில் வண்டியோட நீ கோழையாக வாழப்போகிறாயா?

புதுமாத்தளனுக்குப் பிறகும் உனக்கொரு கோழை வாழ்வு வேண்டுமா..? வீரத்தமிழா உன் கொள்கைகளை மாற்றி விழித்தெழு.. விடிவு உன் வீட்டு வாசலில் விழும்..

- *நன்றி: அலைகள்*


## Computer Repair Services

சகல விதமான கணனி சார்ந்த பழுதுபார்த்தல் மற்றும் Virus Removal உட்பட அனைத்து வேலைகளையும் செய்து கொள்ளலாம். Troubleshooting இலவசம். ஏற்படக்கூடிய செலவு பற்றிய விபரங்ளை முற்கூட்டியே அறிந்து கொள்ள முடியும்.

PC Repair, Upgrade, Anti-Virus & Fire-Wall Installation; Virus, Spyware, Malware Removal.

Data Recovery from infected or corrupted, & mistakenly formatted Computers.

Setup your Router & wireless security. Buy used and new computers. (Scanning, Browsing, Printing, Toner Cartridges & Refill etc..

**PRO-WIN COMPUTER SERVICES**

**919** Ellesmere Road, Unit – 302 , Scarborough, ON, M1P 2W7.
*(KENNEDY & ELLESMERE- South East Corner )*
*(Besides Active Green + Ross & In front of Honda )*





**Tel: 647 340 5568/416 879 7489 (தமிழ் -English)**
**( Contact :** *Niruthan Nadarajah* **)**
**Mon-Sat 10 am – 8 pm / Sun 10 am – 6 pm**

# வாழத் துடிக்கும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

சிவில் அதிகாரிகளும், கண்டிப்பான விதிமுறைகளுக்கமைய அனுமதிக்கப்பட் டுள்ள கைவிட்டு எண்ணக்கூடிய தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மீள்குடியேற்றப் பிரதேசங்களின் நடவடிக்கைகள் அனைத்தி லும் இராணுவத்தின் பங்களிப்பும், வகி பாகமும் முக்கியமாக இருக்கின்றது. இதனால்தானோ என்னவோ மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஒரே சீராக மேற்கொள்ள முடியாத நிலையில் சென்று கொண்டிருப்ப தாகத் தெரிகின்றது. மீள்குடியேற்றப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வேலைகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினரது வன்னி விஜயத்தின் போது தெளிவாகக் காணமுடிந்தது. அநேகமான வீதிகள் செப்பனிடப்பட்டிருந்தன. வாகனங் கள் மிகுந்த சிரமமின்றி பிரயாணம் செய்யக் கூடியதாக இருந்தது. கிராம வீதிகள் கூட பல இடங்களில் நன்றாக இருந்தன. கிராமங்களில் நகர்ப்புறங்களில் இடம் பெற்றிருந்த அழிவுக்காட்சிகளைக் கண்ட போது, ஒப்பீட்டளவில் வீதிகளுக்குப் பெரிய அளவில் சேதங்கள் ஏற்பட்டிருந்ததாகக் கூற முடியவில்லை.

இந்த வகையில் நெடுங்கேணியில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் வற்றாப்பளைக் கான பிரயாணம் நன்றாகவே இருந்தது. நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழுவினர் வற்றாப்பளைக்குச் சென்றபோது, அந்த ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழாவுக்கான ஏற்பாடுகள் நடை-பெற்றுக் கொண்டிருந்தன. இந்தப் பொங்கலுக்காக முல்லைத்தீவு கடலில் இருந்து எடுத்து வரப்பட்ட புனித நீரில் அந்த ஆலயத்தின் கருவறை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை பொங்கல் என்றால் மிகவும் பிரசித்தம். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கோவில் திருவிழா அது. நாடெங்கிலும் இருந்து மக்கள் பெரும் எண்ணிக்கையில் தங்களது நேர்த்திகளை நிறைவேற்றுவதற்காக அங்கு வருடாந்தம் வருவார்கள். கோவில் பிரதேசம் பக்தி உணர்வோடு களைகட்டி இருக்கும். அத்தகைய ஒரு சூழலில் அந்த ஆலயம் இரண்டு வருடங்களின் பின்னர் திறந்ததை அங்கு சென்ற நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுவினர் கண்டார்கள். இராணுவத்தினரின் ஏற்பாட்டில் முள்ளியவளை வீதியில் இருந்து வற்றாப்பளைக்குச் செல்லும் வீதி நேர்த்தியாக செப்பனிடப்பட்டிருந்தது. பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வாகனங்கள் ஆலயத்திற்கு வருகை தருவதையொட்டி இந்த வீதி புனரமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.



ஆலயச் சுற்றாடலும் திருவிழாவுக்காகத் தயாரகியிருந்தது. வாகனங்களில் சென்று இறங்கிய குழுவினரை ஆலயத்தில் கூடியிருந்த சிலர் வந்து வரவேற்றார்கள். ஒரு பக்கத்தில் இராணுவ அதிகாரிகளுடன் கூடிய படையினர் நின்றிருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகைக்காக அவர்கள் அங்கு வந்திருந்ததைப் போன்றிருந்தது. எனினும் ஆலயத் திருவிழா ஏற்பாடுகளுக்காக அவர்களும் அங்கு பிரசன்னமாக இருந்தார்கள் என்றும் ஒரு சிலர் கூறினார்கள். ஆலயத்தினுள் செல்வதற்கு முன்னதாக கால்களைக் கழுவுகின்ற முறைக்காக இந்தக் குழுவினர் ஆலயக் கிணற்றடிக்குச் சென்றபோது சிவில் உடைகளில் இருந்த சிலர் அவர்களைப் படம் பிடித்தார்கள். கெமரா வைத்திருந்தவர்கள் சுற்றிச் சுற்றி சிலாவி சிலாவி படம் எடுத்தார்கள். சிறிய கமராவைக் கொண்டு வீடியோ எடுத்தவர் ஓடிஓடி முன்னாலும் பின்னாலும், பக்கவாட்டிலுமாகப் படம் எடுத்துக் கொண்டிருந்தார்.

ஆலயத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்ட பிரதிநிதிகள் குழுவினருக்கு விசேட அர்ச்சனைகள் இடம்பெற்றன. ஆலய ஐயர் தீபாராதனை காட்டி அதனை முக்கியஸ்தர்களிடம் நீட்டினார். அந்த வேளையிலும், அவர்களுக்கு காளாஞ்சி பிரசாதம் கொடுக்கப்பட்ட போதும் அந்தக் கமராக்கள் பளிச் பளிச் என மின்னின. வீடியோ கமராவும் சுழன்று சுழன்று படங்களைப் பதிவு செய்து கொண்டது. ஆலயத்தின் மகிமை தேவைகள், ஆலயத்திற்கு ஏற்பட்டிருந்த சேதங்கள் என்பற்றை ஆலய நிர்வாகிகள் நாடாளுமன்ற பிரதிநிதிகளிடம் விரிவாக எடுத்துக் கூறினார்கள். வற்றாப்பளை கிராமத்தின் நிலைமை பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அங்கிருந்து ஊர்மனைக்குள் சென்று அங்கிருந்த பொதுமக்களைச் சந்தித்தவேளையிலும் அந்த கமராக்களின் வரவேற்பு குறையவில்லை. முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த படப்பிடிப்பாளர்களைக் கடிந்ததன் பின்பே அவர்கள் அந்த இடத்தைவிட்டு அகன்றார்கள். அங்கு நடைபெற்ற சந்திப்பில் பெரும்பாலானவர்கள் பெண்களாகவே இருந்தார்கள். ஒரு சில ஆண்களும் இருந்தார்கள். முக்கிய பிரச்சினைகளாக இருப்பிடப் பிரச்சினையும் உணவுப் பற்றாக்குறையும், தொழில்வாய்ப்பு பற்றியும் அந்தக் கிராம-வாசிகள் குறிப்பிட்டார்கள்.


Served Over 15 Years In Toronto
Now in Richmond Hill



NTE AUTO INC.
New Trade Engineering
MS7 Quality Used Car Sales
346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575
416-399-6640
சகல விதமான வாகனங்கள் திருத்தும் நிலையம்
தற்போதைய விசேட கழிவு சேவைகள் சில....

எங்களுடன் தொடர்பு கொண்டு Towing செய்து வருபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

| | |
|---|---|
| Front Brake Service From | $109. 95 |
| Rear Brake Service From | $109.95 |
| Transmission Service From | $ 99.95 |
| Lube & Oil Service From | $ 29.95 |
| Tire Change & Balancing From | $ 14.95 |
| Engine Tune up from | $159.95 |
| Air Conditioning Service From | $ 49.95 |
| Computer Scanning from | $ 39.95 |

We do BMW Service & Maintenance




Many more special, please contact for more information.

# பார்வைக் குருடர்கள்

ஒரு மனிதனின் வாழ்வியல் அமைப்பானது அவரது சுயஉரு (Self Image) பற்றியே அமைகின்றது. சுயஉரு அல்லது தன் உரு என்பது ஒவ்வொருவரது வாழ்க்கையையும் தீர்மானிப்பதற்கான அடிப்படையாக அமைவதை நாம் உணர்ந்து கொள்வதே யில்லை. இந்தத் தன் உரு என்பது நாம் ஒவ்வொருவரும் எம்மை எவ்வாறு உருவகித்துப் பார்க்கின்றோம் என்பதாகும். இந்தப் பார்வைமூலம் நம்மை நாம் பார்க்கும் பார்வையானது நம்மால் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல என்பதே நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயமாகும்.

ஒவ்வொருவரதும் உளவியல் வளர்ச்சி என்பது ஒரு படிமுறையினூடாக முன்னெடுத்தும் செல்லப்படுகின்றது. நமது ஆரம்பகாலத்தில் அதாவது குழந்தைப்பருவத்தில் நாம் ஒரு தனிஉயிர் என்பதை உணர்வதில்லை. ஒவ்வொரு குழந்தையும் இந்த நிலையி லிருந்தே ஆரம்பிக்கின்றது. தான் ஒரு தனி உயிர் என்பதை அறியாத காலப்பகுதியில் ஒரு குழந்தையின் நடத்தை அனைத்தும் தனது, தனது அல்லாதது என்ற அமைப்பில் தான் இடம் பெறுகின்றது. இந்த நிலை குழந்தைகள் அனைத்துக்கும் பொதுவானதே. இது உடல்சார்ந்த உணர்வாகும்.

சிறிது சிறிதாக நாம் வளர்ச்சியடையும்போது அதாவது இந்தக் குழந்தைத் தன்மையிலிருந்து நாம் மாற்றமடையும் போது 'நான்' என்ற உணர்வு அதாவது தான் உடல் சார்ந்தவன் மட்டுமல்ல 'மனம்' என்ற ஒன்று இருப்பதையும் உணர்கின்றோம். இந்த நிலைக்கு நாம் மாற்றம் அடையும் போது நமது உணர்ச்சிகளுக்கும் செயற்பாடுகளுக் கும் நாம் பொறுப்பானவர்கள் என்ற எண்ணம் உருவாகின்றது. இந்த உணர்வு சிறிய சிறிய அனுபவங்களை உருவாக்குகின்றது.

இவ்வாறு சிறிது சிறிதாக அனுபவங்கள் பெறும்போது விளையாட்டுப் பொருட்கள் துணிமணிகள், நண்பர்கள், பெற்றோர்கள், உறவினர்கள் எனப் பலவற்றுடனும், பலருடனும் நம்மை நாம் ஒன்றுபடுத்து கின்றோம். இங்கேதான் ஒவ்வொரு மனிதனதும் தன் உரு உதயமாகின்றது. அதாவது குழந்தை சிறுவனாகப் பரிணமிக்கும் போது சமுதாயத்தில் பல பாத்திரங்களை ஏற்க வேண்டிய நிலை உருவாகின்றது. மகனாக, மாணவனாக, நண்பனாக எனப் பல வேடங்களை ஏற்க வேண்டியுள்ளது. இவ்வாறு ஏற்றிக்கொள்ளும் ஒவ்வொரு வேடத்தையும் சமுதாயம் உன்னிப்பாகக் கவனிக்கின்றது. அதன்மூலம் ஒவ்வொருவரை யும் எடைபோடுகின்றது.

இவ்வாறு நாம் இளமையில் ஏற்றுக்கொள்ளும் இந்த வேடங்களின் தராதரத்தைச் சமுதாயம் மிக உன்னிப்பாகக் கவனித்துச் சில வேளைகளில் நம்மை ஏற்றுக்கொள்கிறது அல்லது நிராகரிக்கின்றது. இவ்வாறு சமுதயாத்தின் ஏற்பும் நிராகரிப்பும் ஒவ்வொருவரது ஆழ்மனத்திலும் மிகமிக உறுதியாகப் பதியப்பட்டுவிடுகின்றது. ஒரு குழந்தையின் தராதரம்பற்றிய சமுதாயத்தின் பார்வை சிறப்பானதாக இருப்பின் அது சிறந்த விடயங்களையும் மாறாக அது சிறப்பற்றதாக இருப்பின் பாதகமான விடயங்களையும் குழந்தையின் ஆழ்மனத்தில் பதிக்கின்றது. அதாவது ஒருவரைப் பற்றிய சமுதாயத்தின் எடை எதுவாக அமைகின்றதோ அதுவே ஒருவரது தன் உருவாக (Self Image) அமைந்து விடுகின்றது. ஏனெனில் தன்னுள்ளே ஆழமாகச் சென்று தனது உண்மை நிலையையும் மதிப்பையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் சிறுவனாக இருக்கும் போது இல்லாததால் சமுதாயம் குத்துகின்ற முத்திரையை முற்று முழுதாக எந்த எதிர்ப்பும் இன்றி ஏற்றுக் கொள்வது இயல்பானதா கின்றது. இந்தச் சமுதாய முத்திரையே ஒருவரது தன் உருவாகிவிடுகின்றது.

இந்த தன் உருவானது நாம் ஒவ்வொருவரும் உயிர்வாழும் காலம்வரை அழிவதில்லை. இதை அகற்றுவது இயலாதது என்பதனால் இதை மறைப்பதற்காக சில உருவங்களை நாம் எடுக்கின்றோம். ஒவ்வொரு மனிதனும் ஐந்து உருவங்களைக் கொண்டவனாக இருக்கின்றான். நான் என்பது இந்த ஐந்து உருவகங்களின் ஒன்றிணைப்புத்தான். இந்த உருவங்கள் ஒன்றுக்கொன்று துணை போவதாகவும் மாறுபடுவதாகவும் சந்தர்ப்பங்களுக்கேற்ப அமைகின்றன. (இந்த ஐந்து உருக்கள் எவை என்பதையும் அவற்றின் செயற்பாடுகள் என்ன என்பதையும் தொடர்ச்சியாக விளம்பரம் பத்திரிகையில் வரும் கட்டுரைகள் மூலம் அறிந்து கொள்ளுங்கள்) இந்த ஐந்து உருக்களின் மிகவும் ஆணித்தரமாக நமது ஆழ்மனத்தில் பதிந்திருப்பது தன் உருவாகும். இந்தத் தன்னுரு எம்மால் உருவாக்கப்படாமல் சமுதாயத்தின் உள்ளீடாக அமைந்ததும் அதை நாம் பரிபூரண சம்மதத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்ததும் ஒவ்வொரு வரது வாழ்விலும் இயல்பான விடயமாகும்.

நம் ஒவ்வொருவரையும் பற்றிய சமுதாயத்தின் எடை அல்லது முத்திரை நம்மைப்பற்றி நமது பார்வையைத் தீர்மானிப்பதும் அந்தப் பார்வையின் சிறப்பும் சிறப்பின்மையும் எமது வாழ்வியலைத் தீர்மானிப்பதும் அடிப்படையானதே. இங்கு நாம் சமுதாயம் எனக் கூறுவது ஒரு குழந்தை வளர்ந்து வரும் காலங்களில் அக்குழந்தை சார்ந்திருக்க வேண்டிய பெற்றோர்கள் உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் என ஒரு குழந்தையின் உளவியலின் மாற்றங்களை ஏற்படுத்தும் அனைவரும் உள்ளடக்கப்படுவர். இதனால் தான் ஒரு குழந்தையின் ஆரம்பகால வளர்ச்சிக் கட்டங்களில் அக்குழந்தையின் மீது நேர்த்தியான சிந்தனைகளைப் பகிர்ந்தளிக்கும் சமுதாய அமைப்பை உருவாக்குவதும் அக்குழந்தை தானாகத் தன் இயல்பையும் மதிப்பையும் எடை போடக்கூடிய தகுதி ஏற்படும் வரை அதைக் கண்காணிப்பதும் ஒரு சமுதாயத்தின் தலைசிறந்த பொறுப்பாகின்றது.

துரதிஷ்டவசமாக பல்வேறு சமூக பொருளாதார, அரசியல் தாக்கங்களினால் நம்மில் பெரும்பாலானவர்களது தன் உரு அல்லது சுயபார்வை மிகவும் தாழ்மையடைந திருப்பதை மிகத்தெளிவாக அவதானிக்கலாம். இதனை Low Self Image என ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். அதாவது ஒருவரது தன்னைப் பற்றிய தாழ்வான பார்வை இதுவாகும்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று இந்தத் தாழ்வு மனப்பான்மையும், உயர்வான மனப்பான்மையும் (High Self Image) சமுதாயம் எமக்கு கொடுத்த போது ஏகமன தாக எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதும் அதற்கேற்றவாறு எமது வாழ்வியல் நகர்வுகளாக அமைகின்றன என்பதும் நம்மால் மிகவும் தெளிவாக உணரப்படவேண்டியதே. ஒரே பெற்றோருக்கும் பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்று வெற்றி மனோபாவ சிந்தனையுடன் வாழ்வில் முன்னேறிச் செல்வ தும் மற்றையது அதற்கு மாறாக வாழ்வதும் இந்தத் தன்னுருவின் அடிப்படையே யாகும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

நாம் நம்மை அறியாத பருவத்தில் நம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உறுதியாக்கப்பட்ட இந்தத் தன் உருவானது நமக்குப் பாதக மானதாக அமைந்திருப்பதை, அதாவது நம்மை நாமே அறிந்து கொள்ளக்கூடிய பக்குவம் பெறும்போது உணரக்கூடிய வாய்ப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. ஆனால் மிகமிகக் குறுகிய எண்ணிக்கையுடையவர் களே இந்த உணர்ந்து கொள்கிறார்கள். இவ்வாறு உணர்ந்து கொள்பவர்கள் இந்தச் சுயபார்வை அல்லது தன்உரு சம்பந்தமான உண்மையையும் தெளிவாகக் புரிந்து கொள்கிறார்கள். அதாவது ஏற்கனவே ஆழமாகவும் உறுதியாகவும் ஆழ்மனதில் பதிந்து விட்ட இந்தத் தாழ்மையான தன்உருவை முற்றுமுழுதாக அகற்றமுடியாது என்பதை உணர்ந்து விடுகிறார்கள். அதே நேரத்தில் அதன் தாக்கத்தை நன்றாகக் குறைக்கமுடியும் என்பதையும் உணர்ந்து விடுகிறார்கள். அதாவது அழிக்கமுடியா விட்டாலும் அதன் தாக்கத்தைக் குறைப்பதன் மூலம் வெற்றிகரமான வாழ்க்கையை அமைக்கலாம் என்பதை உணர்ந்து அதை நிரூபித்தும் வருகிறார்கள்.

இப்போது இந்தத் தாழ்வு மனப்பான்மையின் தாக்கத்தை எவ்வாறு குறைக்கலாம் என்பதை உதாரணம் ஒன்றின்மூலம் பார்ப்போம். ஒரு பாத்திரத்தில் 100ml நச்சுத்திரவம் இருப்பதாக எடுத்துக்கொள்வோம். இதை நாம் அப்படியே பருகினால் உயிர் போய்விடும். ஆனால் இந்த நச்சுத்திரவத்துடன் அந்த நச்சுத்தன்மை நமது உடலைப்பாதிக்காத அளவுக்குத் தண்ணீரைக் கலப்போமாயின் அதை நாம் குடி நீராகப் பயன்படுத்த முடிகிறது. இங்கே நஞ்சின் தரத்தை பொறுத்து நீரின் அளவு அமையும். அதாவது பரிசோதனையின் மூலம் அந்த நீரில் நச்சுத்தன்மை இல்லை என்று வைத்துக் கொள்வோம். இப்போது அந்த நஞ்சு அந்த நீருடன் கலந்திருக்கிறது என்பதும் நமக்குத் தெரியும். அதனது தாக்கம் அற்றுப்போய்விட்டது என்பதும் நமக்குப் புரிகிறது. இதே போன்றுதான் நமது தாழ்வு மனப்பான்மையையும் அழிக்க முடியாவிட்டாலும் அவற்றை நட்பு மூலமாகவும், உயர்ந்த தரமான, வாழ்வியல் சார்ந்த புத்தகங்களை அதிகமாக நாளாந்தம் வாசித்துக் பயன்படுத்துவதன் மூலமாகவும் தாழ்வு மனப்பான்மையின் தாக்கத்தில் இருந்து நம்மை விடுவிக்கலாம். இதற்கு ஒரு திடமானதும் தொடர்ச்சி யானதுமான சுய அர்ப்பணிப்பு அவசியமாகும்.

**KG Master**-kgmaster@rogers.com

உலகின் சரித்திர நாயகர்கள் எனப்படும் அனைவரும் இந்த அர்ப்பணிப்பின் சிற்பிகளாவர். இவர்கள் செதுக்கிய சிலைகள் எமக்கு ஒரு வெளிச்சவீடாக அமைந்துள்ளன என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டியதே.

துரதிஷ்டவசமாக நம்மில் பெரும்பாலனவர்கள் இந்த அர்ப்பணிப்பை புறக்கணித்து விட்டு மந்திரத்தால் மாங்காய் பறிக்க முயல்கிறார்கள். அவர்களது ஆழ்மனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையைப் புதிய புதிய வேடங்களைப் போட்டு மூடி மறைக்க முயற்சிக்கிறார்கள். கொள்ளையடிப்பவர்கள் வள்ளலைப் போலவும் கோவிலை இடிப்பவர்கள் சாமியைப் போலவும் நாடகமாடுகிறார்கள். இப்படியாக நாடகமாடிய வர்களில் எத்தனையோ பேரின் சுய உருவங்கள் வெளிப்படுத்தப்பட்டு அதற்கான சுய தண்டனையையும் பிறர்தண்டனையையும் பெற்றவர்களின் இயல்புகளை நன்றாக அறிந்திருந்தும் கூடப் பலர் தொடர்ந்தும் நாடகமாடுகிறார்கள். பாவங்கள் இவர்கள். இவர்கள் தான் பார்வைக்குருடர்கள்.

“ உலகின் சரித்திர நாயகர்கள் எனப்படும் அனைவரும் இந்த அர்ப்பணிப்பின் சிற்பிகளாவர். இவர்கள் செதுக்கிய சிலைகள் எமக்கு ஒரு வெளிச்சவீடாக அமைந்துள்ளன என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டியதே. ”

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master


அமைதியின் குரல் - *Words of Peace*

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

*- MAHARAJI -*



மஹராஜியின் உரைகள்

| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# உனை நீ அறி

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னையே அர்சிக்கத் தானிருந்தானே
- திருமந்திரம் - 2355

தற்காலத்தில் சில சைவசமய சாமியார்கள் தமது சொந்த நலனுக்காக தம்மை கடவுள் எனக்கூறி மற்றவர்களை வணங்கச்சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டு ஒருபுறம் இருக்கிறார்கள். தமது ஒழுக்கக்கேட்டை நியாயப்படுத்த சமயம் ஒன்று இல்லை என தங்களை பகுத்தறிவுவாதிகள் என்று கூறிக்கொள்ளும் சிலர் மக்களை ஏமாற்றிக்கொண்டு மறுபுறம் இருக்கிறார்கள். ஆனால் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாக கூறப்படும் சித்தர் திருமூலரோ ஒருவன் தன்னை அறியும் அறிவை அறிந்து கொண்டால் அவன், தான் இறைவன் என அறிந்து விடுவான் என்ற உயரிய தத்துவத்தை கூறிச் சென்றுள்ளார்.



பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை

மக்கள் தமது சுய ஆராய்ச்சி மூலமோ, தியானம் மூலமோ தம்மைப் பற்றி ஆராயத் தொடங்கினார்கள் என்றால் அவர்கள் கட்டாயம் தமது சக்திக்கு தகுந்தாற்போல் ஓர் உன்னத நிலையை அடைந்தே தீருவார்கள். தன்னை அறிந்த நிலையில் ஒருவரது ஆன்மா தானே தனக்கு தலைவனாய் நிற்கும். இதையே "உனை நீ அறி" என்றோ "know thyself" என்றோ பல அறிஞர்கள் கூறிவைத்தார்கள். முக்கியமான கிரேக்க தத்துவஞானிகள் ஏழு பேரில் முதல்வராகக் கருதப்படும் தேலீஸ் (Thales) என்பவரது கூற்றாக "know thyself" மேற்கத்திய உலகில் கூறப்படுகின்றது. இவர் யேசு கிறிஸ்து பிறக்க 6 நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர். இவரைத் தொடர்ந்து சோக்கிரட்டீஸ் (Socrates) போன்ற பல தத்துவஞானிகளும் இரமணமகரிஷி முதல் சத்திய சாயிபாபா வரை பலரும் இந்த "உனை நீ அறி" என்கிற கோட்பாட்டை மக்களுக்கு சொல்லி வந்திருக்கிறார்கள், சொல்லி வருகிறார்கள்.

**மகாஜனக்கல்லூரயின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது**

"உனை நீ அறி" என்கின்ற சொற்தொடர் எனக்கு முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் February 05, 1971 வெள்ளிக்கிழமை ஆகும். அது இன்னும் என் மனதில் பசுமையாக இருக்கிறது. அன்றுதான் மகா-ஜனக்கல்லூரியில் கல்வி கற்பதற்காக நான் சென்ற முதல் நாள். நவாலியூர் சோமசுந்தர புலவரின் தம்பியாரும் எனது பேரனாரு மாகிய திரு. அ.க. வேலுப்பிள்ளையின் மறைவால் தடுமாற்றமடைந்த எனது தாயார் செய்த மாற்றம் இது. அன்று மகாஜனக்கல்லூரி அதிபராக இருந்தவர் அந்த வருட ஆரம்பத்தில் அதிபராக பதவியேற்ற திரு.மா.மகாதேவன் அவர்கள் ஆவர். அன்றைய முதல் நாளே மகாஜனக் கல்லூரியின் இலச்சினையில் இருந்த "know thyself" என்ற வாசகம் ஏதோ ஒரு விதத்தில் எனது மனதுள் பதிந்து விட்டது. அப்போது எனக்கு அந்தவாசகத்தின் கருத்து விளங்கவில்லை. தெரியாத விடயத்தை உடனடியாக கேட்டு அறியவாய்ப்பாக இருந்த பேரனாரும் இல்லை. அந்த வார்த்தையின் கருத்தை அறிய எனக்கு பல நாட்கள் இல்லை பல வாரங்கள் எடுத்தது. நான் "know thyself" இன் கருத்தை அறிந்த பின்னரே மகாஜனக்கல்லூரியின் கல்லூரிக்கீதத்தில் அந்த வார்த்தையின் தமிழாக்கமான "உனை நீ அறி" இருந்தது எனக்கு தெரிய வந்தது. அப்போது நான் "know thyself" என்பது சோக்கிரட்டீஸ் என்ற கிரேக்க தத்துவஞானி கூறியதாகவே எண்ணியிருந்தேன். தேலீஸ் என்ற கிரேக்க தத்துவஞானி தான் இந்த know thyself யை மேற்கத்திய உலகில் முதலில் கூறியவர் என்றும் அதற்கு பல ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னரே திருமூலர் கூறியதும் எனக்கு பிற்காலத்தில் தான் தெரியவந்தது.

இவ்வருடம் நூற்றாண்டுவிழா கொண்டாடிக் கொண்டிருக்கும் மகாஜனக்கல்லூரி 1910 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14ஆம் நாள் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களினால் யாழ்ப்பாணத்திலிருக்கும் அம்பனைக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இக்கல்லூரி மகாஜன ஆங்கில உயர்தர பாடசாலை (Mahajana English High School) எனும் பெயரிலேயே அழைக்கப்பட்டது. இப்பாடசாலை ஆரம்பித்த நாளிலிருந்து இதன் தலைமை ஆசிரியராக பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை அவர்கள் அவரது மறைவு மட்டும் இருந்தார். பாவலரது மறைவைத் தொடர்ந்து 1929 இல் இருந்து திரு.கா.சின்னப்பா தலைமை



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# கருந்துளைகள் -19

பெரும் திணிவு விண்மீன் ஒன்று ஒடுங்கி ஒருபுள்ளியில் தனது திணிவு முழுவதையும் ஒடுக்கும்போது அங்கே கருந்துளை தோன்றுகின்றது எனக் கண்டோம். சந்திரசேகரின் கணிப்பின் வழியே எமது கதிரவனின் திணிவினைப் போல் குறைந்தது 1.4 மடங்குடைய திணிவாகிலும் இருந்தால்தான் ஈர்ப்பினால் கருந்துளை ஒன்று தோன்றும் அல்லது உருவாகும் எனவும் கண்டு கொண்டோம். அதிலும் எமது கதிரவனின் திணிவிலும் மூன்று மடங்கிற்கும் அதிகமான அளவில் திணிவினைக் கொண்டிருந்தாலே கருந்துளை ஒன்று தோன்றுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதனையும் முன்பகுதிகளில் பார்த்தோம். அப்படியாயின் சிறிய திணிவுகள் ஒருபோதுமே கருந்துளைகள் ஆகமுடியாதா என்ற கேள்வி எழுகின்றது. இக்கேள்விக்குப் பதிலாக விஞ்ஞானிகள் என்ன கூறுகின்றார்கள் என்றால், பொதுவாகவே இல்லை என்றுதான் கூறுகின்றார்கள். ஏனெனில் ஈர்ப்பானது அந்த அளவிற்கு வலிமை கொள்ள முடியாது. ஆனால் சிறிய திணிவுகள், அவை எந்த வடிவினவையாக இருந்தாலும் போதுமான அளவிற்கு நெருக்கப்படும் போது அவை கூடக் கருந்துளைகளாக முடியும் என்கின்றார்கள். ஆனால் அவற்றினை நெருக்கக் கூடியதான பெரிய விசை ஏதும் இல்லை. அதனால் பொதுவாக அப்படியான சிறிய கருந்துளைகள் உருவாகுவதில்லை,

## பேரண்டம் - 67

ஒருவேளை எமது புவியினைப் போன்ற சிறிய பொருள் ஒன்று தனது திணிவு முழுவதையும் ஒருபுள்ளியில் ஒடுக்கிக் கருந்துளையாகினால் அக்கருந்துளையை சிறிய கருந்துளை எனலாம். குறுங்கருந்துளைகள் என்பவை இன்னமும் சிறிய திணிவுடையவை. எமது புவியின் திணிவினைப்போல் பில்லியனில் ஒருபகுதி திணிவுடைய பொருள் ஒன்று கருந்துளை யாகின் அதனைக் குறுங்கருந்துளை என்கின்றார்கள். கிட்டத்தட்ட இமயமலை யினது திணிவுடைய பொருட்கள் கருந்துளைகள் ஆகுகையில் குறுங் கருந்துளைகள் தோன்றமுடியும் என்கின்றார் கள். அத்துடன் அவற்றின் பருமனானது அணுவொன்றின் கருவினையும் விட 20 மடங்கில் சிறியதாக இருக்கும் என்பதும் அவர்களது கணிதக் கணிப்பீடாகும். அம்மாடி! அவ்வளவு சிறியதா! ஏன் நீங்கள் புருவங்களை உயர்த்துவது எனக்குப் புரிகின்றது. அதனால்தான் அவை குறுங்கருந்துளைகள் எனப்படுகின்றன.

கருந்துளைகளின் பருமனைப் பற்றித் திரும்பவும் ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். கருந்துளை என்பது பொருள் ஒன்றின் சடங்கள் எல்லாம் உடைந்து ஒடுங்கிய ஒருமமும் அதனைச் சுற்றியிருக்கும் கோளவடிவினதான சிறிய, வலிமையான ஈர்ப்புப் புலத்தினைக் கொண்டிருக்கும் பகுதியுமாகும். இந்த வலிமையான ஈர்ப்புப் புலத்தின் நிகழ்வு எல்லை என்ற கோள மேற்பரப்புடன் கருந்துளையானது முடிவுற்றிருக்கும். இங்கு இன்னொரு விடயத்தினையும் நாம் கவனிக்க வேண்டும். பெருந்திணிவுக் கருந்துளையாக இருக்கட்டும், சாதாரண கருந்துளைகளாக இருக்கட்டும், குறுங்கருந்துளைகளாக இருக்கட்டும், எதுவாக இருப்பினும் ஒருமம் என்பது ஒரேஅளவினதாகத்தான் இருக்கும். அதனுள் எவ்வளவு பெரிய திணிவு போய் சேர்ந்தாலும், விழுந்தாலும் ஒருமத்தின் அளவு மாறுவதில்லை. அதன் திணிவு மட்டுமே மாறும். திணிவு அதிகரிக்கும் போது ஒருமத்தினைச் சுற்றிக் காணப்படும் நிகழ்வு எல்லைக் கோளத்தின் மேற்பரப்பு அதிகரிக்க, அக்கோளமானது பெரியதாகும். அதனால் கருந்துளையும் பெரியதாகின்றது என்கின்றோம், ஒருமம் அல்ல.

குறுங்கருந்துளை ஒன்று எப்படிச் சாத்தியமாகும் என்றொரு கேள்வி வருகின்றது. ஏனெனில் சந்திரசேகரின் எல்லையின் கீழுள்ள திணிவுகளின் ஈர்ப்பு வலிமையானது. அவற்றினைக் கருந்துளை கள் ஆக்குவதற்குப் போதாது என்பது எங்களுக்குத் தெரியும். அப்படியா யின் குறுங்கருந்துளைகள் என்பதை வெறுமனே பெயரளவில்தான் கூறமுடியுமா? என்ற கேள்வி எழுகின்றது. இல்லை, உண்மையிலேயே அவை இருக்கின்றன அல்லது உருவாகுகின்றன என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். ஆனாலும் அப்படியவை தோன்றினாலும் அவற்றின் சீவியகாலம் குறுகியதாகவே இருக்கும் எனவும் கணித்துக் கூறியிருக்கின்றார்கள். குறுங்கருந்துளைகள் தாம் தோன்றியதும் சிறிது காலத்திலேயே பெரும் ஒளியுடன் பெருமளவு சக்தியை வெளிவீசி மறைந்தும் போகின்றன எனக் கூறுகின்றார்கள். குவாண்டம் கொள்கையின் அடிப்படையில் அதனை நிறுவியும் காட்டியுள்ளார்கள். பின்னராக அதுபற்றி தேவையான அளவிற் பார்ப்போம். (குவாண்டம் கொள்கையை நம்மவர்கள் கற்றைக் கொள்கை எனக் கூறினாலும் நான் வசதியாகத் தமிழிலேயே குவாண்டம் எனக் கூறமுடியுமாகையினால் அதனையே பாவிக்கின்றேன்)

இக் குறும் கருந்துளைகள் பற்றிப் பல ஆங்கிலப் படங்கள் வந்ததையும் நீங்கள் அறிவீர்கள். ஆங்கிலத்தில் பல சித்திரக்கதைகளும் வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றன. குறுங்கருந்துளை களை உண்டாக்கும் முயற்சியில் வெற்றி பெற்றபோதிலும் அவை உடனேயே மறைந்து போவதினால் பெரும் அழிவினை ஏற்படுத்துவ தாகவும் அவை சித்தரிக்கப்பட்டன. ஆனாலும் இதுபோன்ற நிகழ்வு பேரண்டத்தின் தோற்றக் காலத்திலே பெருமளவில் காணப்பட்டது என்கின்றார்கள் ஆய்வாளர்கள். அவர்களது கருதுகோள்களைப் பாருங்கள் எவ்வளவு அழகானது, அதேநேரம் ஆச்சரியமானதும் கூட.

சுமாராகப் பதின்நாலரை பில்லியன் ஆண்டு முன்னராக எமது பேரண்டம் பிக்பாங்குடன் தோன்றியது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம், எங்களுக்கும் அது இப்போது தெரியும். பிக்பாங்கின் பின்னராக, தோன்றிய கணத்தில் பேரண்டம் மிகச் சிறியதாக இருந்தது. அதனுள் பெருமளவு சக்தியும் பெருமளவு சடங்களும் இருந்தன. பெருமளவு சடங்கள், இடமே போதுமான அளவில் இல்லை. அதுவுமில்லாது சடங்களும் ஏகவினமாக இல்லாது சில இடங்களில் நெருக்கமாகவும், சில இடங்களில் ஐதாகவும் (ஒப்பீட்டளவில்) காணப்பட்டன. அதனால் செறிவாக இருந்த பகுதியின் சடங்கள் ஒன்றையொன்று அமுக்கிக் கொண்டு, நெரிபட்டுக் கொண்டிருக்க, அங்கே கருந்துளைகள் தோன்றுவதற்கான நிலை ஒன்று வந்து சேர, அவ்விடங்களில் குறுங்கருந்துளைகள் தோன்றின. இவற்றை ஆதிக்கருந்துளைகள் (primodial black holes) எனவும் கூறுகின்றனர்.



- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா**

## வருடாந்தப் போட்டிகள் - 2010

கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு, கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா தன் அங்கத்தவர்கள், அவர்களின் வாரிசுகள் மத்தியில் நடத்தும் வருடாந்தப் போட்டிகள்:
பண்ணிசை, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, சொல்வதெழுதுதல், எழுத்துக் கூட்டிச்சொல்லுதல், உறுப்பெழுத்து, கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன. கல்லூரியின் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு வெற்றியாளர்களுக்கு விசேட பரிசுகள் வழங்கப்படும். அங்கத்தவர்களின் வாரிசுகளை இப்போட்டியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இடம்: *St. Stephen's Pressbyterian Church*
*3817 Lawrence Ave.East , Scarborough,Ontario, M1G 1R2*

காலம்: ஜூலை 03, 2010 - சனிக்கிழமை - காலை 8:30 மணிக்கு

மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவத்திற்கும் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

*(416) 856-8055 / (416) 431-1060 / (416) 296-7037 / (416) 318-6195*

**TORONTO BUSINESS COLLEGE**
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



**Computerized Accounting Diploma**
● **EI** பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✔
● 2005 ஆண்டு **January** க்குப்பின் **EI** பெற்றவர்கள் ✔
● 5 வருடங்களுக்குள் **Maternity Benefits** பெற்றவர்கள் ✔
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
**EI,WSIB,ODSP,WELFARE**
பெறுபவர்கள் வரவேற்கப்படுகிறார்கள்
Our Experienced Counselor Will Help You To Apply For Funding
**INSTRUCTORS**
★ Pushpa ★ SP
More than 20 years of teaching experience
**CERTIFICATE COURSES**
**Buy One Get One Free**
Windows,Key Boarding,Data Entry,Word,Excel,Power Point
Access,Outlook,Quick Books,Simply Accounting,Accpac
Certificate Will Be Issued On Successful Completion
**416-291-5155**
4465 Sheppard Ave. East #208 (Sheppard & Brimley)
Scarborough
OACC PROUD MEMBER
www.t-businesscollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# ஈழை (Asthma) யும் உணவும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

இதனை தொய்வு, மூச்சிரைப்பு எனவும் அழைப்பதுண்டு. சப்த தாதுக்களினால் ஆன நமது உடம்பில் உள்ள மூளை, இருதயம், சுவாசப்பை மிக முக்கியமான உறுப்பாகும். வெளிக்காரணிகளினால் தாக்கப்பட்டால் நமது வாழ்நாளில் பல துன்பங்களைச் சந்தித்து கவலையுடன் வாழ்வதற்கு வழியமைத்துவிடும் என்பதை நாம் நன்கு அறிவோம்.

எனவே இங்கு எடுத்துக்கொண்ட ஈழை (Asthma) என்ற நோயைப்பற்றிப் பார்ப்போம். முக்கியமாக சுவாசப்பை குழலுடன் சம்பந்தப்பட்டதாகும். இருந்தும் இருவகையான நிலையில் வருவதற்கு இடம் உண்டு.

1. சுவாசப்பையைச் சார்ந்த மூச்சுக்கிளை குழல் தாக்கப்படுவதினால் வருவது இதனை (Bronchial Asthma) புறங்கியல் அஸ்மா என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது.

2. இருதயமானது நோய்களினால் தாக்கப்பட்டு அதன் மூலம் வருவதும் உண்டு. இதனை காடியக் அஸ்மா (Cardiac Asthma) என ஆங்கிலத்தில் அழைக்கப்படும்.

மூச்சுவிடும் காற்றுக்குழாயில் சுருக்கம் அல்லது அடைப்பு ஏற்பட்டு மூச்சு விடுவதற்குப் பெரும் கஸ்டமாக இருக்கும். இவ்வேளை இருமலும், சளியும் வெளிவந்த வண்ணம் இருக்கும். இந்நிலைமைகள் உள்வெளிக்காரணங்களினால் ஏற்படும். இவ்வியாதி எந்த வயதினருக்கும் வரலாம். பெரும்பாலும் முதியோருக்கு அதிகம் ஏற்படுவதை நாம் அறிவோம். இரத்தத்தில் உள்ள ஈமோகுளோபின் (Immunoglobulin) குறைந்தோ அல்லது இயல்பான நிலையில் இருக்கும். ஈமோகுளோபின் அணுக்கள் (CEU) அதிகமாகக் காணப்படும். இவ்வியாதி பரம்பரையாகவும் வருவதற்கு இடம் உண்டு. ஆனால் சிலருக்கு அப்படி நிகழாமலும் இருக்கும்.



**இளமையாக இருக்க இருவேளை உணவு**
**முதுமையை உண்டாக்கும் மூன்று வேளை உணவு**
**நோய்களை அதிகரிக்கும் பலவேளை உணவு**

ஈழை இருக்கும் சிறுகுழந்தைகளுக்கு பெரும்பாலும் 12 வயதினை அடைந்தவுடன் குறைந்து விடும். அல்லது இல்லாமலும் போய்விடும். இவ்வியாதி ஒருவரில் இருந்து மற்றோருக்கு தொற்றமாட்டாது.

ஈழையினால் பீடிக்கப்பட்டிருக்கும் போது சுவாசக்குழல் சுருங்கும் நிலையில் அவற்றின் மென்சவ்வுகள் (Mucus Membrane) தடிப்பான நிலையை அடைகின்றன. அவ்வேளை சளி அவற்றை அடைக்கின்றது. இதனால் சுவாசிக்கும் வேலை நிகழ்வு கடினமாகின்றது. சுவாசத்தின் காற்றை உள்ளே இழுப்பதை விட வெளியில் சுவாசக்காற்றைவிடக் கஸ்டமாக இருக்கும். இந்த ஈழையானது சிலருக்கு சடுதியாக ஏற்பட்டு மறைவதும் உண்டு. ஆனால் சிலரைப் பொறுத்த மட்டில் சிறிது சிறிதாக ஏற்பட்டு நீண்ட நேரம் மூச்சை விடக் கஸ்டப்படுவார்கள். இந்நிலை சிலருக்கு தொடர்ந்து சிலநாட்கள் இருக்கும்.

எனவே எல்லாநிலைகளும் சுவாசக்குழல் தாக்கத்தைப் பொறுத்ததாகும். உரிய நேரத்தில் கஸ்டப்பட்டவர்களாக இருந்தாலும் மற்றநேரத்தில் யாவும் படிந்து சுகதேகிகளாக இருப்பார்கள். பெரும்பாலும் இவ்வியாதி கடும் பனிக்குளிர்காலங்களில் ஏற்படும். மேலும் நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டியது மூச்சுக்குழாயில் வீக்கம், சுவாசத் தசைகள் சுருங்குதல் போன்றவற்றினால் வருவதற்கு இடம் உண்டு என்பதேயாகும்.

இவ்வியாதி வெளிக்காரணத்தினாலும் வருவதற்கு இடம் உண்டு. உடல்நிலைக்கு ஒவ்வாமை (Allergy) ஆகும். இவை தூசி, மகரந்தம், விலங்குகளின் மயிர்கள், பறவைகளின் சிறகுகள், சிலவகை உணவுப் பொருட்கள் போன்றவை இந்நோய்க்கு காரணமாகலாம். இந்நிலை சிறுவயதி லேயே தோன்ற இடம் உண்டு. வீட்டில் சிறு பிள்ளைகள் விளையாடும் போது விளையாட்டுப் பொருட்களில் சிலவகைக் கிருமிகள் பெருகி வருவதற்கு காரணமாக இருப்பதினால் குழந்தைகளுக்கு தடிமல், இருமல், தொய்வு போன்ற நிலை ஏற்படலாம் என்பதையும் முன்கூட்டி அறிந்து கொள்வதினால் பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மேலும் ஈழை வியாதியினால் பீடிக்கபபட்டவரின் முக்கிய அறிகுறிகளை முன்கூட்டி அறிவதினால் எம்மை நாம் பாதுகாப்பதுடன் தங்கள் வைத்தியர்களிடம் சென்று தகுந்த நோயின் நிர்ணயத்தின் பின் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்நோய் உற்றவரைக் கவனிக்கும் போது
- மூச்சு விடுவதற்கு கஸ்டப்படுவார்கள்.
- மூச்சு விடும்போது ஒருவித ஓசை ஒலி தென்படும்.
- நெஞ்சில் அதாவது மார்புப் பகுதியில் ஒருவித இறுக்கமான நிலை காணப்படும்.
- இருமலுடன் சளியும் வந்தபடி இருக்கும். முகம் வெளித்துக்காணப்படும். அத்துடன் கவலைக்குறியும் தென்படும்.
- நெற்றி, புருவத்தில் வியர்வைத் துளிகள் நாடியைப் பிடித்துப் பார்த்தால் இருதயத் துடிப்பு வேகமாக இருக்கும்.

உடல் சில்லிட்டுக் காணப்படும். பேசுவதற்கு கஸ்டமாக இருக்கும். சிறுநீரும் சிலவேளை அதிகமாகப் போகும். நித்திரை வருவது குறைவாகும்.

மூக்கடைப்பு, மூக்குநீர் வடிதல், தும்மல், தொய்வு, எக்ஸிமா போன்றவை சில ஒவ்வாமை (Allergy) காரணமாக வெவ்வேறு தோற்றமானாலும் அவை ஒரே தரணத்திலோ அல்லது தனித்தனியாக மாறுபட்ட நேரங்களில் வர இடம் உண்டு.

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)



# உனை நீ

14ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆசிரியராக இருந்தார். இவரது காலத்தில் தான் மகாஜனக்கல்லூரியில் பெண்களும் சேர்க்கப்பட்டு கலவன் பாடசாலையானது என்பது குறிப்பிடத்தக்கது. 1945 ஆம் ஆண்டில் பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளையின் மகன் திரு. தெ.து. ஜெயரத்தினம் மகாஜனக்கல்லூரியின் அதிபர் ஆனார். இவரது காலத்தில் 1946 இல் மகாஜனக்கல்லூரியின் இலச்சினை "உனை நீ அறி" என்கிற தத்துவ வசனத்துடன் உருவாக்கப்பட்டது. திரு.தெ.து. ஜெயரத்தினம் அதிபராக இருந்த காலத்தில் தான் (1947 இல்) மகா-ஜனக்கல்லூரி இலங்கையின் முதல்தர பாட-சாலையாக (Grade 1 School) தரம் உயர்த்தப்பட்டது. நான் மகாஜனக் கல்லூரிக்கு கல்விகற்க செல்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே திரு.தெ.து. ஜெயரத்தினம் அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறியிருந்தார்.

நான் மகாஜனக்கல்லூரியில் கல்வி பயின்ற காலப்பகுதியில் திரு.மா.மகாதேவன், திரு.பொ.குமாரசாமி, திரு.அ. சிவசுப்பிரமணியம் மற்றும் திரு.பொ. கனகசபாபதி ஆகியோர் அதிபராக இருந்தார்கள். நான் பாடசாலைப் படிப்பை முடித்துவிட்டு வெளியேறிய 1977 ஆம் ஆண்டு எனது மனைவி 10ஆம் வகுப்பில் கல்வி கற்பதற்காக அங்கு சேர்ந்தார். அவர் மகாஜனக்கல்லூரியில் கல்வி பயிலும் காலத்தில் திரு.பொ. கனகசபாபதி, திரு.ஆ. இராமசாமி, திரு.கு.ச. இரத்தினேஸ்வரஜயர். மற்றும் திரு.பொன். சோமசுந்தரம் ஆகியோர் அதிபராக இருந்தார்கள். மகா-ஜனக்கல்லூரியின் தற்போதைய அதிபராக கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து திருமதி. சிவமலர் அனந்த சயனன் இருக்கிறார். இவர் மகாஜனக்கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையும் ஆவர். இவரே மகாஜனக்கல்லூரியின் முதலாவது பெண் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை வாழ்க்கை பலவித அனுபவங்களையும் மறக்கமுடியாத சம்பவங்களையும் தந்தாலும் என் வாழ்க்கையின் உயர்வுக்கு வழிகாட்டியாக இருந்து அயராது உழைத்த ஆசிரியர்கள் பலரது நினைவுகள் என் மனதில் சிலையில் எழுத்தாக பதிந்துள்ளன. குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் ஆசிரியத்தொழிலை தமது ஊதியத்திற்காகவும் அத்தொழிலில் கிடைக்கும் அதிக விடுதலை நாட்களுக்குமாகவும் விரும்பி ஒரு தொழில் போல் செய்யும் பல ஆசிரியர்களுக்கு மத்தியில் மாணவர்களின் முன்னேற்றத்தை தமது குறிக்கோளாக கொண்டு அயராது உழைத்த எம் ஆசிரியர்கள் எம்முன் இமயம் போல் உயர்ந்து நிற்கிறார்கள்.

பொருளாதாரத்திலும் விஞ்ஞானத்துறை யிலும் முன்னேறிய நாடுகளில் கல்வி கற்றக விரும்பும் மாணவர் ஒருவரின் தனிமுயற்சியே அவரை முன்னுக்கு கொண்டு வந்துவிடும். அவர் தனது தனி முயற்சியால் பகுதி நேர வேலை செய்தோ, புத்தகங்களை



**திரு.தெ.து. ஜெயரத்தினம்**

வாங்கியோ, நூலகங்களில் இருந்து எடுத்தோ அல்லது இணையத்தளமூலமோ பெற்று படித்து முன்னுக்கு வரலாம். மூன்றாம் உலக நாடுகளில் பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளில் உள்ள மாணவர் ஒருவரின் கல்வி முன்னேற்றத்திற்கு அவரின் தனி முயற்சி மட்டும் போதாது. அங்கு ஆசிரியர்களின் பங்கு மாணவரது முன்னேற்றத்திற்கு மிகவும் அத்திய அவசியமானது.

நான் மகாஜனாவில் உயர்தரவகுப்பு படித்தபோது எங்களுக்கு கல்வி கற்பித்த திரு. பஞ்சநாதன், திரு. குலநாதன், திரு. நடராஜா மற்றும் செல்வி சின்னத்தம்பி போன்ற தன்நலம் கருதாது மாணவர்களது கல்வி முன்னேற்றத்திற்காக கண்ணும் கருத்துமாக அயராது உழைத்த ஆசிரியர்களது முயற்சியால்தான் என்னால் அந்நாளில் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் செல்லவும், இந்நாளில் கனேடிய மத்திய அரசின் கட்டிட நிர்மாணத் துறையில் முகாமையாளராக மிளிரவும் முடிகிறதும் என்றால் மிகையாகாது.

இதனை மனதில் கொண்டுதான் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவர் "இடித்துரைத்து நல்வழிகாட்டு பவரின் (ஆசிரியரின்) துணையைப் பெற்று நடப்பவர்களைக் (மாணவர்களை) கெடுக்குந் ஆற்றல் யாருக்கு உண்டு?" என்று தனது குறளில் கூறினாரா?

இடிக்குந் துணையாரை யாள்வரை யாரே
கெடுக்குந் தகைமை யவர் - குறள் 447

# நரம்புகள் வலிமை பெற

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

மனிதன் நலமுடன் வாழ மிகவும் முக்கியமானது உணவு, உடை, இருப்பிடம் இவைதான் முதலில் தேவை. உணவுக்கி முக்கியத்துவம் அதிகம் தரவேண்டும். உண்ணும் உணவுகளினால் தான் நோய்கள் வருகின்றன. ஒருசில நோய்கள் உடலின் சக்திகள் குறைவதினால் வருகின்றன. பொதுவாகவே இயற்கையாகக் கிடைக்கும் உணவில் அதாவது காய்கறிகளில் எல்லாவித விட்டமின்கள் (Vitamins) இருக்கின்றன. சிலவகையான காய்கறிகளை வேக வைக்காமல் அப்படியே உண்டால் முழு சத்துகளும் உடலிற்கு கிடைக்கின்றன.



மனிதனின் உடலில் 72 ஆயிரம் நாடி நரம்புகள் இருக்கின்றன. இவை அனைத்தும் வலுவுடன் இருப்பதில்லை. ஆரோக்கியமாக வாழ நரம்புகள் வலுப்பெறவேண்டும். அவ்வாறு நரம்புகள் அனைத்தும் உறுதியுடன் இருக்க நாம் கடைப்பிடிக்க வேண்டிய பயிற்சிகளில் யோகாதான் முதலிடம் பெறுகிறதென்பதை அறுதியிட்டுக் கூறலாம். அதனால் தான் தினமும் சில நிமிடங்களாவது யோகாசனத்தையும் மூச்சுப் பயிற்சியையும் செய்துவர வேண்டுமென்று நம் முன்னோறார்கள் நமக்கு உபதேசம் செய்துவிட்டுச் சென்றுள்ளனர்.

நரம்புகள் பலயீனமாக இருப்பதற்கு கல்சியம் சத்து குறைவாக இருப்பதும் ஒரு காரணமாகும். கல்சியம் அதிகமுள்ள உணவுகளை உண்பது மிகவும் நல்லது. யோகாவின் மூலம் உடலையும், நரம்புகளையும் பலப்படுத்த நாம் அதிக நேரத்தையோ பணத்தையோ செலவு செய்ய வேண்டியதில்லை. ஒரு சில ஆசனங்களே போதுமானவை. நரம்புகள் பலமிழக்கும் போது முதலில் உடலின் மேற்புறத்தில் வலிகளை ஏற்படுத்தும் பின்புதான் உடலின் உள்புறத்தில் நோய்கள் உருவாகத் தொடங்கும். இதனைத்தான் 'நரம்புத்தளர்ச்சி' என்று அழைப்பர்.

நரம்புகள் பலமடைவதற்கு செய்ய வேண்டிய யோகாசனப் பயிற்சிகளில் முதலில் செய்ய வேண்டியது சூரிய நமஸ்காரம் இதை தினமும் காலையில் 5 முதல் 10 சுற்றுகள் செய்வதன் மூலம் சூரிய சக்தி (Solar Energy) உடலில் கலக்கின்றது.

## யோகாசனங்கள்

1. உட்கட்டாசனம்
2. நின்றபாத ஆசனம்
3. சப்த வஜ்ராசனம்
4. பிறையாசனம்
5. சக்கராசனம்
6. திரிகோணாசனம்



7. பிராணயாமம்



8. நாடி சுத்தி

இவைபோன்ற ஆசனங்களை ஒரு ஆசிரியரின் உதவியுடன் பழகி பிராணயாமம் என்றும் முச்சுப்பயிற்சி 10 முதல் 20 சுற்றுக்களாவது செய்து வந்தால் சில நாட்களிலேயே நரம்பு மண்டலங்கள் அனைத்தும் புதுப்பொலிவு பெறுவதை உணரமுடியும். அத்துடன் நரம்புகளில் ரத்த ஓட்டம் சீரடைந்து நரம்புப் பிடிப்பு அதில் ஏற்படும் அழற்சி என்பன நீங்கி விடும்.

நரம்புக் கூட்டங்கள் பலயீனமடையும் போது அவைகளில் இறுக்கம் ஏற்படுகின்றது. இதனால் உடலிலுள்ள 44 மூட்டுகளும் இறுக்கமடைந்து அவற்றில் வலிகள் ஏற்படத் தொடங்குகின்றது. இதைத்தான் கீல்வாதம் எனறு (Arthritis) அழைப்பர். இது முதலில்



மூட்டுகளைத் தாக்கி இதயத்தை முற்றுகையிடும். அதன்பின் இதயநோய்கள் உருவாகும். அதுமட்டுமன்றி நரம்புகள் பலமிழக்கும்போது அதனைச் சார்ந்திருக்கும் எலும்புகளும் தேய்மான-மடைந்து உடலானது முதுமை அடையும் நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

எனவே உடலிள்ள 72 ஆயிரம் நரம்புகளுக்கு அதைச் சார்ந்த எலும்புகளுக்கும் அவற்றைச் சூழ்ந்திருக்கும் தசைகளுக்கும் தகுந்த பயிற்சியைக் கொடுப்பதன் மூலம் உடலை ஆரோக்கியமாகவும் அழகாகவும் வைத்திருக்கும் போது அவரவர் வாழ்வும் வளமாக அமைவது உறுதி.





ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm


YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033



நீரிழிவு நோய்க்கு நிலையான தீர்வு

விசேஷ பொதி + DVD
Special Package For Healing Diabetes

1. நீரிழிவு யாருக்கு வரலாம்
2. நீரிழிவு நோயாளிகள் தெரிந்துகொள்ள வேண்டியவை
3. நீரிழிவை வெல்லும் யோகாசன சிகிச்சை முறை
4. தகுந்த உடற் பயிற்சிகள்
5. முறையான உணவுத் திட்டம்
6. நீரிழிவு - தாம்பத்தியம், குழந்தை பாக்கியம்
7. நீரிழிவு - பெண்களுக்கு ஓர் எச்சரிக்கை
8. சிறுவர்களும் நீரிழிவு நோயும் (Childhood Diabetes)
9. நீரிழிவை நிர்மூலமாக்கும் சித்த மருத்துவம்
10. இதைவிட மிஞ்சும் இயற்கை மருத்துவம்

1 நாள் பயிற்சி முகாம்
தொடர்புகளுக்கு



யோகரத்னா N. செல்வசோதி
Home: 416 - 289.2033
Cell: 416 - 617.5721

# தமிழ் மக்களுக்கென...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

லும், தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களாகக் கருதப்பட்டார்கள். இதுதான் நடைமுறை உண்மையும்கூட.

இனப்பிரச்சினை தீவிரமடைந்துள்ள ஒரு நாட்டில் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களின் தலைவர்களாக யார் யார் இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு வரைமுறையும், வரையறையும் இருக்க வேண்டும் அல்லவா? பல்வேறு சந்திப்புகளில், பலதரப்பட்ட இராஜதந்திரிகள் மத்தியில் தமது மக்களின் பிரச்சினைகளை உறுதியாகவும் தெளிவாக வும் எடுத்துக் கூறத்தக்க தலைவர்கள் அல்லவா அந்த மக்களினால் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்? இத்தகைய தெரிவுக்கு அன்றைய தேர்தல் சூழலில் வாய்ப்பில்லாமல் போயிருக்கலாம். அது வேறு விடயம். ஆனால் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் இந்த விடயத்தில் தீவிர அக்கறையோடு செயற்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். சரியான அரசியல் வழிகாட்டல் இல்லாத ஒரு நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த சூழலின் ஒரு தொடர்ச்சி யாகவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் ஓர் அரசியல் ரீதியான வலுவற்ற ஓர் அமைப்பாக போருக்குப் பிந்திய சவால்கள் மிகுந்த சூழ்நிலையில் தோற்றம் காட்ட வேண்டிய நிலைமைக்கு ஆளாக நேர்ந்தது. இறுதிப் போருக்குப் பிந்திய பொதுத் தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள் அனைவரும் தரமான அரசியல் தலைவர்களே என்று துணிந்து கூற முடியாத துரதிஸ்டவசமான நிலைமையே இருக்கின்றது.

விடுதலைப் புலிகள் இல்லாத ஒரு சூழலில் தமிழ் மக்களின் அரசியல் தலைமை தமிழ்த்தேசிய கூட்டமைப்பே என கருதப்பட்ட போதிலும், தமிழ்த்தேசிய கூட்டமைப்புத்தான் வலுவான தலைமையா என்ற கேள்வி விசுவரூபமெடுத்து நிற்கின்றது. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்பது, இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஷ் அணி), டெலோ ஆகிய நான்கு கட்சிகளைக் கொண்ட ஒரு கூட்டு அமைப்பாகும். இது ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட வில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அடுத்ததாக தமிழ் அரசியல் கட்சிகளின் ஒரு கூட்டமைப்பாக விடுதலைப் புலிகளின் ஆசியோடு இது உருவாக்கம் பெற்ற அமைப்பாகும். இதற்கென ஒரு சின்னம் கிடையாது யாப்பு இல்லை. தலைமைப்பீடம் கிடையாது. இந்த நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்பது ஓர் அதிகாரமுள்ள ஓர் அரசியல் கட்சியா என்ற கேள்வியும் இருக்கின்றது. இத்தகைய ஒரு நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்குள் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பது முக்கியம் பெறுகின்றது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை அந்தக் கூட்டமைப்பின் உள்ளேயிருந்தும், வெளியில் அதன் அபிமானிகள், ஆதரவாளர்கள், தமிழ் மக்களின் அரசியல் நலனில் அக்கறை உள்ளவர்கள் என பலதரப்பட்டவர்களினா லும் எழுந்திருந்தது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்று பலராலும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்தது.

இருப்பினும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமையாகக் கருதப்படுகின்ற திருகோண மலை நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரு மாகிய ஆர்.சம்பந்தன், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளருமாகிய மாவை சேனாதிராஜா ஆகிய இருவரும், இதுவிடயத்தில் போதிய அக்கறை செலுத்தவே இல்லை. தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் அங்கம் பெற்றுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தவிர்ந்த ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் கூட்டமைப்பின் பல்வேறு முக்கியமான கூட்டங்களில் இதுபற்றி வலியுறுத்தி வந்த போதிலும், அதற்கு அங்கு உரிய வகையில் செவிசாய்க்கப்பட வில்லை. இந்த நிலையில் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான இறுதித் தினமாக ஜூன் 30 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. ஆகவே இந்த காலக்கெடுவுக்குள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக்கிவிட வேண்டும் என பலரும் துடித்தார்கள்.

ஆனால் சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோரின் மனப்போக்கு வேறுவிதமாக அமைந்திருந்தது. பழம் பெரும் கட்சியாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உயிர்கொடுத்து, அதனை முன்னிலைப்படுத்த வேண்டும்: ஆயுதமேந்திப் போராட்டம் நடத்திய – பல்வேறு நடவடிக்கைகளை ஆயுதமுனையில் மேற்கொண்டிருந்த ஈபிஆர்எல்எவ் மற்றும் டெலோ ஆகிய கட்சி உறுப்பினர்களை இந்த அமைப்பில் எந்தவிதமான பொறுப்புக்களுமின்றி வைத்திருக்க வேண்டும், அல்லது வெளியேற்றிவிட வேண்டும் என்ற உள் நோக்கமே காணப்பட்டது. இதன் காரணமாகத்தான் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதில் இழுத்தடிப்பு இடம்பெற்று வந்தது. அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான காலக்கெடு நெருங்க, நெருங்க தமிழ்த்தேசிய கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்ற நெருக்குத லும் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் கூடிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முக்கிய கூட்டத்தில் அந்தக் கட்சியின் தலைவராக சம்பந்தனை நியமிப்பதுடன், இணைத் தலைவர்களாக சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி ஆகியோரை நியமிப்பது என்றும், இணைச் செயலாளர்களாக மாவை சேனாதிராஜா, என்.சிவசக்தி ஆனந்தன், பிரசன்னா ஆகியோரை நியமிப்பது என்றும் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இந்தக் கூட்டத்திற்கு சம்பந்தன் வருகை தரவில்லை. கூட்டம் கொழும்பில் நடைபெற்ற அன்றைய தினம் அவர் அங்கு இருந்த போதிலும் கூட்டத்திற்குச் சமூகம் தரவில்லை. ஆனால், இணைத் தலைமை என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒரு தலைவரே இருக்க முடியும். அதுவும் தானே தலைவராக இருக்க வேண்டும் என்று விடாக்கண்டனாக சம்பந்தன் மறுநாள் தெரிவித்துவிட்டார். இந்த நிலைமையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருந்து என்ன செய்வது பிரிந்து போய் ஒரு கட்சியைப் பதிவு செய்துவிடலாமா என சுரேஷும், செல்வம் அடைக்கலநாதனும் அலைமோதிக் கொண்டிருக்க தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அதிமுக்கிய கூட்டம் 29ஆம் திகதி கொழும்பில் சம்பந்தனின் தலைமையில் கூடியது.

அதில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. தலைவ ராக சம்பந்தனைத் தெரிவு செய்வது, உபதலைவர் பதவியை அப்பாப்பிள்ளை விந-ாயகமூர்த்திக்குக் கொடுப்பது, இணைச் செயலாளர்களாக மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், ஆகிய மூவரையும் நியமிப்பது, துணைச் செயலாளர் பதவியை ஒரு பெண்மணிக்கு – திருமதி அந்தோனி மேரியம்மா என்பவருக்குக் கொடுப்பது, பொருளாளர்களாக தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகிய எஸ். சுமந்திரன் மற்றும் மட்டக்களப்பு நாடாளு மன்ற உறுப்பினராகிய பொன்.செல்வராஜா ஆகியோரை நியமிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவினையடுத்து அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான இறுதித் தினமாகிய ஜூன் மாதம் 30 ஆம் திகதி தமிழ்த்தேசிய கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உள்ளே வாதப் பிரதிவாதங்கள், முரண்பாடுகள் நிலவிய அதேவேளை, தமிழ் மக்களின் நன்மைக்காக அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் அதுவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இணைய வேண்டும் என்ற அழைப்பும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால் அவ்வப்போது விடுக்கப்பட்டு வந்தது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைக்க வேண்டும் என்ற அழைப்போடு ஈபிடிபி கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தா ஒரு கூட்டத்தைக் கூட்டினார். இந்தக் கூட்டத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற ஒரு பொதுவான திட்டத்தோடு தேர்தல் காலங்களில் மும்முரமாகச் செயற்பட்டு வந்த அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், தலைவர்கள் கலந்து கொண்டார்கள். ஆயினும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த பிள்ளையான் என்றழைக்கப்படும் சந்திரகாந்தன், கேணல் கருணா என்றழைக்கப்படுகின்ற முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. எனினும் இந்த அழைப்பை ஏற்று அடுத்தடுத்த கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி விருப்பம் தெரிவித்துள்ளது. இதேவேளை, தமது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு டக்ளஸ் தேவானந்தா சம்பந்தனை தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு அழைப்பு விடுத்துள்ளார்.

போர்க்காலத்தில் நிலவிய நெருக்கடிகளை விட, போரினால் இடம்பெயர்ந்துள்ள மக்கள், போருக்குப் பிந்திய காலத்தில் அதிக நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக் கின்றார்கள். அவர்களது நிலங்கள் பறிக்கப்படுகின்றன. கைவிட்டுவிட்டு வந்த பொருட்கள், உடைமைகள் கொள்ளையிடப் படுகின்றன. சீரான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அரசாங்கத்தினால் செய்து கொடுக்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. போரின்போது உயிரிழந்தர்கள், இழக்கப்பட்ட உடைமைகள் என்பவற்றிற்கான நட்டயீடுகள் கொடுக்கப்படுவது பற்றிய பேச்சே கிடையாது. போரினால் பாதிக்கப்பட்ட தொழிலதிபர்கள், வர்த்தகர்கள் மீண்டும் தமது தொழில்களையும், வர்த்தக நடவடி-எக்கைகளையும் ஆரம்பிப்பதற்குத் தேவையான அடிப்படை வேலைத்திட்டங்கள் என்பன பற்றி கவனம் செலுத்தப்படவில்லை. மாறாக மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக இடம்பெயர்ந்த மக்களை மேலும், மேலும் கஸ்டப்படுத்தும் வகையிலா ன பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

போர் முடிந்துவிட்ட போதிலும், போர்ப்பிரதேசங்களின் எல்லா இடங்களிலும் இராணுவம் பெரும் எண்ணிக்கையில் நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள். காட்டுப் பகுதிகளில் முக்கியமான விவசாய நீர்ப்பாசனக் குளங்களின் அருகில் முக்கிய மான இராணுவ தளங்கள் அமைக்கப்படு கின்றன. இவ்வாறு இடம்பெயர்ந்துள்ள மக்களின் மறுவாழ்வுக்குரிய நடவடிக்கை களுக்கு முரணான வகையில் செயற்பட்டு வருகின்ற அரசாங்கத்தின் போக்கை எதுவித மறுப்புமின்றி ஏற்றுக் கொண்டு செயற்படு கின்ற அமைச்சர் டக்ளஸ் தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். மறுபக்கத்தில் இலங்கை அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள கே.பி எனப்படும் குமரன் பத்மநாதனின் ஏற்பாட்டில் புலம் பெயர்ந்த தமிழர்களின் சார்பிலான விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் எனச் சொல்லப்படு கின்ற 9 பேர் கொண்ட குழு இலங்கை அரசாங்கத் தின் ஏற்பாட்டில் இலங்கைக்கு வந்து வன்னிப்பிரதேசங்களையும் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களையும் பார்வையிட்டு மக்களைச் சந்தித்துள்ளது.

கே.பி தலைமையில் புலம்பெயர்ந்த மக்களின் முக்கியஸ்தர்களை உள்ளடக்கிய ஓர் அமைப்பை உருவாக்கி கே.பியை வடமாகாண முதல்வராக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக் கப்படுகின்றது. ஆக விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த கேபி இலங்கை அரசாங்கத்தின் ஆசியோடு தமிழ் மக்களின் தலைவராகப் போகின்றார் என்பது பிந்திய தகவல்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடுகளும், அவர்களுக்கான அரசியல் தலைமைகளும் இப்படித்தான் இன்று இருக்கின்றன. கூழாகிப் போயிருக்கின்ற இந்த தமிழ் அரசியல் குட்டைக்குள் தமிழ் மக்களுக்கான தகுதிவாய்ந்த வலிமையுள்ள ஓர் அரசியல் தலைமை தலை நிமிர்த்துமா? இது இன்றைய இலங்கையில் எழுந்துள்ள மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாக இருக்கின்றது.

**GOLD INTRA**

Spirituals Power



> **Body Treatment**
> **Weight Lost Treatment**
> **Lucky Facial**

• Relief Body Pain (வலி நிவாரணம்)

By Appointment: **Betty: 416.299.3599 / Cell: 416.562.9638**

**145 Vally Stream Dr., Scarborough, Ont. M1V 2A4**

**MIDDLEFIELD & MCNICOLL**




# ராவணன் - திரை விமர்சனம்



மகாபாரதம் (தளபதி), சத்யவான் சாவித்ரி (ரோஜா), மும்பை குண்டு வெடிப்பு (பம்பாய்), உல்பா விவகாரம் (உயிரே), திருபாய் அம்பானி (குரு) வரிசையில், மற்றுமொரு மணிரத்னம் திரைப்படம். ராமா யணக் காவியத்தில், சீதையை ராவணன் கவர்ந்து செல்லும் படலத்தை கொஞ்சம் மாற்றி, 'சந்தனக் கடத்தல்' வீரப்பனையும் சேர்த்து, இன்றைய நிலைமைகளுக்குத் தக்க ஒரு கதையை உருவாக்கியிருக்கிறார். மணிரத்னத்துக்கு என்று ஒரு '∴பார்முலா' இருக்கிறது. அவரது எல்லா திரைப்படங்களிலும் தொடர்ந்து வருகிற, 'மணியின் ஸ்டைல் ஆ∴ப் மேக்கிங்' என்று புகழப்படுகிற அந்த '∴பார்முலா' அட்சரம் பிசகாமல் அப்படியே இந்தப் படத்திலும் இருக்கிறது.

மேகமலைப் பகுதியில் வசிக்கும் பழங்குடி இன மக்களால் கொண்டாடப்படுபவன் வீரா என்கிற வீரைய்யா (விக்ரம்). மலைவாழ் மக்களின் ஆதர்ஷ நாயகன்; ஊர் மக்களுக்கு நல்லவன்; ஆனால், அரசாங்கத்தின் பார்வையில் அவன் ஒரு தீவிரவாதி. தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்த வீரய்யாவின் தங்கை வெண்ணிலா (ப்ரியாமணி) ஒரு பணக்கார வீட்டுப் பையனை காதலிக்கிறாள். அந்தப் பையனின் அப்பா கைய, கால பிடிச்சி; எப்படியோ சம்மதம் வாங்கி; தங்கைக்கு மேள, தாளத்துடன் கல்யாணம் நடக்கிற நேரத்தில், வீரய்யாவை 'என்கவுண்டரில்' போட்டுத்தள்ள திட்டமிடும் காவல்துறை அதிகாரி தேவ் (பிரித்விராஜ்), கல்யாண மண்டபத்துக்குள்ள புகுந்து வீரய்யா கழுத்தில் துப்பாக்கியால் சுடுகிறார். இந்தக் களேபரத்தில் பயந்து போன வெண்ணிலாவின் பணக்கார காதலன், அவளை விட்டுட்டு ஓடிப் போகிறான். வீராவைக் கண்டுபிடிக்க அவனுடைய தங்கை வெண்ணிலாவை திருமணக் கோலத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் அழைத்துச் செல்கின்றனர். அவளை காவல்நிலையத்துக்கு தூக்கிட்டு போகும் காவலர்கள், அங்கு அவளைக் கற்பழித்து சின்னா, பின்னமாக்கிவிடுகிறார்கள். இதனால், மானம் போய்விட்டது என்று மனசு உடைந்து, கழுத்தில் குண்டு பாய்ந்த நிலையில் தப்பிய வீராவுக்கு, தனக்கு நேர்ந்த கொடுமையைச் சொல்லிவிட்டு கிணற்றில் விழுந்து உயிரை விடுகிறாள் வெண்ணிலா.

தன் தங்கையைப் பாழாக்கிய அதிரடிப்படையினரையும் அதன் தலைவரான தேவ் ஆனந்தையும் பழிவாங்க கிளம்புகிறான் வீரா. தேவ் ஆனந்த் மனைவி ராகினியை (ஐஸ்வர்யா ராய்) கடத்தி காட்டுக்குள் கூட்டிக்கொண்டு போகிறான். தேவதை மாதிரி இருக்கிற ராகினியின் துணிவும் அழகும் வீராவை கவர்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அவனுக்கு காதல் ஏற்படுகிறது. ஆனால், இந்த பொருந்தாத காதல் நடைமுறைக்கு சரி வராது என்று நினைக்கிறான். மனைவியை மீட்க சிறப்பு அதிரடிப்படையோடு காட்டுக்குள் வருகிறார் தேவ் ஆனந்த்.

தொடர்ச்சி 20ம் பக்கம்






# ராவணன்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

பதினான்கு நாட்கள் நீடிக்கும் தேடுதல் வேட்டையில் அதிரடிப்படையை மொத்தமாக அழிக்கும் வீரா, தேவ் ஆனந்தை மட்டும் கொல்லாமல் விடுகிறான். ஒரு கட்டத்தில் விக்ரமின் தம்பியையும் பிருத்வி கொல்கிறார். ஆனாலும், என் கணவரின் உயிருக்கு உத்தரவாதம் கொடுத்தால், நான் இங்கேயே இருந்திடுவேன் என்று ஒரு கட்டத்தில் ராகினி சொல்ல, அதையே தனக்குக் கிடைத்த வெற்றியாக நினைத்து ராகினியையும் விட்டுவிடுகிறான்.



- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -

ரயிலில் ராகினியோடு ஊர் திரும்பும் ஆனந்த், இத்தனை நாள் வீரய்யாவுடன் இருந்த மனைவியின் கற்பை சந்தேகப்படுகிறான், தேவ். "இந்த 14 நாளில் வீரா உன்னைத் தொடவே இல்லையா?" என்று அவன் கேட்க, ரயிலை நிறுத்தி இறங்கிவிடுகிறாள் ராகினி. மீண்டும் வீராவைத் தேடி, அவன் இடத்துக்கு வந்து, அவனிடம், "என்னைப் பற்றி என் கணவரிடம் என்ன சொன்னாய்" என்று கேட்கிறாள். கணவன் தன்னைச் சந்தேகப்பட்டதாக ராகினி சொன்னாலும், தேவ் ஆனந்த் திட்டத்தை புரிந்துகொள்கிறான் வீரா. ராகினியின் மூலம் தன்னைப் பிடிக்க திட்டமிட்டிருக்கிறார் எஸ்.பி. என்பதை உணர்ந்துகொள்கிறான். அதே நேரத்தில் சிறப்பு அதிரடிப்படையுடன் வரும் தேவ் ஆனந்த், ராகினியின் எதிர்ப்பையும் மீறி வீராவைச் சுட்டுக் கொல்கிறான்.

விக்ரம், ஐஸ்வர்யா ராய், பிரபு, கார்த்திக், வையாபுரி, ஜான்விஜய், ப்ரியாமணி, ரஞ்சிதா, முன்னா... என்று ஒரு நட்சத்திரப் பட்டாளமே படத்தில் இருக்கிறது. இவ்வளவு பேர் இருந்தாலும் இயல்பாகவே நம்மைக் கவர்வது 'உலக அழகி' ஐஸ்வர்யா ராய்தான். நாற்பது வயது! ஆனால், 'இருவரில்' பார்த்த அதே வசீகரம்; முகத்தில் ஒரு சிறு சுருக்கம் இல்லை. பல காட்சிகளில் அந்த அழகான பூனை கண்களே நடித்து விடுகிறது. விக்ரம் மீது காதல் கொள்ளும் காட்சிகளில் அந்தக் கண்களை இன்னும் அழகாய் கேமராவில் சிறை பிடித்திருக்கிறார் சந்தோஷ் சிவன். கோபம், அமைதி, சிரிப்பு, தவிப்பு, தாபம், வெறி, சோகம் என நடிப்பின் அத்தனை பரிமாணத்திலும் விக்ரம் கலக்குகிறார். ராவணனின் தங்கையாக வரும் ப்ரியாமணி (சூர்பனகை), சில காட்சிகளில் மட்டும் வந்தாலும் நன்றாகச் செய்துள்ளார். பிரிதிவிராஜ், ராமர் வேஷம் போட்டதாலோ என்னவோ, மீசை இல்லாத காவல்துறை அதிகாரியாக வருகிறார். இந்தக் கதா பத்திரத்திற்கு வேறு யாராவது நடித்திருந்தால் இன்னும் நன்றாக வந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றும் நிலையில்தான இவரது நடிப்பு இருக்கிறது. கார்த்திக், அனுமானை நினைவுப்படுத்தும் காட்டிலாகா அதிகாரியாக வருகிறார். அனுமான் என்பதற்காக ஆரம்பக் காட்சிகளில் தாவித்தாவிக் குதிப்பது கொஞ்சம் அதிகம். ஐஸ்வர்யா ராயுக்கு அடுத்து அதிகம் கவர்வது 'நித்தியானந்தா' புகழ் ரஞ்சிதாதான். ஓரிரு காட்சிகளே வந்தாலும், ரஞ்சிதா திரையில் தோன்றியதும் அரங்கத்தில் விசில் வானை பிளக்கிறது.

படத்தின் உண்மையான கதாநாயகர்கள் ஒளிப்பதிவாளர்கள் சந்தோஷ் சிவனும் மணிகண்டனும்தான். அழகான பச்சை, பசேல் காடுகள், மலை மேடுகள், கொட்டும்



அருவிகள், அதிக வெளிச்சமும் இல்லாமல் அதிக குளிரும் இல்லாமல் இருக்கிற சீதோஷ்ண நிலை... இவை எல்லாவற்றையும் மிக அழகாக பதிவு செய்திருக்கிறார்கள். அடர்த்தியான ஒரு காட்டுப் பிரதேசத்துக்கு சுற்றுலா சென்றுவிட்டு வந்த மாதிரி உணர்வு. சமீர் சந்தாவின் கலை இயக்கமும் பிரமிக்க வைக்கிறது. குறிப்பாக, அந்த சிவன் சிலையும், 'கோடு போட்டா' பாடல் காட்சியில் வரும் கோயில் பகுதியும் அற்புதமான உழைப்பு.

ஏ.ஆர்.ரகுமான் இசை. காட்சிகளுக்குச் சரியாக பொருந்துற மாதிரியான பாந்தமான பின்னணி இசை; 'உசுரே போவுது...' பாடல்... கண்டிப்பாக ரசிகர்கள் மனதை கவரும்.

வசனம் சுஹாசினி.... படம் சரியாக போகவில்லை என்றால், அதற்கு முதல் காரணம் இவர்தான். மணிரத்னம் படங்கள் என்றாலே வசனம் துண்டு, துண்டாக மண்ணோடு ஒட்டாமல்தான் இருக்கும் என்று; ஏற்கெனவே மனதை திடப்படத்திக்கொண்டு சென்றால், இந்தப் படத்தில் வசனம், இன்னும் துண்டு துண்டாக புரியாமல் இருக்கிறது. சில காட்சிகளில் நீளமாகவும் குழப்பமாகவும் இருக்கிறது. கதை கூறும் முறையிலும் கோர்வையில்லாமல் காட்சிகளும் உணர்வுகளும்

தொடர்ச்சி 23ஆம் பக்கம்


TRIDEL®
BUILT FOR LIFE
Kennedy & HWY 401
Toronto.
VENTUS2
At MetroGate
Special VIP Preview
On Saturday July 3, 2010
Time: 11:00 am - 5.00 pm
Starting From $199,900 Completion Spring 2013
1st BMW
2nd Cuba Visit for two
3rd 42"LCD TV
10 Other Prizes
BUY THROUGH OUR BROKERAGE,YOU HAVE A CHANCE
TO WIN...
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE GTA REALTY INC., *BROKERAGE
1711 McCowan Rd., #206, Toronto, ON M1S 3Y3 419.321.6969
*Independently Owned and operated. *some conditions may apply

# முத்துப்பேட்டை - தண்ணீருக்குள் மிதக்கும் காடுகள்

தண்ணீருக்கும் மரங்கள் அடர்ந்து காணப்படும் அலையாத்தி காடுகள், தமிழகத்தில் கிழக்கு கடற்கரையோரமாக நிறைய உள்ளன. அனைவருக்கும் தெரிந்தது சிதம்பரம் அருகில் உள்ள பிச்சாவரம்; தெரியாதது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள முத்துப்பேட்டை. ஓர் அற்புத இடம். இத்தனைக்கும் பிச்சாவரம் அலையாத்திக் காடுகளைவிட சுமார் 4 மடங்கு பெரியது முத்துப்பேட்டை அலையாத்திக் காடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், சாதாரண மக்களுக்குத்தான் தெரியாதே தவிர, உலக-ளவில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், தாவரவியல் ஆய்வாளர்கள், பறவையின ஆர்வலர்கள் மத்தியில் புகழ்பெற்றது முத்துப்பேட்டை. ஒருவகையில் நிறைய பேருக்கு தெரியாமல் இருப்பதே முத்துப்பேட்டையின் அழகும்கூட. காடுகளுக்கு ஊடான பயணத்தில் அந்தப் பரந்த தண்ணீரும் தனிமையும் அமைதியும் நமக்கு வேறொரு உலக அனுபவத்தைத் தரும்.

இந்தப் பயணத் தொடரில் நாம் ஏற்கெனவே முத்துப்பேட்டையை தொட்டு சென்றிருக்கிறோம். கோடியக்கரை, லகூன் தீவு (பிரபாகரன் தீவு) ஆகியவை முத்துப் பேட்டைக்கு அருகில்தான் உள்ளன. பட்டுக் கோட்டையிலிருந்து 26 கிலோமீட்டர் தொலை வில் உள்ளது, முத்துப்பேட்டை. பட்டுக் கோட்டையிலிருந்து முத்துப்பேட்டை நோக்கி செல்லும் பயணமே ஒரு இனிமையான அனுபவமாக இருக்கும். இரண்டு பக்கங்களிலும் காவேரிப் பாசன ஊர்கள்தான். வெள்ளந்தியான கிராமத்து மனிதர்கள்; பச்சைப் பசேல் வயல் வெளிகள்; ஈரப்பதமான காற்று.

## வழிப்போக்கன்

முத்துப்பேட்டை, ஒரு அழகிய சிறிய கிராமம். கடல் முகதுவாரமும், பரந்து விரிந்த அலையாத்திக் காடுகளும், பல்வேறு நாடுகளில் இருந்து விருந்தாளிகளாக இந்த கிராமத்துக்கு வருகை தரும் அரிய பறவையினங்களும் முத்துப்பேட்டையின் ஆச்சரியங்கள். குறிப்பாக சதுப்பு நிலக்காடுகள் தனித் தனித்தீவுகளாக காட்சியளிப்பது முத்துப்பேட்டையின் சிறப்பம்சமாகும். உலகின் பல்வேறு பகுதியிலிருந்தும் பலவகைப் பறவை இனங்கள் குறிப்பிட்ட சில காலங்களில் இங்கு வந்து தங்குகின்றன.

தாவரவியல் ஆராய்ச்சியாளர் களுக்கும் முத்துப்பேட்டை ஒரு சுரங்கம். கடலுக்கு அருகில் இருப்பதால் உப்பைத் தாங்கவல்ல தாவரங்கள் தான் முத்துப்பேட்டை யில் அதிகம் காணப்படுகின்றன; இவை பெரும்பாலும் வெப்ப மண்டல, மித வெப்ப மண்டலப் பகுதிகளில் கடலோரங்களில் காணப்படுபவை. ஆழம் அதிகமில்லாத சதுப்பு நிலத்திலும் உவர் நீரிலும் வளரும் மரங்கள் அல்லது புதர்கள். அலையின் வீச்சு, வண்டல் படிவு, உறைவிடப் பகுதி, இவற்றைத் தவிர களிமண் - பாங்கான அடித்தளம் உள்ள இடத்தில் தான் வளர்வன என்பதால் மணற்பாங்கான அல்லது பாறைகள் நிறைந்த கரையில் இவை வளராது. இந்த மரங்கள்



தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 79

அடர்ந்த காடு ஆச்சரியம் என்றால் மிகை யில்லை. இந்த தாவர வகைகளுக்கூடான கழிமுகத்துவார நீர் நிலைப் படகுப் பயணம் இனிமையானது.

முத்துப்பேட்டை அலையாத்திக் காடுகள் சுமார் 120 சதுர கிலோ மீட்டர் அளவுக்குப் பரந்து விரிந்துள்ளது. எங்கு பார்த்தாலும் தண்ணீரும் திட்டு திட்டாக காடுகளும்தான் காண்பவரின் கண்களைக் கொள்ளை கொள்ளும். இந்தச் சதுப்பு நிலக் காடுகளில் அலையாத்தி எனப்படும் மரங்களே அதிகம். 95 சதவீதம் உள்ளது. மேலும் தண்டல், தில்லை, நரிக்கந்தல், நீர்முள்ளி உள்ளிட்ட பலவகை மரங்களும் உள்ளன. கடலில் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் மீன்கள் இனப்பெருக்கக் காலத்தில் இந்த அலையாத்திக் காடுகளுக்கு வந்து தங்கி இங்கு மரங்களிலிருந்து விழும் இலைகள் உள்ளிட்டவற்றை உண்டு நன்கு வளர்ந்து மீண்டும் கடலுக்குச் செல்கின்றன. நசுவினி ஆறு, பட்டுவான்ஜி ஆறு, பாமணி ஆறு, கோரையாறு, கண்டன்குறிச்சி ஆறு, மரைக்கா கோரையாறு, கீழ்த்தஞ்சை ஆறு உள்ளிட்ட ஆறுகள் இந்தச் சதுப்பு நிலப் பகுதியில் கலந்து அதன் பின்னர்தான் கடலில் கலக்கின்றன.

முத்துப்பேட்டை ஜாம்புவானோடை பகுதியிலிருந்து மோட்டார் படகில் சென்றால் சுமார் ஒரு மணி நேரத்தில் 'தலைமை முனை' என்னும் இடத்தை அடையலாம். இங்கு அலையாத்திக் காடுகளின் உள்ளே சென்று பயணிகள் பார்வையிடும் வகையில் 162 மீட்டர் நீளத்துக்கு மரத்தாலான நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. இது போன்று இந்தியா வில் வேறு எங்கும் அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உலகளவிலும் ஆஸ்திரேலியா, மலேசியா, பிலிப்பின்ஸ் ஆகிய



நாடுகளில் மட்டும்தான் இது போன்ற நடை-பாதை அமைக்கப்பட்டுள்ளது என முத்துப்பேட்டை வன இலகா அதிகாரிகள் சொல்கிறார்கள். இங்கு சுற்றுலாப் பயணிகள் ஓய்வெடுக்கும் வகையில் ஓய்விடமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அலையாத்தி காடுகள் பறவைகளுக்கு ஒரு பெரிய சரணாலயமாக விளங்குகிறது. ஆயிரக்கணக்கான வெளிநாட்டு பறவைகள் இங்கு வந்து தங்கி குஞ்சுகள் பொரித்து, மீண்டும் தாய் நாட்டிற்கு திரும்புகின்றன. படகில் பயணம் செய்யும் போது மரங்களின் மேல் ஓய்வெடுக்கும் இந்தப் பறவைகளை நாம் காணலாம். குறிப்பாக நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் சைபீரியா, ரஷியா, ஈரான், ஐரோப்பிய நாடுகளிலிருந்து சுமார் 80 வகையான பறவைகள் இங்கு வருகின்றன. இவற்றில் பூநாரை, சாம்பல்நாரை, வண்ணநாரை, பாம்புத்தாரா, கரண்டிமூக்கன் உள்ளிட்ட பல்வேறு அரிய வகை பறவைகளும் அடங்கும்.

படகில் பத்து கிலோமீட்டர் தொலைவிற்கு பயணம் செய்து திரும்புவதே நம்மை போன்றவர்களுக்கு, வாழ்க்கையில் ஒரு பெரிய சாதனையாக இருக்கும். அதுவும் இத்தனை பறவையினங்களைப் பார்த்துக்கொண்டே காடுகள் ஊடாக தண்ணீரில் பயணிப்பது வாழ்வில் என்றுமே மறக்காத மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

முத்துப்பேட்டை அலையாத்தி காடுகள், சுனாமி பேரலைகளைத் தடுத்து, முத்துப்பேட்டை மற்றும் அதன் சுற்றுப்புறங்களையும் காப்பாற்றிய பெருமை வாய்ந்ததும்கூட. தமிழ்நாட்டில் இந்த கடற்கரையோரம் மட்டும்தான் சுனாமி பேரலை தாக்குதலிருந்து தப்பியது.

முத்துப்பேட்டையின் பிரதானமானது மீன் பிடித்தல்தான்; தேங்காய் வியாபாரமும் அதிகம் உள்ளது. இந்தியாவின் பல மாநி-லங்களுக்கும் முத்துப்பேட்டையிலிருந்து தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. 73 வகையான மீன்களும், 6 வகையான இறால்களும் இந்தப் பகுதியில் வாழ்கின்றதாக சொல்கிறார்கள்.

இயற்கை நமக்குத் தந்த பாதுகாப்பு அரணை, இயற்கை எழில் கொஞ்சும் அந்தப் பசுமையைப் பார்த்து ரசிக்கலாம். உங்கள் அடுத்த இந்தியப் பயணத்தில் முத்துப் பேட்டையை இப்பொழுதே குறித்துக்கொள்ளுங்கள்.

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

முத்துப்பேட்டையிலிருந்து சுமார் 125 கி.மீ. தொலைவில் திருச்சி பன்னாட்டு விமான நிலையமும், 340 கி.மீ. தொலைவில் சென்னை அண்ணா விமான நிலையமும் உள்ளது. 70 கி.மீ. தொலைவில் தஞ்சாவூரும், 26 கி.மீ. தொலைவில் பட்டுக்கோட்டையும் உள்ளது. முத்துப்பேட்டையிலிருந்து தமிழகம் முழுவதும் இணைப்பு பேருந்துகள், இரயில்வே வசதியும் அமைந்துள்ளது. அலையாத்திக் காடுகளைப் பார்க்கவரும் சுற்றுலாப் பயணிகள், முத்துப்பேட்டை வந்து, அங்குள்ள வனத்துறை அலுவலகத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு, மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படும் மோட்டார் படகுகளில் சென்று அழகு கொஞ்சும் அலையாத்திக் காடுகளை சுற்றிப் பார்க்கலாம். முத்துப்பேட்டை சிறிய கிராமம் என்பதால், பட்டுக்கோட்டையிலேயே உணவுப் பொட்டலம் வாங்கிக்கொண்டு வந்துவிடுவது நல்லது.



# டிஸ்னி உலகம் - புளோரிடா

## அமெரிக்கப் பயணம் - 8




**அட்வென்சர் லாண்ட்** (Adventure land) - இது மஜிக்கிங்டமிலுள்ள ஒரு பகுதியே. இங்கு ஆபிரிக்கா, ஆசியா, மத்தியதரைக்கடல் நாடுகள் தென்னமெரிக்கா, தென்பசிபிக்கு ஆகியவற்றிலுள்ள அடர்ந்த காட்டுப்பகுதிகளை அப்படியே உருவாக்கி இருக்கிறார்கள். அங்குள்ள மரஞ் செடி கொடிகளெல்லாம் வளர்க்கப்படுகின்றன. ஆரம்பத்தில் இக்காடுகளிலுள்ள மிருகங்களைக் கொண்டு வந்து வளர்ப்பதற்கான திட்டம் இருந்தது. பின்னர் பல காரணங்களுக்காக அது கைவிடப்பட்டது. இதற்குப் பதிலாகச் சில இயந்திரமுறையில் இயங்கும் விலங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை அப்படியே தத்துரூபமாக அமைந்துள்ளன. இக் காடுகளுக்குசூடாகப் படகில் பயணஞ் செய்து யாவற்றையும் கண்டு களிக்கலாம். இங்கு டார்சானின் மரவீடு சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. 100 ஆண்டுகளுக்குமேல் பழமைவாய்ந்த ஒரு மிகப் பெரிய மரத்தின் மேல் கிளைகளை அடிப்படையாக வைத்து பல்வேறு படிநிலைகளில் ஒரு மாடி வீடு அமைக்கப்பட்டுள்ளது. கீழே முதலாம் படி

**- துறையூரான் -**

நிலையில் ஒரு சமயலறை அமைக்கப்பட்டுள்ளது. இதில் அந்நாட்களில் உபயோகிக்கப்பட்ட பல்வேறு சமையல் பாத்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் மாடியில் கிளைகளுக்கிடையில் படுக்கையறை அமைக்கப்பட்டுள்ளது. அங்கும் அக்கால கட்டில்கள் விளக்குகள் முதலியன வைக்கப்பட்டுள்ளன. அக்கால மக்கள் எவ்வாறு பெரிய மரங்களை உறைவிடங்களாக அமைத்திருந்தனர் என்பது நன்கு விளங்குகின்றது. இம்மரத்தின் அடிப்பாகத்தைக் கட்டிப் பிடிப்பதற்குக் குறைந்தது 10 பேராவது தேவையென்றால் அதன் உயரத்தையும் பருமனையும் உங்களால் ஊகித்துப் பார்க்க முடியுமென நினைக்கிறேன்.

மேலும் இந்தியானா ஜோன்ஸ் பற்றிய வரலாற்றுக்காட்சிகளும் உள்ள ஒரு காட்சிச் சாலையும் இங்குள்ளது. மிகவும் புதுமையான நவீன தொழில்நுட்பமுறையில் இயங்கும் பல்வேறு பறவைகளைக் கொண்ட காட்சி அறை 'ரிக்கி அறை' எனப்படுகிறது. இங்கு ஆரம்பத்தில் நான்கு மக்கோ (Macow) பறவைகளின் உயிர்வடிவம் போன்றமைக்கப்பட்டுள்ள பறவைகள் பேசும் சிறு நிகழ்ச்சியொன்று அமைந்துள்ளது. இப்பறவைகள் ஓடியோ அனிமோற்றோனிக் (Audio Animatronic) என்ற நவீன முறையில் இயங்குகின்றன. இவை வாழும் பொலினிசியாக் சூழலில் யாவும் அமைக்கப்பட்டுள்ளன. அந்நாடுகளில் காணப்படும் தாவரங்கள் யாவும் இங்கு வளர்க்கப்படுகின்றன. இவை பறப்பது, பாடுவது, நடனமாடுவது யாவும் கணினியால் இயக்கப்படுகின்றது. பார்த்தால் உண்மையான பறவைகளைப் போன்றே காட்சியளிக்கின்றன. இக்காட்சி குழந்தைகளைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

இந்தக் காட்சி ஜுன் 1963 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது WED நிறுவனத்தால் கண்டு பிடிக்கப்பட்டது. இக்காட்சிக்கு ஆதரவு வழங்குவோர் டோல்



உணவக நிறுவனத்தினர். இது ஏறக்குறைய 18 நிமிடங்களுக்கு நடைபெறுகிறது. இக்காட்சியில் 54 பாடும் பறவைகள், 7 சுவர்க்கலோகப் பறவைகள், 8 மக்கோப் பறவைகள், 9 கவர்வால் பறவைகள், 6 கொக்கற்றூப் பறவைகளும் 20 பல்வேறு வகையான உஷ்ணவலயப் பறவைகளும் பங்கு பற்றுகின்றன. இது உண்மையிலேயே எல்லோரையும் கவருகின்ற நிகழ்ச்சி. இதையாவரும் கண்டுகளிப்பது அவசியம்.

## இராவணன்...

துண்டாடப்படுகின்றன. நன்கு தெரிந்த கதையை படமாக்குவது சவால்கள் நிறைந்த ஒரு தனி பாணிதான். ஆனால், அடுத்தடுத்த காட்சிகளை சுலபமாக கணிக்க முடிவதும், கதையும் நம் கணிப்பை பொய்யாக்காமல் அப்படியே நகர்வதும், சுவாரஸ்யத்தைக் குறைக்கிறது. படத்தின் இன்னொரு முக்கியமான குறை கதை நிகழும் நிலம். திருநெல்வேலிக்கு அருகிலுள்ள விக்கிரமசிங்கபுரம் என்ற ஊரில் கதை நடக்கிறது. ஆனால், திருமண ஊர்வலத்தில் வாரணாசியில் உள்ளது போன்ற கோயில்களும் கோபுரங்களும் பின்னணியில் வருகின்றன. வட இந்தியர்களைப் போலதான் பலநேரம் எல்லோரும் உடை உடுத்தியிருக்கிறார்கள். செலவைக் குறைப்பதாக நினைத்துக்கொண்டு, ஹிந்திக்கும் தமிழுக்கும் சேர்ந்து ஒரே நேரத்தில் படம் எடுப்பதால் வரும் பிரச்சினை! (ஹிந்தியில் விக்ரம் பாத்திரத்தை அபிஷேக்பச்சன் செய்திருக்கிறார். பிருத்விராஜுக்குப் பதில் விக்ரம்.)

ஆனாலும் ராவணன், வாகை சூடிய வீரன்!




MILLIKEN MARKET

Open Every Saturday & Sunday 10 AM to 6 PM

*Door Prizes Every Hour**

*BOOTHS FOR RENT*

NOW OPEN

Kennedy Rd · Old Kennedy Rd · Entrance · Steeles Ave East · Silver Star

Under New Management

31 OLD KENNEDY ROAD

Over 50,000 Sq. Ft. Plenty of Parking

TEL: 647-998-2338

* Limited Number of Prizes Available, some conditions apply

# BASEMENT RENT

**BELLAMY & LAWRENCE**
2 large Bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. August 01, 2010.
416.438.8979 / 416.909.5189

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to Malvern mall, 24 hrs. bus, public school. Avail. immediately.
416.335.3638 / 647.519.3638

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt. apt. for rent. Parking & laundry. Close to bus, subway, stores, school, etc. Avail. immediately.
647.284.6327 / 416.264.7628

**EGLINTON & MAVIS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to school, bus, stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.668.4596

**FINCH & McCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, bus, stores. Avail. August 01, 2010.
647.829.9004 / 416.829.9993

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
416.569.7307/416.289.8728

**MIDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities & bus.

**KENNEDY & DENISON**
1 Room in a bsmt for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.878.5144

**PHARMACY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. No pets & No smoking. Family preferred. Avail. August 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.750.4077

**FINCH & KENNEDY**
2 Bedroom bsmt. for rent. Including bills, cable, parking. Close to TTC, school park, tamil stores, temple. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.558.8562

**NEILSON & SHEPPARD**
1 Large Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to Malvern mall, 24 hrs. bus, school, Tamil stores. Avail. July 05, 10.
தொடர்புகளுக்கு: 416.669.3859

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC. Single girl or single boy preferred. Avail. immediately.
416.587.5843 / 905.472.1454

**MCCOWAN & 16TH AVE.**
இரண்டு அறைகள் கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to bus, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**KENNEDY & DANFORTH**
1 Bedroom bsmt for rent. 2 Parking, washer, dryer. Avail. Close to TTC. Avail. July 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.717.8979

**MARKHAM & PAINTED POST**
Bsmt for rent. Sep. entrance. All bills inclusive. Close to TTC, mall, bank, school & groceries. Cable inclusive. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.509.5664

**WARDEN & FINCH**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall. Avail. Anytime.
416.497.7660 / 416.889.3191

**McCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Close to TTC. Avail. Anytime
தொடர்புகளுக்கு: 416.836.0010

**DENISON & McCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5273

**BRIMLEY & LAWRENCE**
3 Large bedroom bsmt for rent. Sep. entrance. No smoking & No alchachole. Rent $700 + 40% utilities. Close to TTC, public school, hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

**BIRCHMOUNT & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Attached washroom, Double garage. Close to all amenities.
Pl. Call: 416.293.6211

**WARDEN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, Stores, etc. Avail. immediately.
416.686.8345 / 416.388.6603

**BRIMLEY & BRIMORTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.5195

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, stores. Avail. July 01, 2010.
647.701.9555 / 416.286.6472

**PHARMACY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
416.759.2608 /416.882.7638

**DONMILLS & SHEPPARD**
3 அறைகள் கொண்ட bsmt for rent. Sep. Entrance. Parking, laundry, cable, internet. Close to 5 நிமிட நடை தூரத்தில் பஸ் தரிப்பிடம், Donmills Subway, school, mall, DVP, hwy 404 & 401, Fair view mall. Avail. July 01, 10.
தொடர்புகளுக்கு: 416.502.8053

**MIDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt apt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, clinic. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.5195

**KENNEDY & LAWRENCE**
3 Bedroom in 1st floor, 3 bedroom in bsmt for rent. Close to all amenities.
தொடர்புகளுக்கு: 416.830.5560

**MARKHAM & STEELES**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.500.4565
905.472.1370/ 647.703.1343

**MORNINGSIDE & STAINS**
2 bedroom walkout bsmt apt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, nofrills, library, 2 elementary schools, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.970.3404

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.996.6977

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**MIDLAND & SHEPPARED**
1 bedroom bsmt for rent. Close to school, mall, go train, TTC.
தொடர்புகளுக்கு: 647.448.6464

# CONDO FOR RENT

**WARDEN & FINCH**
3 Bedroom condo. for rent. 1½ washroom, cable, parking, security, water, gas, washer, dryer included. Current bill extra. Close to TTC, malls, banks. Avail. September 01, 2010
தொடர்புகளுக்கு: 416.274.9726

# OFFICE SPACE FOR RENT

**KENNEDY & ELLESMERE**
Rent $395. All inclusive.
தொடர்புகளுக்கு: 416.575.5055

# CONDO FOR RENT/SALE

**FINCH & MIDDLEFIELD**
2 Bedroom condo. for sale. Close to TTC, GTA Square mall, temple, school, hwy 401. Avail. September 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.497.5337

# HOUSE FOR RENT

**McCOWAN & LAWRENCE**
3 Bedroom main floor in a bungalow house is available for rent immediately. Quiet neighborhood, cable, internet, parking, utilities included. Close to school, hospital, library, malls, TTC, subway, shops & other amenities.
தொடர்புகளுக்கு: 905.554.2496

**NEILSON & ELLESMERE**
3 Bedroom upper level house for rent. Parking, laundry. Close to TTC, mall, HWY 401, hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.554.3844

**McCOWAN & FINCH**
3 Bedroom house for rent. 1½ bathroom. New appliances. Recently renovated spacious home. Close to school, TTC, mall. Rent $1350. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.294.1604

# HOUSE FOR SALE

வெள்ளவத்தையில் 3 படுக்கையறைகள் கொண்ட தொடர்மாடிவீடு ஒன்று வாடகைக்கு அல்லது விற்பனைக்குள்ளது. சகலவசதிகளும் கொண்ட வீடு. தொடர்புகளுக்கு: 416.629.9601

# TUITION

University of Toronto மாணவனால் Gr. 3 - Gr. 8 வரையுள்ள மாணவர்களுக்கு Maths, Science கற்பிக்கப்படும்.
Ravi: 416.418.5479
Nizanth: 416.953.964

# TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil.
Gr. 8 Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

# தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 25, 26

## ROOM RENT

**MORNINGSIDE & McLEVIN**
2 அறைகள் உடன் வாடகைக்கு உண்டு. இணைந்த தனி குளியலறை. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. Avail. immediately.
416.732.6931 / 416.281.9888

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.351.0422

**KENNEDY & EGLINTON**
2 Bedroom for rent. Sep. entracte, parking, laundry. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.278.8393

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt rooms available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**MORNINGSIDE & MCLEVIN**
2 Bedrooms upper level for rent. Close to stores, schools, TTC. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். பெண்கள் விரும்பத்தக்கது.
416.286.3544 / 647.836.3440
( Leave Mesage)

**MCCOWAN & FINCH**
1 Room for rent. All bills inclusive. Close to TTC, mall, school, temple, supermarket. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.889.7399

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Pl. Call: 416.293.6211

**MARKHAM & 14TH AVE**
2 Bedrooms upper level for rent. Parking, laundry. Close to YRT, mall, school. Avail. immediately. அறைகள் தனித் தனியாகவும் கொடுக்கப்படும்.
905.642.3576/647.888.8255

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent with all facilities. Close to TTC, mall. பெண்கள் or வயதானவர்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**FINCH & MIDDLEFIELD**
Bsmt இல் 1 அறை தனித்தனியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to mall, ஐயப்பன் கோவில். No smoking, no alcohol. Keep the place clean. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.493.0590 /Leave message

**McCOWAN & LAWRENCE**
Room for rent in bsmt. Sep. entrance. Parking. Close to hospital, tamil stores, 2 min. to bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.827.5529

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் Tvi, Sun TV, Vijay TV, internet, தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**MARKHAM & LAWRENCE**
Room available for rent in main floor. Cable inclusive. Close to TTC & plaza. Room $275.
416.439.4076/416.728.0807

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

**MORNINGSIDE & SHEPPARED**
1 Bedroom for rent. Close to TTC, mall, school. Avail. immediately.
416.724.6186/647.833.3893

**ELLESMERE & NEILSON**
3 Bedroom for house for rent.
2 bedroom bsmt for rent.
**WARDEN & 401**
4 Bedroom walkout bsmt for rent.
தொடர்புகளுக்கு: 416.889.2254

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Avail. July01,2010. Suitable for female student. Cable & internet avail. Close to university.
தொடர்புகளுக்கு: 905.429.0280

**ROOMS FOR RENT.**
With food or without food
**ISLINGTON & FINCH (NORTHYORK)**
Islington/steeles, northyork. Students, family, single mother/dad preferred.
தொடர்புகளுக்கு: 416.744 help(4357)

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement இல் இரு நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. Avail. mmediately.
416.299.4895 / 416.201.1222

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedroom for rent. Parking, laundry, cable. Close to TTC, mall school, U of T, bank. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Female or students preferred.
தொடர்புகளுக்கு: 416.805.8791

## JOB JOB JOB

Mississauga based company looking for experienced ***Table saw operator*** wanted. Pl. call: 905.629.8264

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## SPACE FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 Space for rent.
416.755.8354/647.836.9255

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 647.618.9316

## மணமகன் தேவை

கொழும்பில் அரசசேவையில் பணிபுரியும் 43 வயது விவாகரத்து பெற்ற, பொறுப்புகள் அற்ற, குற்றமற்ற சாதகம் உள்ள பெண்ணிற்கு விரைவில் திருமணம் செய்ய விரும்பும் மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: 011.94.773.744.155
திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

## சமையல் வல்லுனர் தேவை

புதிதாக தொடங்க இருக்கும் உணவகத்திற்கு தென் இந்தியாவைச் சேர்ந்த சைவ, அசைவ உணவுகள் சமைக்கத் தெரிந்த சமையல் வல்லுனர் தேவை.
Raj: 416.902.1762
Jay: 647.701.7420

## FREE SHOES

Orthopedic shoes for male and female with welfare, ODSP, any other benefit.
தொடர்புகளுக்கு: 647.710.3104

## FURNITURES SALES

French Provision sofa set, dining table, Cupboard (அலுமாரி), entertainment unit bar set, studying table,children bed & more என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 647.380.6802

மேலும் பக்கங்கம் 24, 26

## ஆடைகள் விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட Fashion Tops விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 905.554.5550
(Weekdays after6.00pm)

## COMPUTER REPAIR

உங்கள் கணினி (Computer) யில் ஏற்படும் குறைபாடுகளை நேரில் வந்து நிவர்த்தி செய்யவும் மற்றும் கணினி (computer) திருத்த வேலைகளுக்கும் அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள் நிமல் - 416.301.1999

## WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition.
Raj - ***647.269.6552***

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்:
416.274.5495

## CARS FOR SALE

2005 Toyota Corolla car for sale. Single owner & driver spacious, well maintained. 147km. Price $8,999
Bala : 416.754.7764

Toyota Camry, Corolla, Honda, Honda Civic for sale. அத்துடன் Van வாடகைக்கு ஓடப்படும்.
தொடர்புகளுக்கு: 416.625.4146

Honda 98 CRV car for sale. Automatic, black colour. Good condition.
தொடர்புகளுக்கு: 416.688.8364

2002 BMW X5 Blue colour $13,900,
2002 Toyota Corolla - 80K, $4,700,
2007 BMW X3 - $34,900,
2002 BMW X5 - $13,500, 200 km,
2005 Toyota Corolla - $9,800,
2005 Honda Accord - 2 door - $ 9,500,
தொடர்புகளுக்கு: ***416.575.5055***

## TENNIS LESSONS



By Australian certified, U.S trained professional former Srilankan Davis cup player and Coach catering for scarborough, Markham & Richmond Hill Areas. 36 years of experience.
Group Classes & Private Coaching Possible
***David Selvadurai : 416.495.1277***

## ஆடிவேல் திருவிழா

ஆறுபடை அப்பன் சன்னிதானத்தில், திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் ஆடிவேல் திருவிழா July 16 ஆம் திகதி வெள்ளி மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.
- பாரதியாட்சின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.
- அதிஷ்டலாப சீட்டுக் குலுக்கல்

ஆலய தொடர்புகளுக்கு: குமரன் : 416.744.9568



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774

## Answers - 261 TUTORIAL 262

(1) f(x) = sec x/1+ tan x $\qquad f^1(x) = \dfrac{(1+\tan x)^{d/dx} \sec x \div \sec x \; d/dx\,(1 + \tan x)}{(1 + \tan x)^2}$

$= \dfrac{(1 + \tan x)(\sec x \tan x) - \sec x.\sec^2 x}{(1 + \tan x)^2} \qquad \dfrac{(\sec x(\tan x + \tan^2 x - \sec^2 x)}{(1 + \tan x)^2}$

$= \dfrac{\sec x(\tan x - 1)}{(1 + \tan x)^2}$

Since sec x in never O, we see that $f^1(x)=0$. When tan x = 1 and this occurs when x = n + /4, where n is an integers.

(2) f(x) = ln lx $\qquad$ since f(x) = lnx if x > 0
ln(-x) if x < 0

if follows that $f^1(x)$ = 1/x if x >0
1/-x = (-1) =1/x if x < 0

This $f^1(x) = 1/x$ for all $x \neq 0$

(3) Let x be the distance from the man to the point on the path closest to the search light. Let ø be the angle between the beam of the searchlight and the $1^r$ to the path.




Given dx/dt = 4 ft/sec. ask to find dø/dt
when x =15 x/20 = tanø, x=20 tanø
$dx/dt = 20se^2ø \; dø/dt$
$dø/dt = 1/20 \cos^2ø \; dx/dt$
$=1/20 \cos^2ø, 4 = 1/5 \cos^2ø$
When x = 15, the length of the because is 25 so cesø = 4/5 and dø/dt =1/5 $(4/5)^2$=16/125=.128. The search light in rotaring at a rate of .128 radians/sec.

(4) Number of divisore of 540 = 3 x 4 x 2 - 1 = 23

(5) $(2x - 1/x) - [(2x + (- 1/x)]^9$
$=(9)(2x)^9 + (9)(2x)^8(-1/x) + (9)(2x)^7(-1/x)^2 + (9)(2x)^6(-1/x)^3$
0 9 1 5 2 3
$= 512x^9 - 2304x^7 + 4608x^5 - 5376x^3$

### Questions

(1) Find f o g o h if $f(x) = x/x+1$, $g(x)=x^{10}$ and h(x)=x+3 (For Gr.12)

(2) The half life of strontium $^{90}$ sr in 25 years. Find the mas remaining after 40 years, it a sample of $^{20}$ sr has a mass of 24 mg now. (Gr.12)

(3) Find d/dx in (sin x) + d/dx of √1nx. (Gr.12)

(4) An individual's commuting time (min) to work has mean 73min and standard deviation 12 min. How early should the person leave home to be sure of arriving at work on time at least 80 percent of time? (Gr.11 & 12)

(5) Patti wants to throw coins in the fountain at the mall. In her pocket she has a penny, a nickle, a dime, and a quater. How many different sums of money could she throw in to the fountain?

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Under taken for all arades from grade 4 to university 1st year. Special classes in advanced functions, vector calculation & data management for grades 11 & 12

Indiouvale and group classes available by an experience teacher Mr. S.F. Xavier. Classes available at 1. Scarborough 2. Stauffville and Richmond Hill

**CONTACT: 647.340.9490 / 647.831.0070**

# ஆதன வியாபாரத்தில்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

கலந்தாலோசித்து, முறையாக முடிவு எடுப்பது, நிச்சயமாக எதிர்காலத்தில் ஏற்படப் போகும், தாக்கங்களையும் மேலதிக எதிர் பாராத செலவுகளையும் தவிர்க்க உதவும்.

### *9. Resale Cottage / Vacation Property*

a. வாங்குபவரும், விற்பவரும் சொந்த தேவைக்காக பாவித்தால் HST அறவிடப்படமாட்டாது.
b. விற்பவர் குறிப்பிட்ட Property ஐ 50% இற்கு மேற்பட்ட காலத்திற்கு வாடகைக்கு கொடுத்திருந்தால் HST அறவிடப்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

### 10. 90%இற்கும் மேலாக திருத்தப்பட்ட (Renovated) வீடு

90% இற்கு மேற்பட்ட திருத்தப்பட்ட அல்லது புதிதாக கட்டப்பட்ட வீடுகளிற்கு HST அறவிடப்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.
(இதனை Substantial Renovation என அழைக்கப்படும்)

### *11. Resale Apartment Buildings (Multi - Unit Residential)*

a. HST அறவிடப்படமாட்டாது.
குறிப்பு : அடுக்குமாடிக்கட்டிடத்தின் ஒரு பகுதியின் வியாபார நிலையம் அமைந்திருந்தால் அந்தப் பகுதிக்கு ஏற்ப HST அறவிடப்படலாம்.

### *10. Commercial Property*

பொதுவாக HST அறவிடப்படும். வாங்குபவர்களும் விற்பவர்களும் HST இலக்கம் பெற்றிருந்தால், HST செலுத்துவதனை தவிர்க்க கூடிய வசதிகள் உண்டு.

### *11. Vacant Land* (கட்டிடங்கள், வீடுகளற்ற காணி)

a. Farmland (கமம் செய்யக்கூடிய காணி) நிலம் தனியாக விற்றால் HST அறவிடப்படும். ஒரு பகுதி, கமம் செய்யும் நிலமாக விற்றால் வித்தியாசமாக கணக்கிடப்படும்.
b. Land Lot (வீடு, கட்டிடம் கட்டுவதற்கேற்ற காணி) வியாபாரக்கட்டிடம் கட்டக்கூடிய நிலத்திற்கு HST அறவிடப்படலாம்.
c. Personal Use of Vacant Land. சொந்தத் தேவைகளிற்காக விற்கப்படும் காணிக்கு HST தவிர்க்கப்படும்.

### 12. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட, வாழ்வதற்கான Property

a. June 19, 2009 இற்கு முன்னாக ஆதனம் வாங்குவதற்கான படிவம் ஒப்பிடப்பட்டது.
June 19, 2009 இற்கு முன்னர் ஒப்பமிடப்பட்ட வீடு, வாங்கல் பத்திரமாக இருந்தால் GST மட்டுமே செலுத்த வேண்டும். (அனேமான சந்தர்ப்பங்களில் GST, விலையினுள் உள்ளடக்கப்பட்டு இருக்கும்)
b. June 18, 2009 இற்கு பிற்பாடு வாங்கியது/ஒப்பமிடப்பட்டது.
(i) Closing date a occupancy date, July 01, 2010 இற்கு முன்பாக இருந்தால் HST அறவிடப்படாது.
(ii) July 01, 2010 இற்கு பிற்பாடு Closing Date அல்லது occupancy Closing Date இருக்குமாயின் HST அறவிடப்படும். இருந்தபோதிலும் இதில் GST பொதுவாக விலையினுள் சேர்க்கப்பட்டு இருக்கும், PSTஇன் ஒரு பகுதி மாநில அரசு Rebate ஆக தருகிறது. ஒரு பகுதி PST செலுத்த வேண்டி வரும். அதாவது குறிப்பிட்ட HST வழங்கவேண்டியிருக்கும்.

குறிப்பு: $400,000 உட்பட்ட புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடியிருக்கும் ஆதனங்களுக்கு PST அறவிடப்படமாட்டாது. எனவே GST மட்டுமே. ஆனால் $400,000இற்கு மேற்பட்ட வீடு/மனைகளுக்கு HST அறவிடப்படும்.



SMILE....
• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
**RK CONSULTANTS**
**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**
24 hrs, 365 days

# Summer Tutoring

(Gr.1-12: English ★ Math ★ Science)

**Starting from July 5th**

**Limited Seats only Available**

**Register Early to Ensure Your Seat**

**Ph: (647) 705 0725**

- ❖ Systematic Plan to Help Build Strong Base in Core Subject Areas
- ❖ Strictly Follows Ontario Curriculum
- ❖ Regular School Teachers and Canadian University Graduate and Post Graduate Students Taking Classes

Our Locations: ★ Markham & Lawrence ★Lawrence & Midland ★ ★ Morningside & Sheppard ★



***Do You Need a Job and Related Trainings?***

# வேலை வாய்ப்பு

*JOB OPPORTUNITIES & HANDS-ON TRAINING PROGRAMS FOR NEWCOMERS, GRADUATES AND LAID-OFF PEOPLE DO YOU WANT TO WORK IN HOTELS, RESUTRANTS, PHARMA COMPANIES AND HOSPITALS FOR MINIMUM of $20/HOUR?*

- *Food Handler Certificate Program Plus current CPR and First Aid Training*
- *Cleaning/Sanitization/ WHMIS Training Program Plus current CPR and First Aid Training*
- *Engineering/Architecture*

==> Introduction to AutoCAD Beginner Level
==> Introduction to AutoCAD Intermediate Level
==> AutoCAD Advanced Level

- *Pharmaceutical/Bio-Pharmaceutical Hands-on Training programs*

==> Manufacturing Technology ==> New Drug Formulation
==> Research and Development ==> QC & QA, Validation
==> Clinical Research, Regulatory Affairs ==> Advance Validation Technology

Plus

- MCAT and PCAT Coaching
- Spoken English Class - Instruction by a qualified Tamil Instructor

*5310 Finch Avenue East, Unit#9 Scarborough, Ont., MIS 5E8*

***For registration: call us (416) 412-7374***

***info@naiptlabs.com***


# கனடாவில் கலை...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

அங்கு இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கின்ற பிற பத்திரிகைகளாகும்.

ஈழத்துப்பூராடனார், வித்துவான் செபரத்தினம், கலாநிதி நா. சுப்பிரமணியன், கலாநிதி இ. பாலசுந்தரம், புலவர் ஈழத்துச் சிவானந்தன், அதிபர் பொ. கனகசபாபதி, குறமகள், க. நவம், திரு எஸ். திருச்செல்வம், எஸ். ஜெகதீசன், நக்கீரன், முருகவே பரமநாதன், வசந்தா நடராசன், பொன் குலேந்திரன், கனி விமலநாதன், எஸ். பத்மநாதன், லலிதா புரூடி, பரம்ஜி போன்றோர் நல்ல கட்டுரைகளையும் ஆக்கங்களையும் எழுதிவருகின்றார்கள். மறைந்த சட்டத்தரணி எஸ்.கே. மகேந்திரன், அ.பொ. செல்லையா, செல்வா இலங்கையன் ஆகியோரும் சிறந்த கட்டுரை ஆசிரியர் களாக விளங்கினர். பல கட்டுரை நூல்களை யும் இவர்களிற் பலர் வெளியிட்டுள்ளனர்.

சிறுகதை மற்றும் நாவல் ஆசிரியர்களில் அ. முத்துலிங்கம், குரு அரவிந்தன் ஆகியோர் தமிழ் நாட்டிலும் பெயர் பெற்றவர். மூத்த சிறுகதை எழுத்தாளர் குறமகள், உதயணன், மனுவல் யேசுதாசன், பொன். குலேந்திரன், ஆர். என். லோகேந்திரலிங்கம், இரா. சம்பந்தன், பசுந்தீவு கோவிந்தன், விஜயா இராமன், அகில் ஆகியோரும் கதைகளை எழுதி வருகின்றனர். பல சிறுகதைத் தொகுதிகளும் நாவல்களும் வெளிவந்துள்ளன.

கவிதைத் துறையை சேரன், செழியன், இரா. சம்பந்தன், தீவகம் இராசலிங்கம், அனலை இராசேந்திரன், பவானி, துறையூரான், சிவா சின்னத்தம்பி, அச்சுவேலியூர் கணேசன், புலவர் மயில்வாகனம், ராஜ்மீரா, பொன்னையா விவேகானந்தன், குரும்பசிட்டி இராசரத்தினம், த. சிவபாலு, ச.வே. பஞ்சாட்சரம் போன்றவர் வளப்படுத்தி வருகின்றனர். இவர்களிற் பலரது கவிதைத் தொகுதிகளும் வெளிவந்துள்ளன.

குழந்தை இலக்கியத்துறையை வளர்ப்பதில் சின்னையா சிவநேசன், குரு அரவிந்தன், அருள் சுப்பிரமணியம், திருமதி வரதா சண்முகநாதன், திருமதி விசாகபூசணம் முருகையா, திருமதி கோதை அமுதன் ஆகியோர் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இசைக்கலை கனடாவில் மிகவே செழிப்புற்று வருகின்றது. அனைத்துலகப் புகழ்பெற்ற இன்னிசைவேந்தர் பொன் சுந்தரலிங்கம், சங்கீதபூஷணம் பராசக்தி விநாயகதேவராஜா, இசையரசி விஜயலட்சுமி ஸ்ரீநிவாசன், சங்கீதபூஷணம் பூமணி இராசரத்தினம், சங்கீத பூஷணம் திருமதி சண்முகலிங்கம், இசைக்கலைமணி வர்ண ராமேசுவரன், மோகன் திருச்செல்வம், மிருதங்கக்குருமணி வாசுதேவன் இராஜலிங்கம், மிருதங்க வித்துவான் கௌரிசங்கர், மிருதங்க வித்துவான் சண்முகம், அளவையூர் இசைஞானபூபதி கேசவமூர்த்தி, சங்கீத வித்துவான் தனதேவி மித்திரதேவா, கலாப்பிரபா ஜெயதேவன், சங்கீதபூஷணம் திருமதி சிங்கராஜா, ஹம்சத்வனி சிங்கராஜா போன்ற தனிப்பட்ட கலைஞர்களோடு பாரதி கலைக்கோயில் போன்ற அமைப்புகளும் இசையைக் கற்பித்து வருவதுடன் இசை நிகழ்ச்சிகளையும் அரங்கேற்றிவரும் முயற்சிகள் அங்கு நடைபெற்று வருகின்றன.

- தொடரும் ...


***$100 $250 $100***

***$250*** ***$250***

## Ontario Vegetarian Food Bank

**தொண்டர் சேவை மூலம் நிரந்தர தொழில் வாய்ப்பு**

**வேலை வாய்ப்பு** Employment **வேலைவாய்ப்பு**

வேலைதேடுபவர்களும், எவ்வாறான வேலைக்கு முயற்சிக்க வேண்டும் என்பவர்களும், வேலையில் மேலும் உயர்வை எதிர்பார்ப்பவர்களும் எமது அனுபவமும் தகுதியும் வாய்ந்த தொழில் ஆலோசகர்களுடன் (Employment - Counselors) பதிந்து செயல்படும் பொழுது உங்கள் திறமைக்கேற்ற தொழிலை (Skill) பெறமுடியும்.

***EI*** பெறுபவர்கள், பெற்றவர்களுக்கு விஷேட ஆலோசனை வழங்கப்படும். உங்களை சுற்றி பசியுடன் வாடும் மக்களுக்கு உணவுத்தானம் செய்ய முன்வாருங்கள்.

***$100*** ***$100***

மாலன்: தலைவர், ஸ்தாபகர்

**தானம், தர்மம், தொண்டு**

***$250*** ***$250***

***(416)744 HELP (4357)***

***2370 Midland & Sheppard / 2400 Finch Ave West @ Weston***

அலுவலக நேரம் 10am to 6pm Mon. - Sat.

***$250*** ***$100 $250 $100*** ***$250***



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

***www.vlambaram.com***

# சிறுவர் நூல்கள் - நூல் விமர்சனம்

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.
இது வள்ளுவர்.

ஓடிவிளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா.
இது பாரதி.

குழந்தை இல்லாத தாயை மலடி என்றும், குழந்தைகள் இல்லாத குடும்பத்தை குடும்பமே அல்ல என்றும் குழந்தைகளுக்கு முதன்மை கொடுத்து வரும் சமூகத்தைச் சேர்ந்தவர் நாம்.

ஆனாலும் தமிழிலக்கிய வரிசையில் குழந்தை இலக்கியம் அல்லது சிறுவர் இலக்கியம் என்ற இலக்கியத் தளத்தில் மேலை நாடுகளுடன் ஒப்பிடும்போது நாம் பெரிதும் பின்தங்கியே இருக்கின்றோம்.



அக்குறைபாட்டை ஓரளவாவது நிறைவு செய்யும் நோக்கோடு சிலர் தொடர்ச்சியாக அவ்வப்போது பணியாற்றி வருகின்றனர். திரு சபா அருள் சுப்பிரமணியம் அவர்கள் சிறுவர் இலக்கியத்தளத்தில் தமது தொடர்ச்சியான பணியினூடாக தனக்கென ஒரு தனியான இடத்தை வகித்து வருகின்றார். அந்த வகையில் கடந்த யூன் 12ந் திகதி மூன்று சிறுவர் நூல்களை கனடாக் கந்தசாமி கோயில் மண்டபத்தில் வெளியீடு செய்தார். அவற்றுள் சிறுவர் நாடகங்கள், குட்டி நாடகங்கள் மற்றும் ஆடலும் பாடலும் என்னும் சிறுவர் பாடல்கள் அடங்கிய நூல் என்பன அடங்கும்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் தொடர்ச்சியாகக் கனடிய தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் அவர்கள் எழுதும் நூல்களை வெளியீடு செய்யும் அளப்பரிய பணியில் ஈடுபட்டு வருகிறது. அதன் வரிசையில் திரு சபா அருள்சுப்பிரமணியம் அவர்களின் இச்சிறுவர் நூல்களை வெளியீடு செய்ய முன்வந்தது.

நேரத்தின் மதிப்பை உணர்ந்தவர் திரு அருள்சுப்பிரமணியம் அவர்கள். அதனால் விழா குறிக்கப்பட்ட நேரத்தில் எவ்வித தாமதமும் இல்லாமல் தொடங்கியது. கனடாப்பண், தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் அமைதிவணக்கத்துடன் விழா இனிதே ஆரம்பமானது. தமிழ் படிப்போம் தமிழ் படிப்போம் தம்பி தங்கைகளே என்ற செல்வி பிரணவியின் பாடல் விழாவின் தொடக்கத்திற்கு மேலும் மெருகூட்டும் நிகழ்வாக அமைந்தது.

தொடர்ந்து எழுத்தாளர் குரு அரவிந்தன், தத்துவப் பேராசிரியர் வண சந்திர காந்தன், மற்றும் உதயன் செய்தித்தாள் ஆசிரியர் திரு லோகேந்திரலிங்கம் ஆகியோர் எழுத்தாளரை வாழ்த்தி ஆசிச்செய்தி வழங்கினர்.

திரு குரு அரவிந்தன் அவர்கள் பொதுவாக தமிழில் சிறுவர் இலக்கியத்தை ஊக்குவிக்க எவரும் முன்வருவதில்லை. திரு சபா அருள்சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளை வரவேற்று மேலும் பல ஆக்கங்களைக் அவர் கொண்டு வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் என்று வாழ்த்தினார். தொடர்ந்து திரு லோகேந்திரலிங்கம் அவர்கள் தமது ஆசியுரையில் சிறுவர் இலக்கியத்தில் கைவைப்பதென்பது ஒரு பெரிய சவால். அச்சவாலில் அவர் கைவைத்திருப்பது அவருடைய பலத்தைக் காட்டுகிறது என்றார். மேலும் பேராசிரியர் சந்திரகாந்தன் அவர்கள் தமது ஆசியுரையில் சிறுவர் இலக்கியம் என்பது சிக்கலான, கஸ்டமான ஓர் இலக்கிய நெறி. எழுத்தாளன் என்பவன் சிறுவராக, அவர்களுக்குள் நின்று செயற்பட வேண்டும். எழுத்தாளரது பணியானது வாழும் சூழலை ஆளுமைப்படுத்தி, ஆக்க இலக்கியத்தில் ஆசையையும் விருப்பத்தையும் சிறுவரிடம் உண்டாக்க வேண்டும் என்று கூறி தனது ஆசியுரையை வழங்கினார். ஆசியுரையைத் தொடர்ந்து கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் திரு சிவபாலு அவர்கள் தமது தலைமையுரையில் திரு அருள்சுப்பிரமணியம் அவர்கள் அர்ப்பணிப்பு வாழ்வைக் கொண்டவர். கனடியப் பெற்றோர் மத்தியில் நன்கறியப்பட்டவர் என்று கூறியதோடு சிறுவர் இலக்கிய வளர்ச்சியைக் குறிப்பிட்டு தமிழ் இலக்கியச் சூழலில் வளர வேண்டிய ஓர் இலக்கியம் என்பதைக் குறிப்பிட்டுச் சென்றார்.

தொடர்ந்து சா.வே பஞ்சாட்சரம் அவர்கள் வெளியீட்டுரை செய்யும் போது தனக்கு திரு அருள்சுப்பிரமணியம் அவர்களை வாழ்த்தும் தகுதி உண்டு. யாழ் வைபவமாலை போன்ற அரிய நூல்களைத் தந்த அறிஞர்கள் பிறந்த ஊரைச் சேர்ந்தவர் திரு அருள் சுப்பிரமணியம் அவர்கள். செய்முறைக் கல்வியினூடாகத் தான் பிள்ளைகளுக்கு கற்பித்தல் வேண்டும். தமிழ்மொழி ஆங்கில மொழியைப் போன்று கற்றுக் கொள்வதற்கு கடினமான மொழி யல்ல. சிறுவர் இலக்கியங்கள் ஏராளமாகப் படைக்கப்படல் வேண்டும். அதனை ஆசிரியர் பொறுப்புணர்வோடு கற்பிக்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து கவிஞர் கந்தவனம் அவர்கள் பாடலும் ஆடலும் என்னும் சிறுவர் பாடல்கள் நூலுக்கான தமது ஆய்வுரையில் குழந்தைப் பாடல்களுக்கு ஆய்வுரைகள் நடத்துவது வழக்கம் இல்லை. ஆனால் நாம் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளோம் என்று குழந்தை இலக்கியம் பற்றிய சில தகவல்களை பரிமாறினார். குழந்தைகளுக்காக முதலில் பாடல் எழுதியவர் ஔவையாரே. அவரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியவற்றை நினைவுறுத்தினார். அது மாத்திரமல்லாது சில பாடல்களை பாடிக்காட்டி சிறுவர் பார்வையை தம்மீது பதித்துச் சென்றார்.

அடுத்ததாக சிறுவர் இலக்கியம் பற்றிய சிறப்புரை திரு நவம் அவர்களால் நடத்தப்பட்டது. அன்று தொட்டு இன்று வரை தமிழில் சிறுவர் இலக்கியம் வளர்ச்சி, அதன் பங்காளர் மற்றும் அதன் வளர்ச்சி பற்றிய ஒரு தெளிவான பார்வையை பார்வையாளர் மீது பதித்துச் சென்றார். சிறுவர் இலக்கியம் சிறுவர்களுக்காகப் படைக்கப்படல் வேண்டும். குழந்தைகளையும் குழந்தை மொழியையும் புரிந்து கொள்வதோடு, புதிய வாழிடங்களையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதே நூலுக்கு சிந்தனைப் பூக்கள் பத்மநாதன் அவர்கள் வெளியீட்டுரை நடத்தினார்.

அடுத்து சிறுவர் நாடகங்கள் மற்றும் குட்டி நாடகங்கள் போன்ற நாடக நூல்களுக்கு முறையே திருமதி கலாநிதி குலமோகன் அவர்களும் பேராசிரியர் பாலசுந்தரம் அவர்களும் ஆய்வுரைகள் நிகழ்த்தினர். திருமதி குலமோகன் அவர்கள் தமதுரையில் குழந்தைகள் பானையும் கழிமண்ணையும் போன்றவர்கள். அவர்களை உரியவாறு பயன்படுத்துவது நமது கடமை என்று குறிப்பிட்டார். பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் தமதுரையில் அந்நூலில் அடங்கிய நாடகங்களின் சிறப்புகளைக் குறிப்பிட்டார். மொழியைப் பயன்படுத்தும் போது கடினமான சொற்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார்.

இறுதியாக, விழாவின் நாயகன் திரு அருள்சுப்பிரமணியம் தமது ஏற்புரையில் எனது பட்டறிவின் விளைவே இந் நூல்கள் என்றார். திருமதி யோகா அருள்சுப்பிரமணியம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது. இவ்விழாவில் திரு அருள்சுப்பிரமணியம் அவர்கள் நடத்திவரும் தமிழ்ப்பூங்கா நிறுவன மாணவ மாணவிகளின் பாடல்கள் அவ்வப்போது நடைபெற்று விழாவைச் சிறப்பித்தமை சிறப்புக் குரியது. ஒரு இனிய மாலைப் பொழுதை பயனுள்ளதாகச் செலவிட்ட பெருமையுடன் மண்டபத்தை விட்டு வெளியேறினேன்.

- தேன்மொழியாள் கங்காதரன் -


## APARTMENTS FOR RENT




**$250 Move In Bonus**

*Best Building in Scarborough!*
*Clean, family building, FREE parking.*
*Close to schools, bus stop, Tamil store in building.*

**Pl. Call: 416.264.2818**



தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும்
சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது
**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**




# தமிழ் அனுபவங்கள்

**என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள், நலம்பெறப் பிரார்த்திக்கிறேன்.**

அனுபவங்கள் நமக்கு வழிகாட்டுவன. தெளிவையும் தீர்மானத்தையும் தருவன. அனுபவங்கள் நமக்கு உதவும் உண்மைக் கரங்கள். அறிவுடையோரிடம் கேட்டு, அனுபவமுடையோரிடம் தெளிந்து தேறியது நமது வாழ்வு. அறிவு சிலவேளைகளில் பேதங்களை உண்டாக்கி விடும். அனுபவங்கள் போதங்களாய் உதவும். படிப்பறிவை பதப்படுத்துவது பட்டறிவு என்னும் அனுபவமே. சூடுகண்ட பூனை அடுபங்கரை போகாது என்பது பழமொழி.

**நண்பா!**

பரம்பரை வியாதி நமக்கு வருகிறது. பரம்பரைப்பழக்கமும், வழக்கமும் பண்புகளும் நமது பாரம்பரியத்தினருக்கு வரவேண்டும். இதற்கு தமிழ் அனுபவம் தோய்ந்த சொற்களை எழுத்தாளர்களும், சொற்பொழிவாளர்களும் தமது வெளிப்பாடுகளில் உபயோகப்படுத்த வேண்டும். வீட்டிலும் பெரியோர், பெற்றோர்கள் தமது அனுபவச் சொற்களைப் பேசிப் பிள்ளைகளின் கவனத்தில் ஏற்ற வேண்டும். கனடா போன்ற புலம்பெயர்ந்த நாடுகளில் வீட்டிலே அனுபவச் சொற்களைப் பேசும் போது குழந்தைகள் உற்றுக்கவனிக்கிறார்கள், ரசிக்கிறார்கள். திரும்பவும் சொல்லும்படி கேட்கிறார்கள். அனுபவச் சொற்களை அதற்குரிய உச்சரிப்போடும், உடல் மொழியோடும் பேசும் போது அதன் அழகியலால் குழந்தைகளின் உள்ளத்தில் கலை உணர்வினை உண்டாக்கி உற்சாகம் கொள்ள வைக்கிறது.

பிறமொழிச் சூழலில் வாழும் பிள்ளைகளுக்கு அனுபவம் சார்ந்த இனமொழி வழக்குகள் இலகுவாகப் பின்பற்ற உதவுகின்றன. அவர்களின் ஊரடிவேறாக இருந்தாலும் வேரடித் தொடர்புகள் உள் உறைந்து கிடக்குமல்லவா? உடன் பிறப்புக்களே! இரத்தத்தின் இரத்தங்களே என்னும் அரசியல் அரங்கச் சொற்பிரயோகங்கள் அனுபவ அடிச் சுவட்டை அடியொற்றியே பிறந்தவை. ஆங்கில ஓசை கலந்த தமிழ் உச்சரிப்பு செய்யும் பிள்ளைகள் தமது உறவினர்களின் அனுபவம் கலந்த தமிழ்ச் சொற்களால் கவரப்படுகிறார்கள். இதனாலே உறவு நிலையிலும் உணர்வு நிலையிலும் நெருக்கமும் நெகிழ்வும் உருவாக முடியும்.

அனுபவம் சார்ந்த சொற்களுக்கு உணர்வு பூர்வமான உருக்கம் இருக்கும். அறிவு சார்ந்த சொற்களுக்கு அவ்வளவாக உணர்வைத் தட்டிவிடும் ஆற்றல் இல்லை. நமது தமிழ் மொழியில் அயல் மொழியான வடமொழியின் கலப்பு வந்துவிட்டது. இது தவிர்க்க முடியாத சூழ்நிலைத் தாக்கமே. நமது முன்னோர்களின் இலக்கியவகைகள் செழுமையானவை. தொன்மையானவை. அவை அனுபவம் சார்ந்தவை, அனுபவித்து ஆக்கப் பெற்றவை. இதனாலே அவை நமது வாழ்வோடு இலகுவாகக் கலந்து கொண்டன. இதற்குக் காரணம் அவற்றின் அனுபவத்தாக்கமே. நாம் வணங்கும் கடவுளுக்கும் அம்மொழி வழியே அர்ச்சனை பூசை செய்ய வேண்டும் என்ற விருப்பம் நமக்கு இருக்கிறது. 'வடமொழியும் தென்தமிழும் ஆயினான் காண்' என்று ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் என்ற அப்பர் பெருமான் அழுத்திச் சொல்லியுள்ளார். தொல்காப்பியரும் வடமொழி ஆக்கத்தை ஏற்றார். காரணம் அதன் அனுபவக்கனமே. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் மொழிஇயல் வகுப்பில் சொன்னவை நினைவுக்கு வருகிறது. அக்கினிப்பிரவேசம், தீக்குளிப்பு என்ற இரண்டு சொற்கள் முதல் சொல் வடமொழி, இரண்டாம் சொல் தென் தமிழ். மொழி இரண்டு சொற்களிலும் அக்கினிப்பிரவேசம் என்பது நமது நெஞ்சில் ஒருவித உணர்வைத் தருகிறது. இதற்கான காரணம் என்ன? முதல் முதலாக அக்கினியில் நுழைந்து பிரவேசம் செய்து அத்தீயிலே குளித்து வந்த சூட்டோடு வடமொழியாளன் உச்சரித்த சொல்லு. அனுபவத்தோடு வந்தவார்த்தை. இதை நாம் உணர்கிறோம். தீக்குளிப்பு என்பதை இன்ன காரியம் என்று அறிகிறோம். அவ்வளவு தான் என்றார். தமிழில் இப்படியான சொற்கள் இருக்கிறதா என்று கேட்டார்கள். இருக்கிறது பண்பாடு என்றோம். ஏற்றுக்கொண்டார். நிலத்தை வெட்டிக் கொத்தி உழுது பண்படுத்தியவன் சொன்ன மண்ணைப் பண்படுத்தி விட்டேன் என்ற சொல் மனித மனத்தையும் அப்படியே அறிவு அனுபவங்களால் உழுது பண்படுத்தும் போது மனம் பண்பாட்டை கிறது. அனுபவம் தோய்ந்த சொற்களின் பெறுமதிக்காகவே இவை இங்கு சுட்டப்பட்டன.

இது கலைச் சொல் ஆக்கம் பற்றிய கட்டுரையன்று. மொழியியல் சார்ந்த ஆய்வுமல்ல. நமது இனஉணர்வுக்கும் அடையாளத்திற்கும், நமது பாரம்பரியத்தினை தமிழ் வாழ்வுக்கும் வளத்துக்கும் ஆற்றுப்படுத்தும் வழிமுறை என்ற நோக்கிலே எழுதப்படுவது. நிற்க! அனுபவச் சொற்களுக்கு உள்ளத்தைச் சென்று தைக்கும் கூர்மையும், உணர்வை உருக்கும் தன்மையும் உண்டு. நமது திருவாசகம் ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய் தேனினைச் சொரியும் இயல்புடையது. திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்ற பழமொழியும் நம்மவர் மத்தியிலே தோன்றியது. மலை அளவு அறிவைவிட மணிஅளவு அனுபவம் உள்ளத்தை ஊடுருவும் வல்லபவம் மிக்கது.

**நண்பனே!**

நமது அறிஞர்கூட்டத்தினரில் சிலர் மேற்கத்தைய மனங்கள் காட்டிய அனுபவங்களைச் சொல்வதில் காட்டும் கரிசனையை நமது தமிழ்மனங்கள் கூறிய அனுபவங்களைச் சொல்வதில் காட்டுவதில்லையே ஏன்? கலைச்சொல் ஆக்கத்திலும் நமது அறிஞர்கள் சிலர் மேற்குலக மனங்களின் அனுபவங்களை வைத்தே சொற்களை உருவாக்குகிறார்கள் என்ற குறையும் உண்டல்லவா? வித்துவம், மேதாவிலாசம் காட்டும் நோக்காய் இருக்கலாம் அதுவும் வேண்டும் தான். ஆனால் அதுவே நாட்டமாய் இருத்தல் நமது இனம், சனம், இருப்பு, குலம், சுற்றம், உறவு என்ற அடையாள அணிவளர்ப்புக்கு நம்முடைய அனுபவம் தோய்ந்த கலைச் சொற்கள் மிகுதியும் தேவை. நமது பிற்கால ஆக்க இலக்கியகாரர்கள் தமது படைப்புக்களில் தமிழ் அனுபம் சார்ந்த சொற்களைப் பெய்து கவிதைகளும் கதைகளும், நாவல்களும் எழுதியமை மகிழ்வுக்குரியதே. பலரைச் சொல்ல முடியும், சுருக்கம் கருதி ஒரு சிலரைச் சொல்லலாம். பாரதிதாசன் புரட்சிக் கவிஞர் என்று பெயர் பெற்றவர். சுயமரியாதை இயக்கத்தை தந்தை பெரியார் ஆரம்பித்த போது அதனுடன் இணைந்து செயல் பட்டவர். இவருடைய கவிதைகளில் தமிழ் உணர்வு தொடர்பான கருத்துக்களே மிகுதியாகக் காணப்படும் கோபக்கனலில் சுடுசொற்களையும் பாரதிதாசன் கவிதையிலே சேர்த்தமை தமிழ் மக்கள் அறிந்த செய்தியே. இக்கவிஞரிடத்தில் கனிவு, கருணை, காதல், அன்பு, பாசம், அமைதி முதலிய குணங்கள் இருக்காது என்றே பலர் கருதினர். ஆயினும் அவருடைய அனைத்துக் கவிதைகளையும் படிக்கும் நேரமும் வாய்ப்பும் உள்ளவர்கள் அவருடைய மனக்கனிவு, கருணை முதலிய உணர்வு களின் வெளிப்பாட்டினைக் காணமுடியும். இந்த இருபக்க உணர்வுகளை கனல், புனல், சூடு, குளிர் ஆகியவற்றினை தமது தமிழ் அனுபவச் சொற்களாலேயே வெளிப்படுத்தியிருக்கிறார்.

பாரதிதாசன் மேற்குலக அனுபவங்களைத் தெரிந்த கவிஞரே. மேற்குலக அனுபவங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் செய்த படைப்புக்கள் தமிழ் தமிழ்நாட்டிற்குள் வந்துவிட்டன. அவற்றைப்படித்த, அனுபவித்த உள்ளமாயிருந்தும் பாரதிதாசன் தனது உணர்வுகளை தமிழ் அனுபவச் சொற்களாலேயே பெரிதும் வெளியிட்டார். இதற்கு தமிழ், தமிழ் பிரச்சினைகள் பற்றிய பார்வையும் பதிவும், அக்கறையும் பிரச்சினைகளுடன் உணர்வு பூர்வமாகத் தான் கலந்து இணைந்த போக்குமே காரணம் எனலாம்.

மாணிக்கவாசகரின் திருவாசகத்தைப்பற்றி வடலூர் வள்ளலார் குறிப்பிடும் பொழுது
'வான்கலந்த மாணிக்கவாசக நின்வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப் பஞ்சாறினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனிச் தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே'

என்று பாடி, திருவாசகத்தை தான் கலந்து பாடியதால் உண்டான உணர்வு நிலையைக் காட்டுகிறார். கருப்பஞ்சாறு, தேன், பால், பழச்சாறுகள் கலந்து சுவைத்த சுவையும், ஊனும் உயிரும் கலந்த இனிப்பும் அனுபவத்துக்கு வந்ததனைக் கூறுகிறார். தமிழ் அனுபவம் கலந்த அருள் அனுபவம் நம்மையும் புதிய அனுபவத்துக்குள் கொண்டு போகிறது. மாணிக்கவாசகரும் இறைவனைக் கண்டு அனுபவித்து பின்பு காணாது தவித்து ஏங்கிய நிலையில் அனுபவக்குறிப்புகளை திருவாசகத்திலே காட்டியுள்ளார். இந்த அனுபவம், தமிழ் சைவ அனுபவம் அனைவருக்கும் உண்டாக வேண்டும் என்பதற்காகவே சிதம்பரத்து இறைவனான நடராசப்பெருமான் அப்பாடல்களைப் பிரதி செய்து, திருச்சிற்றம்பலம் உடையான் என்று கை எழுத்தும் இட்டு வைத்தார் என்பது வரலாறு.

தமிழ்சைவ அனுபவத்தின் ஊற்று ஆங்கிலேயரான ஜி.யு போப் என்ற பாதிரியாரையும் ஆட்கொண்டது அவரைத் திருவாசகத்தை ஆங்கில மொழியில் பெயர்க்க வைத்தது.

கடிதம் நீட்டோலையாகி விட்டது. நிறுத்துகின்றேன். தொடர்வேன்.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)





MORE THAN
15
Years Experience in Teaching
MATH
The Very First Time Introducing
A NEW PROGRAM FOR
G9, G10, G11 & G12
Than Ever
Starts On July 2010
SHARMA: 416.666.5515
416.878.3215
பெற்றோர் தெரிந்திருக்கவேண்டியது
Not Only Getting The Higher Score in Math But Also Higher Knowledge In Math

# வாழ்நாள் சாதனையாளர் - மல்லிகை டொமினிக் ஜீவா

**மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களுக்கு கனடிய சுயாதீன கலைத்திரைப்படக் கழகம் விருது வழங்கி கௌரவித்தமையை முன்னிட்டு இக்கட்டுரை வெளியாகின்றது.**

ஈழத்துச் சிறுகதை இலக்கியம், இலக்கியச் சஞ்சிகை வெளியீடு, மல்லிகைப்பந்தல் இலக்கியக் கருத்தரங்குகள், நூல்வெளியீடு எனப்பல இலக்கியத்தளங்களில் நின்று கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக ஈழத்தமிழ் இலக்கியத்திற்கு பங்கினையும், பணியினையும் நல்கிவரும் டொமினிக் ஜீவா அவர்கள் உண்மையிலேயே வாழ்நாள் சாதனையாளர் ஆவார்.

27.06.1927 இல் யாழ்நகரில் பிறந்த இவர் முறைசார் கல்வியை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாத சமூகநிலை, குடும்பநிலை காரணங்களால் பன்னிரெண்டு வயதினிலேயே சாதாரண தொழிலாளியாக வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கிய இவர் வாழ்நாள் சாதனையாளராக ஈழத்து இலக்கிய வரலாற்றில் வாழ்கின்றார் என்றால், அவரிடம் காணப்படும் இடைவிடாத அறிவுத்தேடல், அயராத உழைப்பு, தன்நம்பிக்கை, முற்போக்குச் சிந்தனைகள், மாற்றுக்கருத்தாளர்களையும் மதிக்கும் மனிதாபிமானம் ஆகியவற்றுடன் தான் வாழ்ந்து வரும் சமூகத்தில் இரண்டறக் கலந்த வாழ்வும், தாம் பார்த்தும், கேட்டும், வாசித்தும், அறிந்தும், அனுபவித்தும் ஆராய்ந்தும் பெற்ற அனுபவக்கல்வியே அவரின் சாதனைகளுக்கெல்லாம் மூலகாரணமாகும்.

## - எஸ் சந்திரபோஸ் -

ஈழத்து இலக்கியத்துறையில் ஒருகாலத்தில் செல்வாக்குள்ளவர்களும், பண்டிதர்களும், பல்கலைகழகப் பிரமுகர்களும்தான் ஈடுபட முடியும் என்ற நிலையை மாற்றி அமைத்தவர்களின் வரிசையில் டொமினிக் ஜீவா அவர்களுக்கும் முதன்மை இடம் உண்டு.

தம்மை ஒரு சாமானியன் என்றே இன்றுவரை அழைத்துக்கொள்ளும் டொமினிக்ஜீவா அவர்கள் பெரும் படிப்பு படிக்காதவராக இருக்கலாம்! ஆனால் அவரது பட்டறிவு கூர்மையானது. அதனால்தான் அந்தப்படிக்காத மேதையைச் சுற்றி படித்த மேதைகள் கூட்டம் சுற்றிச் சுழல்கின்றனர். டொமினிக்ஜீவாவின் மல்லிகை இதழில் வெளிவந்த தூண்டில் என்ற கேள்விபதில் பகுதிக்கு ஒருவர் 'நீங்கள் படித்த பல்கலைக்கழகம் எது? என ஒரு கேள்வியினைக்கேட்டிருந்தார். அதற்கு ஜீவா அவர்கள் அளித்த பதில்.

'இக் கேள்விக்கான உட்தொனிக்கிண்டல் எனக்குப் புரிகின்றது. அ.ந. கந்தசாமியிடம் இடது சாரிக் கருத்துக்களை முதன் முதலில் பாடம் கேட்டவன் ராஜகோபாலன் மாஸ்டரிடம் எழுதக்கற்றுக்கொண்டவன், மு. கார்த்திகேசனால் அரசியல் கற்பிக்கப்பட்டவன். இராமசாமி ஐயரிடம் பண்புகளையும் பழக்கவழக்கங்களையும் அறிந்து கொண்டவன். பூபாலசிங்கத்திடம் புத்தகம் படித்தவன். பொன் கந்தையாவிடம் அகக்கண்களை ஞானக்கண்களாகப் பெற்று உயர்ந்தவன். வைத்திலிங்கத்திடம் ஆழமாகவும், அமைதியாகவும் இருக்கப் பாடம் படித்தவன், எம்.ஸி. சுப்பிரமணியத்திடம் மக்கள் தொண்டு என்றால் என்ன என்பதை அறிந்து வைத்திருப்பவன், ஐ.ஆர். அரியரத்தினத்திடம் ஆங்கில நவீன இலக்கிய அறிவுக்கு அர்த்தம் கேட்பவன், கே. டானியலிடம் தோழமைக்குரிய அர்த்தத்தை அறிந்து கொண்டவன், பிரேம்ஜியிடம் இலக்கிய இயக்கத்தில் எப்படி வேலை செய்வது எனப் பயிற்சி பெற்றவன், நான், இவர்கள் எல்லாம் எந்தப் பல்கலைக் கழககத்தில் கூட்டாகப் பாடம் நடத்துகிறார்களோ அந்தப் பல்கலைக் கழகத்தில் தான் நான் படித்தவன் - இன்றும் படித்துக் கொண்டிருப்பவன்.

இந்தக் கேள்விக்கான பதிலினை பற்றி டொமினிக்ஜீவா அவர்களின் மொழியில் கூறுவதானால் 'இப்படி ஒரு பதிலை வேறு எந்தக் கொம்பனாலும் கூறமுடியாது' நினைத்திருந்தால் இந்தக்கேள்வியை அவர் தூண்டில் பகுதியில் 'இடம் பெறாது தவிர்த்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. துணிவுடன் பதில் கூறினார். அவரது இலக்கிய நேர்மையும், எத்தகைய எதிர்ப்பினையும் ஓர்மத்துடன் சந்திக்கும் ஆளுமையும் தான் அவரை வாழ்நாள் சாதனையாளராக உயர்த்தியது.

ஆரம்ப காலத்தில் ஈ.வெ.ரா பெரியார், சி.என் அண்ணாத்துரை ஆகிய திராவிடக் கழகத்தினரின் பகுத்தறிவுக் கருத்துக்களால் கவரப்பட்ட இவர் 1948 இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ப. ஜீவானந்தம் அவர்கள் இலங்கை வந்திருந்தபோது ஏற்பட்ட தொடர்பினால் அவருடைய ஆளுமைக்கு ஆட்பட்டு பொதுவுடமைக் கருத்துக்களை வாசிக்கத் தொடங்கினார். மார்க்கஸி கார்க்கி, அப்பாஸ், புதுமைப்பித்தன், விந்தன், காண்டேகர், சிதம்பர ரகுநாதன் ஆகியோரின் எழுத்துக்களை விரும்பிப்படித்தார். மாக்ஸில சிந்தனை-களால் கவரப்பட்டார்.

இக்கால கட்டத்தில் தான் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்கிளை ஆரம்பகட்டத்தில் இயங்கத் தொடங்கி இருந்தது. தோழர் மு. கார்த்திகேசன் செயலாளராகவும், தோழர்கள் அ. வைத்திலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், எம்.ஸி. சுப்பிரமணியம், இராமசாமி ஐயர், வி. ஏ. கந்தசாமி, டாக்டர் சீனிவாசகம், ஆர். ஆர். பூபாலசிங்கம், எஸ், மகாலிங்கம், கே, ஜனகன், டெயிலர் காதர், குலவீரசிங்கம், ராஜகோபாலன் ஆகிய ஆரம்பகால உறுப்பினர்களுடன், இளம் தோழர்களாக இளங்கீரன், கே.டானியல், டொமினிக்ஜீவா, எஸ் பொன்னுத்துரை, அரசடி இராசையா, நீர்வைப் பொன்னையன் ஆகியோரும் இணைந்து கொண்டனர்.

'தோழர் மு. கார்த்திகேசன் அவர்களுடன் ஏற்பட்ட தோழமை உறவே, என்னைப் போன்ற பல இலக்கியப்படைப்பாளிகளை ஈழத்தமிழ் இலக்கியத்திற்குத் தந்தன. அதுமட்டுமன்றி அவரது சிந்தனைகளால் பண்படுத்தப்படாத முற்போக்கு எழுத்தாளர்கள் இல்லை என்றே சொல்லி விடலாம்' என டொமினிக் ஜீவா குறிப்பிடுகின்றார்.

கே.டானியல், எஸ். பொன்னுத்துரை ஆகியோருடன் தோழமை பூண்ட டொமினிக்ஜீவா எழுத ஆரம்பித்தபோது 'புரட்சிமோகன்' என்ற புனை பெயரிலும், கே. டானியல் 'புரட்சிதாஸன்' என்றும், எஸ். பொன்னுத்துரை 'புரட்சிப்பித்தன்' என்றும் புனைபெயர்களில் எழுதினார்கள். ஆயினும் இப்புனை பெயர்கள் இவர்களுக்கு நீண்டகாலம் நிலைக்கவில்லை. சொந்தப் பெயர்களிலேயே ஈழத்து தமிழ் இலக்கியத்தில் சாதனைகள் படைத்தனர்.

1950களிலிருந்து 1960 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த டொமினிக்ஜீவாவின் சிறுகதைகள் ஈழத்துச்சிறுகதை உலகிற்கு புதிய பரிமாணத்தைத் தந்தன. சுதந்திரன், தினகரன், வீரகேசரி போன்ற இலங்கைப் பத்திரிகைகளும், தாமரை, சரஸ்வதி போன்ற இந்திய இலக்கிய சஞ்சிகைகளும் இவரது கதைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தன. இதனால் டொமினிக்ஜீவா இலங்கை வாசகர்களுக்கு மட்டுமன்றி தமிழ்நாட்டு வாசகர்கள், படைப்பாளிகளிடமும் அறிமுகமானார். 'கலை இலக்கிய பரிவர்த்தனை என்பது ஒரு வழிப்பாதை அல்ல' என்ற கொள்கையுடைய ஜீவா, ஈழத்து இலக்கியத்தை தமிழ்நாட்டிற்கும் அறிமுகப்படுத்திய கலை இலக்கியப் பாலமாக அமைத்து சாதனைபடைத்தார்.

தமிழகத்து கலை இலக்கிய சஞ்சிகையான சரஸ்வதி இதழின் வெளியீடாக டொமினிக் ஜீவாவின் 'தண்ணீரும் கண்ணீரும்' சிறுகதைத் தொகுதி வெளியிட்டு வைத்த சரஸ்வதி இதழ் ஆசிரியர் வ. விஜயபாஸ்கரனால் தமது முன்னுரையில் 'ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியம் தென் இந்திய தமிழ் இலக்கியத்தின் பிரதிபலிப்பாக இருக்க கூடாது. அவ் இலக்கியங்கள் ஈழத்து மக்கள் வாழ்க்கையினைப் பிரதிபலிப்பனவாக அமைய வேண்டும்' அந்த வகையில் டொமினிக் ஜீவா சிறுகதைகள் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். 1960 இல் வெளியிடப்பட்ட 'தண்ணீரும் கண்ணீரும்' 1961 இல் இலங்கையின் மிகப்பெரிய விருதாயும், பரிசாயும் கருதப்பட்ட சாகித்திய மண்டல பரிசினைப் பெற்றது. ஈழத்தின் முதல் நவீன புனை கதை இலக்கியத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்ற முதல்வன் என்ற பெருமைக்குரிய சாதனையாளர் ஜீவா அத்துடன் அமையாது. இச்சிறுகதைத் தொகுதி மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் M.A. மாணவர்களுக்குப் பாட நூலகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சாதனை படைத்தது.

இலங்கையில் எல்லா இனத்தவர்களும் 'சுயநிர்ணயம்' எனப்பட்ட தர்ம நியாயமான உரிமைகளைப் பெற்று ஐக்கிய இலங்கையில் வாழ வேண்டும் என எப்பொழுதும் உரிமைக்குரல் எழுப்பி வருபவர் ஜீவா. தமிழ், சிங்கள, முஸ்லீம் ஏனைய இனத்தவர் உட்பட்ட தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் முற்போக்குப் புத்திஜீவிகள் மத்தியில் இவ்வினங்களின் இலக்கியப் பாலமாகவும் திகழ்பவர் டொமினிக்ஜீவா. ஜீவாவின் சிறுகதைகள் சிங்கள மொழி மாற்றம் செய்யப்பட்டு சிங்கள வாசகர்களையும், படைப்பாளிகளையும் சென்றடைந்துள்ளது. அதுபோன்ற மார்டின் விக்கிரமசிங்கா முதல் பிரியந்த சுஜித் அத்தநாயக்க வரை பல படைப்பாளர்களின் கதைகளை பல இருமொழி இலக்கிய வல்லுனர்கள் மூலம் தமிழில் மொழி மாற்றம் செய்து மல்லிகை இதழ்களில் வெளியிட்டுள்ளார். அத்துடன்



அமையாது மல்லிகையில் வெளியான இருபத்தி ஐந்து சிங்களச் சிறுகதைகளை செங்கை ஆழியான் அவர்கள் தொகுத்து வழங்க அந்நூலை மல்லிகைப் பந்தலின் வெளியீடாக வெளியிட்டுச் சாதனை படைத்துள்ளார்.

டொமினிக் ஜீவாவின் சிறுகதைகள் சிங்களத்தில் மட்டுமன்றி ஏ.ஜே. கனகரட்னா அவர்களால் ஓர் இரு கதைகள் ஆங்கிலத்திலும், ரஷ்யமொழியில் 'விதானி பூர்ணிகா' என்பவராலும், செக் மொழியில் 'காமில்சுவலபில்' என்பவராலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஒரு தமிழ் எழுத்தாளனின் கதைகள் சிங்களம், ஆங்கிலம், ரஷ்ய, செக் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட சாதனை டொமினிக் ஜீவாவுக்கே உண்டு.

1966 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி மல்லிகை என்னும் சஞ்சிகையின் முதல் இதழ் டொமினிக்ஜீவாவினால் தமது உழைப்பையும், தன் நம்பிக்கையையும் மூலதனமாகக் கொண்டு ஆரம்பித்தார். இலட்சியப் பிடிப்பும், கொள்கை உறுதியும், சோதனை முயற்சிகளில் ஈடுபாடும், புதுமைகளை வரவேற்று வளர்ப்பதில் உற்சாகமும், புதிய திறமைகளைக் கண்டு ஊக்கமளிக்கும் போக்கும், மாற்றுக் கருத்தாளர்களின் திறமைகளை மதித்து அவர்கள் ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் மனிதாபிமானம் கொண்ட மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா ஜனவரி 2010 இல் 45ஆம் ஆண்டும் மலரை வெளியிட்டு ஈழத்துக்கலை இலக்கியச் சஞ்சிகை வெளியீட்டில் ஒரு அசுர சாதனை படைத்துள்ளார். 45வது ஆண்டு மலரின் ஆசிரியதலையங்கத்தில்..... 'கொஞ்சம் பொறுத்திருங்கள். இன்னும் நாலே நாலு ஆண்டுகள் முடியட்டும்! ஐம்பதாவது ஆண்டு மலர் தயாராகிவிடும்! உங்களது கரங்களில் சமர்ப்பிக்கிறேன்!' என்று டொமினிக் ஜீவா குறிப்பிடுகின்றார். என்னே அவரின் திடசித்தம். உணவால் மட்டும் வாழ்பவரல்ல டொமினிக்ஜீவா உள்ளத்தால் வாழ்பவர்! உள்ளத்தில் உண்மை ஒளி இருப்பதனால் அவர் வாக்கினிலும் ஒளி உண்டு. அவர் எண்ணம், அவர் கை வண்ணத்தில் ஐம்பதாவது ஆண்டு மலர் மலரும், மணம் வீசும்.

பத்திரிகை தர்மம் என்பதனை கடந்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகளாக கடைப்பிடித்து வருபவர் ஜீவா. ஒரு சமயம் 'மாத்ருபூமி' மலையாள வார இதழின் ஆசிரியராக இருந்த எம்.டி வாசுதேவன்

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

# இன்னொரு... 08

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

1950களின் ஆரம்பப்பகுதி. விஞ்ஞான வளர்ச்சியின் தெறிப்புக்கள் இலங்கையில் அதிக அளவில் காணப்படாத காலம். ஆயினும் வைத்தியக் கலாநிதி மகாதேவன் பிடிவாதமாக இலங்கையின் வடபகுதியில் உள்ள, அந்த மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள் கொண்ட வைத்தியசாலையில் அந்த அறுவை சிகிச்சையை நடத்தத் திட்டமிட்டிருந்தார். நாடு முழுவதுமே, ஏன் உலகம் முழுவதுமே இந்த அறுவை சிகிச்சையைப் பற்றி பேசிக் கொண்டன, விவாதித்துக் கொண்டன. இலங்கையின் அந்த சிறிய வைத்தியசாலை இந்த அறுவை சிகிச்சைக்கு பொருத்தமானதில்லை என்ற கருத்துக் கணிப்புக்குக் கூட வைத்திய மட்டத்தில் இருந்தது. பிள்ளைகளின் உயிருக்குக் கூட சில சமயங்களில் ஆபத்து வரலாம் என்று ஒரு பத்திரிகையில் ஊகமாகச் செய்தி ஒன்றினையும் எழுதியிருந்தார்கள். எல்லாவற்றிக்குமான தெளிவான விளக்கங்களை வைத்தியக் கலாநிதி மகாதேவன் கொடுத்திருந்தார்.

## ◇ சி.வி. நாதன் ◇

பத்திரிகை ஒன்றின் நிருபர் "ஏன் இந்த சிக்கலான அறுவை சிகிச்சையை இங்கே, இலங்கையில் செய்ய முயற்சிக்கின்றீர்கள்? இது கொஞ்சம் ரிஸ்க் போலத் தெரியவில்லையா?" எனக் கேட்டபோது, மகாதேவன் கொஞ்சம் கோபமாகிவிட்டார்.

"பல விடயங்களைக் கருத்தில் கொண்டுதான் நான் இந்த முடிவினை எடுத்தேன். நாட்டின் இயற்கையான தட்ப வெப்பநிலையானது சிகிச்சையின் பின்னர் உடல், மனநிலைகள் தேறுவதற்கு மிக வசதியாக இருக்கும். மேலும் சிகிச்சையில் பங்கு கொள்ளும் வைத்தியர்கள், தாதிகள் மற்றும் இது தொடர்பாக பங்கு கொள்ளும் எல்லோருமே நம்மவர்கள். தாம் செய்யப்போவது பற்றித் தெளிவான விளக்கத்தினைக் கொண்டிருக்கின்றார்கள். இவற்றை விட எம்மால் முடியுமான காரியத்தை ஏன் மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்? அது கோழைத்தனமல்லவா? பொருளாதரநிலையில் கூட இது எவ்வளவோ சிக்கனமாக இருக்கின்றது."

இன்னமும் பல விளக்கங்களை மகாதேவன் கூற, அமெரிக்க வைத்திய நிபுணரான றொபேர்ட்டும் அவற்றை ஆமோதித்தார். பத்திரிகையில் வந்த இந்த விடயங்கள் எல்லாம் நாயகத்திற்கும் திலகத்திற்கும் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தின. இதைவிட உற்றார் உறவினர்களின் கேள்விகளுக்கும் பத்திரிகைகக்காரர்களின் கேள்விகளுக்கும் பதில் சொல்லியே களைத்துப் போனார்கள்.

இடைக்கிடை நீலகண்டரின் கணிப்பின் ஞாபகமும் வந்து போகும். உறவினருக்குக் கூட நீலகண்டர் கணித்துக் கூறியிருந்தது தெரிந்து விட்டது. அவர்களும் தம்பங்கிற்கு ஐயங்களையும், ஏற்படக் கூடிய சிக்கல்கள் போன்றவற்றையும் நாயத்திற்கும், திலகத்திற்கும் கூற,
சில சமயங்களில் ஏன் கையொப்பமிட்டோம் என்று கூட நினைத்தார்கள். மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் இருப்பது போன்ற நிலை. மிகவும் இறுக்கமான நாட்களாகவும், நீண்ட நாட்களாகவும் நாட்கள் ஒவ்வொன்றாக நகர, அறுவை சிகிச்சைக்கான அந்த நாளும் வந்தது.

அன்று, அது ஒரு திங்கள் கிழமை! மதியம் 3 மணி சுமாருக்கு இன்பனும் இனியனும் அறுவை சிகிச்சை நடைபெறும் பிரத்தியேகமான அறைக்குள் கொண்டு செல்லப்பட்டார்கள். எதுவித சலனமும் இன்றி, பயமும் இன்றிச் சிரித்தபடியே, ஒன்றாக இணைந்தபடியே இருந்த இருவரையும் அறுவை சிகிச்சைக்கான அறையினுள் கொண்டு செல்வதை, பயமா அல்லது தவிப்பா என்று இனம் பிரித்து அறியமுடியாத ஏதோ ஒரு உணர்வுடன் நாயகமும் திலகமும் பார்த்துக் கொண்டு நின்றார்கள், அறுவை சிகிச்சை நடைபெறப் போகும் அறையின் வாசலில்.

மகாதேவன் வந்தார். அவர் வருவதை இவர்கள் இருவரும் காணவில்லை. நாயகத்தின் தோளில் ஆதரவாகக் கையைப்போட, நாயகம் திரும்பிப் பார்த்தார். மகாதேவனைக் கண்டவுடனே நாயகத்தின் கண்கள் பனித்தன. திலகத்தின் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொலவென வெளிவரத் தொடங்கியது. ஆனாலும் சத்தம் ஏதும் வரவில்லை. அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்ட மகாதேவன்,

"ஒன்றுமேயில்லை! பயப்படாதையுங்கோ! தைரியமாக இருங்கோ. இது ஒரு சின்ன ஒப்பரேசன்தான். சின்னப் பிள்ளைகள் எண்டதாலை கொஞ்சம் மெது மெதுவாகச் செய்யிறதாலைதான் பதினாறு மணித்தியாலங்கள் வரை எடுக்கும் என்று சொன்னனான். சில சமயங்களிலை அதுக்கும் குறைவான நேரத்துக்குள்ளை கூட முடிச்சிடலாம்" என்றவர் "நீங்கள் என்ன செய்யப் போகிறியள்? நாளைக்கு கிட்டத்தட்ட இதே நேரமளவிலைதான் எல்லாமும் முடியும். அதுமட்டும் இஞ்சை நிற்கப் போறியளோ இல்லாட்டி வீட்டை போயிட்டு நாளைக்கு காலமை என்டாலும்...."

மகாதேவன் முடிக்கும் முன்னராகவே திலகம் இடைமறித்துச் சொன்னாள்.

"நாங்கள் இரண்டுபேரும் இஞ்சைதான் நிற்கப் போறோம்"

"அதற்கு அவசியமில்லை. ஏனென்டால் பிள்ளையளைக் கவனிக்கவெண்டு பலர் உள்ளே இருக்கினம். இருப்பினும் உங்கடை விருப்பம்" என்று மகாதேவன் தொடர்ந்தார்.

"திரும்பவும் ஒருக்கா இந்த ஒப்பரேசனைப் பற்றிச் சொல்லுறேன். மொத்தம் பன்னிரண்டு டொக்டர்மார் இதில் பிரதான பங்கெடுக்கின்றார்கள். நானும் றொபேர்ட்டும் கண்காணிப்புடன் பார்த்துக் கொண்டிருப்போம். மொத்தம் 26 தாதிமார். ஆண் பெண் என உதவிக்கு இருக்கின்றார்கள். ஒப்பரேசன் 4 கட்டமாக நடைபெறப் போவதால் எல்லோரும் ஒரே நேரத்தில் உள்ளே போகமாட்டார்கள். அவர்களது நேரம் வரும்போதுதான் ஒப்பரேசன் அறைக்குள் வருவார்கள். அதேபோலவே ஒரு கட்ட ஒப்பரேசன் முடிந்ததும் அந்த வைத்தியர்களும் தாதிமாரும் வெளியே வந்துவிடுவார்கள். இவற்றையிட்டு நீங்கள் பயப்படவோ அல்லது பதட்டப்படவோ தேவையில்லை. தேவைப்படின் நான் இடைக்கிடை வெளியே வந்து உங்களுடன் கதைக்கலாம். அது கூடத் தேவையில்லை." என்றவர்,

"சரி நான் உள்ளே போகப் போகின்றேன். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ! எல்லாம் நல்லபடி நடக்கும்" எனக் கூறிவிட்டு அறுவை சிகிச்சை அறையை நோக்கி நடந்தார்.

மகாதேவன் சிரமப்பட்டே பேச்சுத் தமிழில் பேசுவது தெரிந்தது. ஆனாலும் அவரது தெளிவும், உறுதியும் இருவருக்கும் ஆறுதலாக இருந்தது. - இன்னமும் வரும்

# வாழ்நாள் சாதனையாளர்...

'நீங்கள் உங்க பத்திரிகையில் அதிகமாக எழுவதில்லை'? என ஜீவா அவர்களிடம் கேட்ட போது, 'ஒரு பத்திரிகை வெளியிடுவதையே எனது மேலான இலக்கியச்சேவையாக கருதுகின்றேன்' எனப்பதில் அளித்துள்ளார்.

யாழ்குடாநாட்டில் முதல் முதல் வெளியான மல்லிகை இன்று இலங்கையின் தேசிய பத்திரிகையாக, உலகத்தமிழர்களின் சர்வதேச பத்திரிகையாக திகழ்கின்றது என்றால் அது டொமினிக்ஜீவாவின் அயராத உழைப்பும், அகன்ற இலக்கிய நெஞ்சும் அனைவரையும் அரவணைத்துப்போகும் பண்புகளுமே காரணமாகும். ஜீவாவுடனும், மல்லிகை இதழுடனும் கருத்து ரீதியாக ஒத்துப்போக முடியாதவர்களின் ஆக்கங்களுக்குக்கூட களம் அமைத்துக் கொடுத்ததோடு அமையாது, மல்லிகையின் இதழ்களின் அட்டைப்படங்களாகவும் பிரசுரித்துக் கௌரவித்தார். 1986ஆம் ஆண்டில் 'அட்டைப்பட ஓவியங்கள்' என்ற பெயரில் மல்லிகைப் பந்தல் வெளியீடாகக் கொண்டு வந்தார். இவை பற்றிக் குறிப்பிடும்போது என்னுடன் ஒத்துப்போகாத போதும், 'அவர்கள் மதிக்கத்தக்கவர்கள் போற்றிப் பாராட்டக்கூடியவர்கள் சாதனையாளர்கள் கணிசமான முறையில் ஈழத்து மண்ணுக்குப் பெருமை சேர்த்துத் தந்தவர்கள் செழுமையூட்டியவர்கள்' எனக்குறிப்பிடும் அவர்கள் 'சிறியன சிந்தியாதவனாக' உயர்ந்து சாதனையாளராகத் திகழ்கின்றார்.

இதே போன்று ஈழத்து இலக்கியம், நாடகம், கூத்து, இசை, நடனம், ஓவியம், சிற்பம் ஆகிய கலை வளர்ச்சிக்கு தொண்டாற்றிய படைப்பாளர்கள், கலைஞர்களையும், தமிழ் ஆராய்ச்சியாளர்களையும் உள்ளடக்கி 'மல்லிகை முகங்கள்' என்னும் நூலையும் 'மல்லிகைப்பந்தல்' வெளியீடாக எமக்கும்' எதிர்காலச் சந்ததிக்கும் தந்துள்ளார்.

பிறரை கௌரவிக்கும் டொமினிக்ஜீவாவின் புகைப்படத்தை, 1958 இல் தமிழக இலக்கிய சஞ்சிகையான 'சரஸ்வதியும்', 1968 இல் 'தாமரை' கலை இலக்கிய இதழும் அட்டைப்படமாக வெளியிட்டு கௌரவித்தன. ஈழத்திலும், தமிழகத்திலும் வெளியான பல கலை இலக்கிய ஏடுகள், ஜ ன ர ஞ் ச க ப த் தி ரி கை க ள் டொமினிக்ஜீவாவைப் பேட்டி கண்டு பிரசுரித்தன. எழுத்தாளராக மாத்திரமன்றி, தர்ம ஆவேசம் கொண்ட பேச்சாளராக, மானிடவிமோசன ஆர்வலராக, கொண்ட கொள்கையில் பற்றுறுதியாளராக, இனங்களுக்கான சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஐக்கிய இலங்கைக்குள் சமதர்ம ஆட்சி ஏற்பட வேண்டும் என்ற கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கையாளராக வாழ்ந்து வருகின்றார். அறுபது ஆண்டுகள் எழுத்தாளராக, நாற்பத்தி ஐந்து ஆண்டுகள் பத்திரிகை ஆசிரியராக, இருபத்தி எட்டு ஆண்டுகள் 'மல்லிகை பந்தல்' பிரசுரம்' மூலம் முப்பதுக்கு மேற்பட்ட நூல் வெளியீட்டாளராக, அடிக்கடி இந்தியாவுக்கும், 1987இல் சோவியத்யூனியனுக்கும், 2000 ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளுக்கும் கலை, இலக்கியத்தூதுவனாக சென்றும் வந்தார்.

இலக்கியம் சமூகத்தின் கண்ணாடி வரலாற்றின் பிரதிபலிப்பு, ஆன்மாவின் வெளிப்பாடு மனச்சாட்சியின்குரல் என்ற வரையறுப்புக்களின் ஒட்டுமொத்தமான உருவமான ஜீவா, ஈழத்திற்கென தனித்துவமான இலக்கிய பாரம்பரியத்தை உருவாக்கி அதனைப் பேணிப்பாதுகாத்து வளம் பெறச் செய்வதில் மல்லிகை ஜீவா வாழ்நாள் சாதனையாளராக திகழ்கின்றார்.

'ஆயிரம் கைகள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை. ஆணையிட்டே யார் தடுத்தாலும் அலைகடல் ஓய்வதில்லை....' என்ற 'கவிஞர் முத்துக்கூத்தன்' வரிகளுக்மைய ஈழத்து இலக்கியக்குரலான சாதனையாளர் டொமினிக்ஜீவாவின் குரல் தமிழ் இலக்கியத்தில் என்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife GTA Realty Inc. Brokerage *

1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

# வியாபார நிறுவனம் ஒன்றின் வெற்றியின் இரகசியம் 5 "S" முகாமைத்துவ செயல்முறையில் தங்கியுள்ளதா?

வியாபார நிறுவனத்தின் நோக்கம் இலாபமீட்டுவதும், வியாபார போட்டிச் சந்தையில் நிலைத்திருப்பதும் ஆகும். இந்த நோக்கத்தையடைவதற்காக நிறுவனங்கள் பல்வேறு வியாபார, முகாமைத்துவ தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்தி வெற்றியீட்டிவருவது சாதாரணமான விடயமாகும்.

அவ்வாறான முகாமைத்துவ செய்முறைகளில் ஒன்றாக 5 "S" என குறிப்பிடப்படும் முகாமைத்துவ முறைமை பாரிய மற்றும் சிறிய வியாபார நிறுவனங்களில் சாதாரண மாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இச்செய்முறையானது முதன்முதலில் ஜப்பானியர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட தனால் "ஜப்பானிய 5 எஸ் முகாமைத்துவ முறைமை" என அழைக்கப்படுகின்றது. ஜப்பானிய மொழியில் 5 சொற்பதங்களை முதன்மைப்படுத்தி இக்கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. 5 படிமுறைகளைக் கொண்டதாக அமையும் இக்கோட்பாடு, ஒவ்வொரு படி முறையும் ஜப்பானிய மொழியில் "எஸ்" என்ற எழுத்தில் தொடங்கப்படுவதால் 5 முதல் எழுத்துக்களையும் குறிக்குமுகமாக 5 "S" முகாமைக்கோட்பாடு எனப்படுகின்றது.

SEIRI, SEITON, SEISO, SEIKETSU, SHITSUKE என அமையும் ஜப்பானிய சொற்களான மேற்படி 5 "S" களைக் குறிக்கும் விளக்கங்களைப்பார்க்கு முன்னர் ஜப்பானிய சொற்களுக்கு நிகரான ஆங்கில சொற்பதத்தையும், அதன் தமிழ் பதத்தையும் பின்வரும் அட்டவணையில் நோக்கலாம். மேற்படி இந்த சொற்பதங்கள் முகாமைத்துவ ரீதியாக கூறும் விடயங்களை ஒவ்வொன்றாக நோக்கலாம்.

Seiri – 5 எஸ் முறைமையின் முதலாவது



படி நிலை இதுவாகும். நிறுவனம் ஒன்றில் அல்லது அலுவலகம் ஒன்றில் அல்லது வேலைத்தளம் ஒன்றில் குறிப்பிட்ட கருமம் ஒன்றினை ஆற்றுவதற்கு பல்வேறுபட்ட உபகரணங்கள், தளபாடங்கள், காகிதாதிகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் சில தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு தேவையானதாக இருப்பதும், சில பொருட்கள் குறிப்பிட்ட தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட்டு பின்னர் தேவையற்றதாக இருப்பதும், வேறும் சில பொருட்கள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் உபயோகிக்கப்பட்டு பின்னர் பாவனைக்கு பொருத்தமற்றதென நிட்சயப்படுத்தப்பட்ட பின்னரும் வேலைத்தளத்தில் பேணப்பட்டு வருவதும் இவ்வாறான பலதரப்பட்ட பொருட்கள் எமது வேலைத்தளத்தில் காணப்படுவது சாதாரண விடயமாகும்.

இவ்வாறான பொருட்களில் எமது வேலைக்குப் பொருத்தமற்றவையெனக் கருதும் பொருட்கள், அவசியமற்றவை-

| ஜப்பானிய சொற்பதம் | ஆங்கில சொற்பதம் | தமிழ்ப்பதம் |
|---|---|---|
| Seiri | Sort (Tidiness) | தேவையற்றதை அகற்றதல் |
| Seiton | Set (In place-Orderliness) | தேவையானதை ஒழுங்குபடுத்தல் |
| Seiso | Shine (Cleanliness) | சுத்தமாகவும், அழகாகவும் பேணுதல் |
| Seiketsu | Standardize | நியமத்திற்கு உட்படுத்தல் |
| Shitsuke | Sustain (Discipline) | நிலைத்திருக்கக்கூடியதாக மாற்றுதல் |

யெனக்கருதும் பொருட்கள், மற்றும் பயன்பாட்டிற்குப் பொருத்தமற்ற உபகரணங் கள் மற்றும் தளபாடங்கள் என்பவற்றை வேலைத்தளத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும் எனக்குறிப்பிடும் விடயமே Seiri எனப்படுகின்றது.

இவ்வாறான பொருட்களை அகற்றுவதற்கு முன்னர் ஒவ்வொரு பொருட்களும் மிகவும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு அப் பொருட்கள் வேலைத் தளத்திற்குப் பொருத்தமற்றதென்பதை நிச்சயப்படுத்திய பின்னர் அவற்றை இல்லாதொழிக்கவேண்டும் அல்லது அப்புறப்படுத்தல் வேண்டும். மிகவும் இலகுவான இக்கருமத்தை ஒவ்வொரு வேலையாட்களும் குறிப்பிட்ட கால இடைவெளியில் மேற்கொள்வது சிறப்பான தாகும். இதனால் வினைத்திறன் கூடியதான (Effective use of space) இடவசதியை ஏற்படுத்திக்கொள்வதுடன், தேவையான பொருட்கள், கொள்வனவு செய்யவேண்டிய பொருட்கள் என்பவற்றையும் இலகுவாக இனம்கண்டுகொள்ளவும் முடியும்.

Siton - இது "5S" முறையின் இரண்டாவது



படிநிலையாகும். வினைத்திறனான (Efficiency) செயற்பாடான இப்படிமுறை யானது பாவனைக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் ஒழுங்கமைக்கப் பட்டு அப்பொருட்களுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைக்கப்படுவதாகும். இவ்வாறு உரிய இடத்தில் பொருட்களை வைப்பதனால் தேவைக்கேற்ப உடனடியாக உரிய பொருளை எடுக்கக்கூடியதாக விருக்கும். அதன் பின்னர் பாவனை முடிவடைந்ததும் குறிப்பிட்ட பொருள் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட வேண்டும். அதாவது எடுத்த பொருள் எடுத்த இடத்தில் வைக்கப்படுவதை சம்மந்தப்பட்டவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இதனால் போதிய இடவசதியை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். அத்துடன் ஒவ்வொரு பொருட்களும் பயன்பாட்டிற்குத் தேவையான நேரத்தில் இலகுவாகவும், விரைவாகவும் எடுக்கக் கூடியதாக இருந்தால் வேலை ஓட்டமானது வினைத்திறனுடையதாக வும், விளைதிறன் உடையதாகவும், உற்பத்தித்தரம் வாய்ந்ததாகவும் (Productive) இருக்கும்.

ஒவ்வொரு பயன்பாட்டு உபகரணங்களும் (Tools), மூலப்பொருட்களும் உரிய இடத்தில், உரிய முறையில் (Position) வைக்கப்படுமாயின் குறிப்பிட்ட வேலையுடன் தொடர்பானவர்கள் இலகுவாகப் பொருட்களைப் பெற்று உரிய நேரத்தில் அவ் வேலையை செய்து முடிக்கக்கூடியதாக இருக்கும். இதனால் பெருமளவான நேரம் சேமிக்கப்படும். அத்துடன் வேலை செய்பவர்களும் சலிப்பின்றி வேலையை முடிக்கலாம்.

Seiton மூலம் ஒவ்வொரு பொருட்களுக்கும் தனியான இடம் ஒதுக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்படும். அத்துடன் இலகுவாக அடையாளம் காண்பதற்காக பொருட்களுக்கு இலக்கம் இடப்படலாம். இவ் இலக்கங்கள் பொருட்பதிவேட்டிலும் குறிப்பிடப்படும். இதனால் பொருட்கள் பாதுகாக்கப்படும். உபகரணங்கள், பொருட்களுக்கு இலக்கங்கள் அல்லது பெயர்கள் இடுவதால் துலாம்பரமாகவும் இலகுவாகவும் பொருட்களை இனம் காணமுடிவதுடன் வேலையுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அப்பொருட்களைக் கையாள்வதும் இலகுவாக இருக்கும். இதன் மூலம் பெறுமதியான நேரம் விரையமாவது பெருமளவில் தடுக்கப்படும். *- தொடரும்*



குமா. ஜெயகுமார்
(B.A;Dip.in.Mgt;Dip.in.HRM-Srilanka)
aojeyakumar@yahoo.com

**UNITED TAMIL SPORTS CLUB**

எதிர் வரும் யூலை மாதம் 10ஆம் திகதி 2010ம் ஆண்டு அன்று யுனைட்டட் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் இரண்டாவது வெளியரங்க தடகள விளையாட்டுப் போட்டி York University மைதானத்தில் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெற இருக்கின்றது. இதில் 5 வயது முதல் 60 வயது வரை ஆண் பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்போட்டிகள் யாவும் Ontario மாகாண விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்படும். இதில் அனைத்து தமிழ் மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். போட்டிகளில் பங்குபற்றுபவர்களுக்கு மாத்திரம் $15 மட்டும் அறவிடப்படும். ஒருவர் மூன்று போட்டிகளில் மாத்திரம் பங்கு பற்றலாம்.

மேற்படி அனைத்து விபரங்களுக்கும் இலவச பயிற்சி விபரங்களுக்கும் கீழ் கண்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**416.838.3999 / 416.458.5467 / 416.902.6600 / 416.219.8185**

விண்ணப்பப் படிவங்கள் July 04, 2010 ஆம் திகதிக்கு முதல் கிடைக்கப்பெறவேண்டும். விண்ணப்பப்படிவங்களை எமது இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
www.unitedtamilsportclub.com



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# டியுனியா - கண்களில் முத்தமிடாதே

## Dunia: Kiss Me Not on the Eyes

பண்டைய காலங்களில் நாட்டியம் என்பது பெண்கள் ஆண்களுக்காக ஆடும் ஒரு நிகழ்வாக திகழ்ந்தது. தேவதாசிகள் நாட்டியக் கலையில் சிறந்து விளங்கினர் என்பது புராணங்கள் சொல்லும் தகவல். பின்னர் இந்நிகழ்வு கலையாக சிறப்படைந்து அனைவரும் பங்கு பற்றும் கலையாக மாறி விட்டது. இன்று இது எம்மவர் மத்தியில் ஒரு வீடியோவைக் கண்டேன்.

2. பெலி நடனம்

இதில் இரு வகை உண்டு.

1. Raqs sharqi இவ் வகையான நடனம் பொதுவாக உணவகங்களில் ஆடப்படு வதுண்டு. மேற்கத்தியருக்கு நன்கு



சமூக அடையாளமாகவும் அந்தஸ்துக்குரிய ஒரு விடயமாகவும் மாறிவிட்டது. அரங்கேற்றம் என்பதும் அவ்வாறான ஒன்றே. யூனியர் அரங்கேற்றம் என்ற நிகழ்வும் இங்கு அரங்கேறுகின்றது. பரத நாட்டியம் மாத்திரமல்ல அனைத்து கலைகளும் அவ்வாறே நடைபெறுகின்றன. இவற்றையும் மீறி ஒரு சில நல்ல நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் கிறிஸ்மஸ் விருந்து ஒன்று நான் வேலை பார்க்கும் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. அந் நிகழ்வில் எமது நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஒரு மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த பெண் பெலி நடனம் ஒன்றை ஆடிக் காண்பித்தார். வித்தியசமாகவிருந்த இந்த நடனத்தை அத்துடன் மறந்து விட்டேன். சில மாதங்களுக்கு முன்னர் மார்க்கம் நூலகத்தில் பெலி நடனம் பற்றிய ஒரு

அறிமுகமானது. பெரும்பாலும் பெண்களே ஆடுவதுண்டு.

2. Raqs baladi இந் நடனம் கிராமிய நடன வடிவத்தைக் கொண்டது. ஆண்களும் பெண்களும் இணைந்து ஆடுவதுண்டு. சமூக நிகழ்வுகளில் இவ் வகையான நடன நிகழ்வை காணலாம். மத்திய கிழக்கு நாடுகளில் எங்கும் நடைபெறும்.

இந் நடனத்தின் ஆரம்பம் பற்றிய தகவல்கள் இன்னமும் தெளிவாக இல்லை. மேற்கூறிய முதலாவது வகை நடனம் கதகளியை ஒத்த பல கூறுகளைக் கொண்டுள்ளது. உடம்பின் அனைத்து உறுப்புக்களும் இந் நடனத்தில் முக்கிய பங்குவகிக்கும். லிவன்ட் (Levant) பிரதேசத்தில் (லெபனான், இஸ்ரேல், பாலஸ்தீனியம், சிரியா, ஜோர்டான் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதி) பெண்கள் பெண்களுக்கென ஆடிய நடனம் எனவும் இதனை குறிப்பிடுகின்றனர். இவ்வாறு வட ஆபிரிக்காவிலும் (அல்ஜீரியா, எகிப்து, லிபியா, மொரொக்கோ, சூடான்) பெண்களுக்கென ஆடப்பட்டதாக தெரிகின்றது. இந்த நடனத்தின் அசைவுகள் பிள்ளை பிறப்புக்காக நீண்ட காலமாக பரம்பரை பரம்பரையாக பயன்படுத்தப்பட்ட ஒரு பொறிமுறையாக சரித்திர ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எகிப்திய அரசர்களின் அந்தப்புரத்தில் ஆடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. ஒட்டோமன் சாம்ராஜ்யத்தில் நடைபெற்ற உலக சந்தைகளிலும், பெரும் நிகழ்வுகளிலும் இந் நடனம் இடம் பெற்றுள்ளது. ஆரம்ப காலங்களில் இந் நடன நிகழ்வுகளுக்கு ஆண்களை அனுமதிப்பதே இல்லை. ஆனால் பின்னர் இது ஆண்களை சந்தோசப்படுத்தும் நிகழ்வாக மாறிவிட்டது துர்ப்பாக்கியமே. இன்றைய இந்திய திரை இசை நடனங்களில் இதன் கூறுகளைக் காணலாம்.

3. பெலி நடனத்தை மையமாகக் கொண்டு வெளிவந்த படமே டியுனியா. டியுனியா ஒரு பல்கலைக் கழக மாணவி. கவிதையை பிர-தானமாக பாடமாக கற்கின்றார். இவர் தாயின் வழியில் பெலி நடனத்தை ஆட விரும்புகின்றார். தாயின் நடன குருவிடமே இவரும் நடனம் பயில்கின்றார். தாயைப் போல் ஆடாமல் தனித்தன்மையுடன் ஆட வேண்டும் என குரு கூறுகின்றார். டியுனியாவால் முடியவில்லை. அவள் தனது உடலுக்கு தான் அந்நியமானவள் என நினைக்கின்றாள். டியுனியா மூளையால் இயங்குகின்றாள். அவள் தனது உடலைப் பார்க்கும் பொழுது பயப்படுகின்றாள். எங்காவது ஒளிந்து கொள்ள வேண்டும் போன்ற உணர்வு தோன்றுகின்றது. டியுனியாவால் முழுமையாக உணர்ந்து ஆடமுடியாமல் உள்ளாள். அரேபிய கலாச்சாரத்தில் உள்ள கடும் போக்கால் பெண்கள் தங்களை முழுமையாக வெளிப்படுத்த முடியாமல் உள்ளார்கள். இதன் வெளிப்பாட்டை அரேபிய இலக்கியத்தில் காணலாம். பெண் படைப்பாளிகள் மேல் உள்ள பல தடைக-ளால் அவர்கள் சுதந்திரமாக படைப்புக்களை உருவாக்க முடியவில்லை. அவர்கள் தமது உடல் குறித்த கருத்துக்களுக்கு அங்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எகிப்திய சிறுமிகள் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் அந்தரங்கப் பகுதியில் சூடு போடுவது வழமை. டியுனியாவுக்கும் இது நடைபெற்றது. இதன் வெளிப்பாடு பெண்களை உளரீதியாக பாதிப்படையச் செய்கின்றது. இன்றும் இது தொடர்கின்றது. டியுனியா இதனை எதிர்க்கின்றாள். அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒரு சிறுமியைக் காப்பாற்றுகின்றாள். இக் கொடுமைக்கு எதிராக தொடர்ச்சியாக போராடுகின்றாள்.

டியுனியாவின் இலக்கிய பேராசிரியர் பெசிர் அரேபிய இலக்கியத்தில் உள்ள பாலியல் என்ற விடயமாக ஆய்வு செய்தவர். இந்த ஆய்வுக்காகவும் இவர் கூறிய கருத்துக்க ளுக்காகவும் இவர் தாக்கப்படுகின்றார். தாக்குதலில் இவர் பார்வையை இழக்கின்றார். ஆயிரத்தொரு இரவுகள் என்ற நூலின் மூலத்தை வெளியிட வேண்டும் என்பது இவரது கருத்து. அந்த நூலில் பாலி யல் வக்கிரம் உள்ளதாக கூறி பல பகுதிகள் நீக்கப்பட்ட நூலே மக்களுக்கு

துயரம்

**வானரன்**

கிடைக்கின்றது. நோபல் பரிசு பெற்ற Naguib Mahfouz இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார். பசிரும் டியுனியாவும் தொடர்ச்சியாக இவ் விடயங்கள் பற்றி கலந்துரையாடுகின்றனர். இதற்கிடையில் டியுனியாவின் காதலனுடன் டியுனியாவிற்கு திருமணம் நடக்கின்றது. காதலன் பல கட்டுப்பாடுகள் விதிக்கின்றான். நடனம் ஆடத் தடை விதிக்கின்றான். அவளால் தன்னை முழுமையாக அவனுக்கு கொடுக்க முடியவில்லை. உணர்ச்சியற்றவள் என டியுனியாவை கேலி செய்கின்றான்.

தனது திருமணத்தை முறித்துக் கொண்டு வெளியேறும் டியுனியா சுதந்திரமாக இயங்குகின்றாள். இப்பொழுது அவளால் சுதந்திரமாக நடனமாட முடிகின்றது. இங்கு இரண்டு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று டியுனியாவின் நடன ஆசிரியர் டியுனியாவிடம் உனது உடலைக் கண்டு நீ பயப்படாதே. உனது உடல் உனது கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். அவளது இலக்கிய பேராசிரியர் 'சொற்களை கண்டு பயப்படாதே' எனக் குறிப்பிடுகின்றார். இவை இரண்டும் அரேபிய கடுங் கலாச்சாரம் இலக்கியத்திலும் பெண்களிலும் செலுத்தும் கடும் போக்குக்கு உதாரணம்.

இப் படத்தில் டியுனியா கைகளில் அல்லது அவளது உடலில் சிவப்பாலான ஏதாவது அணிந்திருப்பாள். இது இயக்குனர் பெண்கள் மீதான வன்முறையின் கோரத்தை வெளிப்படுத்தும் உத்தி. Jocelyne Saab இயக்கியுள்ள இப் படம் பலத்த எதிர்ப்பை சம்பாதித்துள்ளது. லெபனானைச் சேர்ந்த இவர் தனது படங்களில் தொடர்ச்சியாக பெண்கள் மீதான கொடுமையையும், போரின் பாதிப்புக்களையும் பதிவு செய்துள்ளார்.

இப் படம் கடுங்கலாச்சாரத்தில் இருந்து கட்டுடைக்கும் பெண்பற்றிய மற்றொரு பெண்ணின் பதிவு. இங்கு கட்டுடைத்தல் சமூக காரணங்களுக்காகவே நடைபெறு கின்றது. செல்வத்தை நோக்கியதல்ல இது. மத்திய கிழக்கில் இந்த சமூக மாற்றத்தின் கூறுகளை காணக் கூடியதாவுள்ளது. ஈரானிய படங்கள் வெளிப்படுத்திய தாக்கத்தை இப் படமும் வெளிப்படுத்துகின்றது. ஈரானுக்கு எதிரான மேற்கத்திய நாடுகளின் போக்கு, ஈரானிய கடுங் கலாச்சாரத்து எதிராக எடுக்கப்படும் படங்கள் சர்வதேசத்துக்கு செல்ல மேற்கத்திய நாடுகள் உதவி புரிகின்றன. இந் நிலை மத்திய கிழக்கில் இல்லை. திரைப்பட ஆர்வலர்களால் நிச்சயம் பார்க்கப்படவேண்டும்.

ரொரன்ரோ பெரும்பாக நூலகங்களில் இப் படத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

# மலரும் நம் தேசம்

ஒளி வீசிய தேசத்தில் இன்று
இருள் சூழ்ந்தது.
கருநீலகண்டனும்
வெள்ளைப் பூரானும்
நட்டுவக்காலியும்
மட்டத்தேளுடன் கட்டெறும்பும்
புலிமைச்சிலந்தியொடு பத்தும்பலதும்
பற்றிப்படர்ந்து நிலமெங்கும்
பெருகின. மரமொன்றின்
உச்சியில் கொம்பேறி மூக்கன்
ஆட்சி செய்தது.

மானும் மயிலும், ஆடும் மாடும்
புறாவும் செம்போத்தும் என
சாதுப்பிராணிகள் காணாமல் போயின

அயலவர் நாங்கள்
பையவே பார்த்திருந்தால்
மெய்யாவே நமக்கும் ஆபத்து.
உணருவோம்! எழுவோம்!
காட்டை அழிக்க நெருப்பை வைப்போம்

நச்சுப் பூச்சிகள் பிராணிகள்
அழிந்து சாம்பராக, எரியும் மரத்தின்
கொம்பேறி மூக்கனை
துண்டு துண்டாய் வெட்டிப்போட்டுச்
சந்தியில் நிறுத்துவோம்

நிலத்தை உழுது பண்படுத்தி
பயிரை விதைப்போம்
இருள் கலைந்தது சூரியோதயம்
ஒளி வீசும் நம் தேசத்தில்



- குறமகள்-

# ஒருவரால் பத்துப்பேரை அடிக்க முடியாது!

## சந்திப்பு: ஸ்டண்ட் இயக்குநர் ஆர். கே. முரளி



ஒரு சண்டைக் கலைஞராக தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்பட 250 படங்களுக்கும் மேல் பணியாற்றியவர் முரளி. இவருடைய தந்தை ரகுவும் ஒரு சண்டைப் பயிற்சிக் கலைஞர்தான், முன்னாள் நடிகர் சி.எல். ஆனந்தனுக்கு பெர்மணண்ட் டூப்பாக இருந்தவர். முரளி, முதன் முதலில் ஸ்டண்ட் இயக்குநராக பணியாற்றிய படம் ‘நீ வரும் பாதை.’ அதற்குப் பிறகு ‘உயிரோசை’, ர்’’, ‘அன்பே உன் வசம்’, ‘கணபதி வந்தாச்சு’, ‘சுயேச்சை எம்.எல்.ஏ.’, ‘கலிங்கா’, ‘தீண்ட தீண்ட’, ‘பிரம்மபுத்திரா’... என்று பல படங்களுக்கு இவர் ஸ்டண்ட் இயக்குநர். தற்போது தமிழ்நாடு திரைப்பட சண்டைக் கலைஞர்கள் சங்கத்தின் துணைத் தலைவராக இருக்கிறார். அவரோடு உரையாடினோம்.

கேள்வி: உங்கள் தந்தை நடிகர் சி.எல். ஆனந்தனுக்கு மட்டும் டூப்பாக பணியாற்றினாரா?

முரளி: இல்லை. பல படங்கள்ல குரூப்பில் ஸ்டண்ட் கலைஞராக இருந்தார். இதயக்கனி, மீனவ நண்பன், ஆயிரத்தில் ஒருவன்... ன்னு நிறைய படங்கள்லல்லாம் குரூப்ல வருவார். அப்புறம் அவரே சத்யராஜ் படம் ‘சாவி’, சிவாஜி, விஜயகாந்த் நடித்த ‘வீரபாண்டியன்’ ஆகிய படங்களுக்கு மாஸ்டராக இருந்தார்.

கேள்வி: உங்கள் தந்தை ஸ்டண்ட் மாஸ்டராக இருந்ததாலேயே உங்களுக்கும் இந்தத் துறையில் ஆர்வம் வந்துவிட்டதா?

### நேர்காணல் - பாலு சத்யா

முரளி: எங்களுக்கு சொந்த ஊர் பாண்டிச்சேரி. ஆனா, பொறந்து வளந்ததெல்லாம் சென்னைதான். பத்தாவது வரைக்கும் படிச்சேன். நானும் என்னென்னவோ வேலைக்கெல்லாம் போனேன். கார் டிரைவிங் கத்துக்கிட்டேன். மெக்கானிக்காகூட வேலை பார்த்தேன். எதுவும் சரிப்பட்டு வரலை. இந்தத் துறைக்கே வந்துட்டேன்.

கேள்வி: பொதுவாக, சண்டைப் பயிற்சிக் கலைஞராக இருப்பது என்பது மிகவும் சிரமமான தொழில் என்பார்கள். நீங்கள், இந்தத் துறைக்கு வருவதற்கு உங்கள் தந்தை ஆட்சேபம் எதுவும் தெரிவிக்கவில்லையா?

முரளி: திட்டத்தான் செஞ்சாரு. ஆனா, அப்போ ஒரு குருநாதர் ஒருத்தர் இருந்தார். அவர் பேர் கோபால குருக்கள். அவர்கிட்டதான் நிறையபேர் சண்டை கத்துக்கிட்டாங்க. அப்பா, அவர்கிட்ட அசிஸ்டெண்ட்டா இருந்தார். நான் அப்பாகிட்ட சொல்லாம, நானே போய் கோபால குருக்கள்ட்ட சண்டை கத்துக்க சேந்துட்டேன். அங்க சாயந்தரம்தான் கிளாஸ். அதுனால அப்பாவால ஒண்ணும் சொல்ல முடியல. அவர்கிட்ட, ரெண்டு, மூணு வருஷம் களரி, கராத்தே, இன்னும் கொஞ்சம் மார்ஷியல் ஆர்ட்ஸ் எல்லாம் கத்துக்கிட்டேன். கத்துக்கிட்டதை மேடைலல்லாம் செஞ்சு காமிப்போம். அப்புறம், கொஞ்சம் கொஞ்சமா வீட்ல அடம் பிடிச்சி ஒரு சண்டைக் கலைஞரா குரூப்ல சேந்தேன். அப்பா வேணவே வேணாம்னுதான் சொன்னாரு. அம்மாதான் எனக்கு சப்போர்ட்டா இருந்தாங்க.

கேள்வி: நீங்க முதன்முதல்ல சண்டைக் கலைஞரா நடிச்ச படம் எது?

முரளி: நான் 1982-ல யூனியன்ல சேந்தேன். ஸ்டண்ட் யூனியன்ல சேந்ததுக்கு அப்புறம்தான் சினிமாவுல நடிக்க முடியும். நான் முதல்ல நடிச்ச படம் ‘தொடரும் உறவு.’ என் அப்பா அந்தப் படத்துக்கு மாஸ்டர். நான் அதுல ஃபைட்டர். கார்த்திக் ஹீரோவா நடிச்சிருந்தார். நடிகை ஊர்வசி முதன் முதல்ல நடிச்ச படம் அதுதான். அப்புறம் எல்லா மாஸ்டர்கள்ட்டயும் போக ஆரம்பிச்சேன். தாஸ் மாஸ்டர்கிட்ட ரெண்டு, மூணு வருஷம் இருந்தேன். அப்புறம் பம்மல் ரவிகிட்ட ‘கட்டபொம்மன்’, ‘அரண்மனைக் காவலன்’னு ஆரம்பிச்சு ‘சமஸ்தானம்’ வரைக்கும் பண்ணினேன். அப்புறம் குன்றத்தூர் பாபுகிட்ட ‘உள்ளத்தை அள்ளித்தா!’, ‘மேட்டுக்குடி’, ‘டாட்டா பிர்லா’ன்னு வரிசையா படம் பண்ணினேன். அப்புறம் கிருபா மாஸ்டர்கிட்ட சேர்ந்தேன். அவர்கிட்ட ‘தர்மபத்தினி’, ‘புதுப்பாட்டு’, ‘வில்லுப் பாட்டுக்காரன்’, ‘தெய்வ வாக்கு’, ‘சின்ன மாப்ளை’, ‘சிவா’, ‘உன்னால் முடியும் தம்பி’, ‘உன்னைச் சொல்லிக் குற்றமில்லை’ன்னு அவர்கிட்டயே அம்பது, அறுபது படங்கள்ல ஒர்க் பண்ணினேன்.

கேள்வி: உங்களுக்கு எந்த மாஸ்டர் முன் மாதிரி யாக இருக்கிறார்?

முரளி: கிருபா மாஸ்டர்தான். ஏன்னா, அவரோட ஸ்டைல் ரொம்ப ரியலிஸ்டிக்கா இருக்கறது. இப்போ, சண்டையில யாராவது எட்டி உதைச்சா, நாங்க தூரப் போய் விழுவோம் இல்லையா? அது அளவுக்கு அதிகமா இருந்தா, கிருபா மாஸ்டர் ஒத்துக்க மாட்டார். ஒரு மனுஷன் அடிச்சா, அடி வாங்குறவன் எவ்வளவு தூரம் போக முடியுமோ, அவ்வளவு தூரம்தான் போகணும்னு சொல்லுவார். ஆனா, இப்போ உள்ள ஆளுங்ககிட்ட அந்த ரியலிசம்ங்கறது போயிடுச்சு. பறந்து, பறந்து அடிக்கிறாங்க. ஆனா, இதுகூட ஸ்டண்ட் மாஸ்டர்கிட்ட இருந்து வர்ற விஷயம் இல்லை. டைரக்டர் என்ன சொல்றாரோ, எது வேணும்னு சொல்றாரோ அதைத்தான் மாஸ்டர்ங்க செய்யறாங்க. கிருபா மாஸ்டர்கிட்ட இருந்ததுனாலதான் பாலுமகேந்திரா சாரோட ‘ராமன் அப்துல்லா’, ‘வண்ண வண்ணப் பூக்கள்’, மகேந்திரன் சாரோட ‘ஊர்ப்பஞ்சாயத்து’ல்லாம் என்னால பண்ண முடிஞ்சுது. அப்புறம் அமீர்ஜானோட படங்கள்லாம் பண்ணினேன்.

கேள்வி: தமிழ்சினிமா சண்டைக் காட்சிகள் எல்லாமே நம்ப முடியாதவையாகத்தான் இருக்கின்றன. ஒரு ஆளால், பத்து பேரை அடிக்க முடியுமா?

முரளி: அது ஜீரணிக்க முடியாத விஷயம்தான். பாக்கறவங்க, சண்டையைப் பாத்துட்டு சிரிக்கறாங்க, கத்துறாங்க. உடனே, படம் எடுக்கறவங்க என்ன நினைக்கிறாங்கன்னா, புடிச்சிருக்குன்னு நினைச்சிடுறாங்க. இது ஒண்ணு. அப்புறம், ஒரு பெரிய ஹீரோ எனக்கு பத்து பேரை அடிக்கணும்னு சொன்னார்னா, மாஸ்டர் வேற வழியில்லாம, பண்ணிக் குடுத்துடுறாரு. முதல் படத்தைவிட, ரெண்டாவது படத்துல சண்டை இரண்டு மடங்கு அதிகமா இருக்கணும்னு ஒரு ஹீரோ நினைக்கிறாரே தவிர, கதை என்ன, அதுக்கேத்த மாதிரி சண்டை போட்டா போதும்னு நினைக்கிறதில்ல. டைரக்டரும், ஹீரோவுக்கு ஏத்த மாதிரி அட்ஜெஸ்ட் பண்ணிட்டுப் போயிடுறாரு. என்னை கூப்பிட்டா, என்னால ஹீரோவுக்கு ஏத்த மாதிரி சண்டைப் பயிற்சி செய்ய முடியாது. அதனால, ஒரு ஹீரோ தனக்கு ஏத்த மாஸ்டர் யாரோ அவரோட கூட்டு சேந்துக்கறார். ஆனா, எத்தனையோ திறமைசாலிங்க இருக்காங்க. அவங்களால மேல வர முடியாம போறதுக்கு இதுவும் ஒரு காரணம். யதார்த்தத்துல, பத்து பேரை ஒரு ஆளால அடிக்கிறதுங்கறது யாராலும் முடியாது. ஏன், சண்டை கத்துக்கிட்ட எங்களாலயே முடியாது. ஒரு ஹீரோவுக்கு, ஜன்னல்ல விரல் மாட்டி, லேசா காயம் பட்டுட்டாலே அன்னிக்கி ஷூட்டிங் கேன்சல் ஆயிடும். அவருக்கு அடிபடாம, நேக்கா கொண்டுபோகவேண்டியதுதான் ஒரு ஸ்டண்ட் இயக்குநரோட வேலை.

கேள்வி: ஒரு சண்டைக் காட்சி பத்து மணி நேரம், பன்னிரெண்டு மணி நேரம் படமாக்கப்பட்டது என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு ஹீரோவுக்கு அடி படாதா?

முரளி: அடிபடத்தான் செய்யும். பத்து வருஷத்துக்கு முன்னாடின்னா இதெல்லாம் சாத்தியம். அப்போல்லாம் பிரபு, கார்த்திக், சரத்குமார்... இவங்கள்லாம் ஒரே நேரத்துல பத்து பேரை எதிர்கொள்வாங்க. அவங்ககிட்ட அந்த ஸ்டெமினா இருக்கும். சண்டைக் கலைஞர்கள் பன்னண்டு பேரு வருவாங்க. ஒவ்வொருத்தருக்கும் அஞ்சஞ்சு ஸ்ட்ரோக் இருக்கும். அதாவது, ஹீரோ ஒவ்வொருத்தருக்கும் அஞ்சடி குடுப்பாரு. டைமிங்கும் மிஸ் ஆகக்கூடாது. அடியும் வாங்கணும், அடியும் குடுக்கணும். அப்பிடி பண்ணும்போது ஹீரோவுக்கே ஒரு இண்டரெஸ்ட் இருக்கும். ஆனா, இப்போ அதெல்லாம் மாறி புதுப் புது டெக்னிக் வந்துடுச்சு. நிறைய கிரா.ஃபிக்ஸ். ஹீரோ காலையில ரெண்டு மணி நேரம், மத்தியானம் ரெண்டு மணி நேரம் ஸ்பாட்ல இருந்தாலே போதும். சண்டைக் காட்சி முடிஞ்சு போயிடும். ஒண்ணும் இல்ல. ஹீரோ வருவாரு. காத்தடிக்கும். சண்டைக் கலைஞர் ஓடி வருவாரு. ஹீரோ கையைத் தூக்குவாரு, ஒரு க்ளோஸ் போடுவாங்க, ஹீரோ ஒரே ஒரு அடி அடிச்சா சண்டை முடிஞ்சுது. அப்புறம் இன்னொருத்தன் வருவான். இது இப்போ உள்ள ட்ரெண்ட். சினிமா சண்டைங்கறது ஜிம்மிக்ஸ் மாதிரி இப்போ ஆயிடுச்சு. இப்போ இங்க இருக்கற ஹீரோக்களுக்கு ஃபைட்டர்ஸ் எல்லாம் ஒரு வெளையாட்டு பொருள் மாதிரி ஆகிப் போச்சு. ஆனா, இதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா மாறும்.

கேள்வி: தமிழ் சினிமாவில் சண்டைக் கலைஞர்களுக்கு ஒரு தனி பாரம்பரியம் உண்டு. எம்.கே. தியாகராஜ பாகவதர் காலத்திலிருந்து சண்டைக் காட்சிகள் இருக்கின்றன. எம்.ஜி.ஆர். சண்டைக்கு ஒரு தனி அடையாளமாகவே இருந்தார். சாண்டோ சின்னப்பாதேவர், ரஞ்சன்னு பல பேர் இருந்தார்கள். இன்றைக்கும் சண்டைக் காட்சிகளை ரசிப்பவர்கள் இருக்கிறார்கள். அப்போது இருந்த சண்டைக் காட்சிகளுக்கும், இப்போது இருப்பதற்கும் பெரிய மாற்றம் இருக்கிறதா?

முரளி: எம்.ஜி.ஆர், சிவாஜின்னு ஒரு ட்ரெண்ட். அப்புறம் சரத்குமார், கார்த்திக், பிரபுன்னு இன்னொரு ட்ரெண்ட் இருந்தது. எம்.ஜி.ஆர்., சிவாஜி காலத்துல சண்டை முறையான ஒரு விஷயமா இருந்தது. கத்திச் சண்டை, கப்பலில் நடக்கும் சண்டை, எல்லாம் இடத்துக்கு ஏத்த மாதிரி பொருத்தமா இருந்தது. இப்போ வர்ற படங்கள்ல திடீர்னு ரோட்ல சண்டை நடக்கும். அதை உடைப்பாங்க, இதை உடைப்பாங்க அப்பிடியே சண்டை முடிஞ்சு போயிடும். பிரம்மாண்டம்ங்கற பேர்ல தேவையில்லாத பல விஷயங்கள் நடக்குது. ஒரு கதாநாயகன், இன்னொரு கதாநாயகனைவிட எக்ஸ்ட்ரீமா போகணும்னு நினைக்கிறாங்களே தவிர, சண்டை யதார்த்தமா இருக்கணும்னு யாரும் நினைக்கிறதில்லை. படத்துல சண்டைக் காட்சி பொருத்தமான இடத்துல இருந்தா ஜெயிச்சுடும்.

கேள்வி: அந்தக் காலத்தில் தமிழ் சினிமாவில், சண்டைக்கு என்று தனிச் சிறப்புகள், தனித்தனி வகைகள் எல்லாம் இருந்தன. சிலம்புச் சண்டை, வாள் சண்டை, குத்துச்சண்டை... இப்படி. இன்றையச் சூழலில் இல்லை. ஏன்?

முரளி: அது உண்மைதான். பல கலைகள் கொஞ்சம் கொஞ்சமா அழிஞ்சுட்டு வருதுங்கறதுதான் நிஜம். உதாரணமா, கத்தி சண்டை இப்போ எந்த சினிமாவுலயும் வர்றதில்ல. சிலம்புச் சண்டையும் அப்படித்தான். அந்த மாதிர-ியான படங்கள் வர வரத்தான் அந்தக் கலைகள் வளரும். இப்போ துப்பாக்கிச் சண்டை, இல்லைன்னா பிரம்மாண்டங்கற பேர்ல சண்டை... இப்படித்தான் போய்க்கிட்டு இருக்கு. இப்போ இருக்குற ஹீரோக்கள்ல நிறையா பேரு சிலம்பு, கத்திச் சண்டை இதையெல்லாம் முறையா கத்துக்கறது கிடையாது. அப்பிடியே யாராவது அதை செஞ்சா நல்லாவும் இருக்காது. ஆடியன்ஸ் சிரிச்சிடுவாங்க.

கேள்வி: உலக அளவில் டோனி ஜா, ஜெட்லி போன்ற நடிகர்கள் சண்டைக் கலையில் பெயர் பெற்றவர்களாக இருக்கிறார்கள். தமிழ் சினிமாவ-ில் இவ்வளவு சண்டை இருந்தும் ஒரு தனித்துவம் இல்லாமல் இருப்பது ஏன்?

முரளி: அங்கல்லாம் குறைஞ்ச பட்சம் அஞ்சு வருஷமாவது கையை, காலை உடைச்சு சண்டை கத்துக்கிட்டு நடிக்க வர்றாங்க. இங்க அப்பிடி இல்லை. காசு இருந்தா போதும். எந்த சண்டைக் காட்சியில் வேண்டுமானாலும், யார் வேணும்னாலும் நடிக்கலாம்.

கேள்வி: தமிழ் சினிமாவில், இப்போது உள்ள கதாநாயகர்களில் உண்மையிலேயே சண்டைக் கலை தெரிந்த நடிகர்கள் யார் இருக்கிறார்கள்?

முரளி: சண்டைக் காட்சியை, ஓரளவுக்காவது சண்டை தெரிந்திருந்தால்தான் செய்ய முடியும். பிளாக் பெல்ட் வாங்கினவங்கள்லாம் இருக்கறாங்க. தமிழ் சினிமாவில் சண்டைக்குன்னு ரொம்ப மெனக்கிடுறவர் நடிகர் அர்ஜுன். அவர் சண்டையை நேசிக்கிறவர். ரசிச்சு, ரசிச்சு செய்யறவர்.

கேள்வி: மேலை நாடுகளில் இருப்பது போல சண்டைக் கலைஞர்களுக்கு பல வசதிகள் இங்கு இல்லை. இந்தச் சூழலில், தமிழ் சினிமா

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

# நமக்குள்ளும் ஒரு "Karate Kid"!

அப்பாவி M.G.R தன்பாட்டுக்கு நடந்து போய்க் கொண்டு இருகிறார். திடீர் என்று மூன்று முரடர்கள் வழி மறிக்கிறார்கள். கொஞ்சம் மிரளும் M.G.R மீது முதல் அடி விழுகிறது. தள்ளாடி விழுகிறார்! படம் பார்த்துக்கொண்டிருக்கும் ரசிகர்கள் கொதிக்கிறார்கள்! இரண்டாவது அடி வாங்குகிறார், தாடையில் கொஞ்சம் ரத்தம் வருகிறது! "மாச்சான், இப்படியே விட ஏலாது", ஒரு ரசிகன் திமிறி எழுகிறான், "மச்சி பொறு, இனித்தான் இருக்கு விளையாட்டு" கொஞ்சம் அனுபவம், உள்ள ரசிகன் அவனை அடக்குகிறான். மூன்றாவது அடி, அவர் நோக்கி வர, தடுத்து அவர் கொடுக்கும் ஒரு அடியில் மூன்று பேரும் பறந்து விழுகிறார்கள்! அரங்கம் முழுவதும் "விசில்" பறக்கிறது!

M.G.R எப்படியும் வென்று விடுவார் என்று நமக்கெல்லாம் தெரியும். ஆனால் நம்மைப் போல ஒரு சாமானியன் (Avarage person) வெல்வானா? அவன் மேல் தொடர்ந்து "அடிகள்" (இது வெறும் உடல் சம்மந்தப்பட்ட "அடிகள்" மட்டுமே அல்ல!) விழ எதிர்த்து நிற்பானா?, அல்லது இனி இழப்பதற்கு எதுவுமே இல்லை என்ற நிலையில் ஒரு "அடி", அந்த ஒரே ஒரு "அடியில்" அவன் வாழ்க்கையே தொக்கி நிற்க, திருப்பி அடிப்பானா?

அந்த "ஒரு அடி" தான் Karate முனை! அந்த அடிக்காக தனி மனிதன் முதல், பல இனங்கள் வரை மிகப் பெரிய விலை கொடுத்திருக்கிறார்கள், நீங்கள் (கட்டாயம்!) உங்கள் பிள்ளைகளுடன் பார்க்க வேண்டிய படம்! இப்போது Remake காலம். பொல்லாதவன், படிக்காதவன், நான் அவன் இல்லை என தமிழில் நிறைய ரீமேக்கி விட்டார்கள். அசல் "Karate Kid" வெளிவந்தது 1984. New Jersy இலிருந்து California வுக்கு தாயுடன் இடம் பெயர்ந்து வரும் பதின் வயதுச் சிறுவன் Daniel (Ralph Macchio) அங்கு வசிக்க ஆரம்பிக்கும் போது சந்திக்கும் சவால்களையும், அவன் அவற்றை எப்படி Mr. Miyagi (Pat Morita) என்ற ஒரு பெரியவரின் உதவியுடன் எதிர் கொள்கிறான் என்பதே படத்தின் கதை. படம் எதிர்பாராத வெற்றி பெற்றது.

## - கிறிஸ்ரி-

இந்த ஆண்டு Remake Karate Kid இல்,12 வயது Dre (Jaden Smith, புகழ் பெற்ற நடிகர் Will Smith இன் மகன்), Detroit இல் தன் அம்மா வேலை செய்யும் இடத்தில் இடம் பெறும் ஆள் குறைப்பு நடவடிக்கை காரணமாகச் சீனாவுக்கு இடம் பெயர்கிறான். புதிய இடம், புரியாத மொழி என வெறுப்படையும் Dre, அவன் வயது சீனப் பெண்ணின் நட்புக் கிடைக்க மலர்ந்து போகிறான்! ஆனால், எல்லாம் அவன் முன்னே சிதறி விழுகிறது சில நிமிடங்களிலேயே. அந்தச் சீனப்பெண்ணின் நண்பன் Cheng, Dre யை வம்புக்கிழுத்து அவள் முன்னேயே அடித்து வீழ்த்துகிறான்.

Cheng பற்றி Dre பின்வருமாறு சொல்கிறான்:
Now he's bigger than me, taller than me
And he's older than me, and stronger than me



And his arms are little bit longer than me

இன்று யார் முகத்தில் விழித்தேனோ என்று மனமுடைந்து பின்வாங்கிப் போகும் Dre, Cheng மற்றும் அவன் நண்பர்கள் மூலம் தினமும் துரத்தப்படுகிறான். ஒரு முறை எக்கச்சக்கமாக அவர்களிடம் மாட்டிக்கொண்டு அடி வாங்கும் Dre, அவன் வாழும் தொடர் மாடிக் கட்டிடத்தில் திருத்த வேலைகள் செய்து வரும் Mr.Han (Jackie Chan) மூலம் காப்பாற்றப்படுகிறான். Cheng ஒரு புகழ் பெற்ற Kung Fu பள்ளியில் பயிலும் மாணவன் என்பது தெரிய வர, Dre யை தொந்தரவு செய்யாது விடுமாறு கேட்க Mr.Han, Dre யை, அங்கு அழைத்துச் செல்கிறார். ஆனால் இருவரும் அங்கு, அந்த Kung Fu பள்ளி நடத்தும் ஆசிரியரால் அவமானப்படுத்தப்பட்டு Dre, Cheng ஐ வரப்போகும் Kung Fu போட்டியில் எதிர் கொள்ள வேண்டும் என்ற சவால் முன் வைக்கப்படுகிறது.

Dre வெல்லும் பட்சத்தில் அவன் தொந்தரவு செய்யப் பட மாட்டான். Mr. Han ஒரு முன்னாளைய Kung Fu ஆசிரியர் என்பது தெரிய வருகிறது.
Mr. Han தானே Dre க்கு Kung Fu கற்றுத் தருவதாகச் சொல்லி சவாலை ஏற்கிறார். தினமும் ஓடி ஒளிவதா, அல்லது சவாலை ஏற்றுக்கொண்டு, ஒரு முறையாவது திருப்பி அடிப்பதா இதுவே 12 வயது Dre முன் வாழ்க்கை வைக்கும் கேள்வி!

You see I never thought that I could walk through fire
I never thought that I could take a burn
I never had the strength to take it higher
Until I reached the point of no return

Dre, Kung Fu பயற்சிக்காக Mr.Han வீட்டிற்கு போக ஆரம்பிக்கிறான். பயங்கர அடி தடி முறைகள் தனக்கு கற்றுக் கொடுக்கப் போகிறார் என்று எதிர்பார்த்து வருகிறான். ஆனால், Mr.Han ஓ அவனைப் போட்டிருக்கும் Jacket ஐக் கழற்றவும், திரும்பப் போடவும் சொல்கிறார். மீண்டும், மீண்டும் இதே பயிற்சி ஒவ்வொரு நாளும் தொடரக் கோபத்தின் விளிம்பிற்குப் போகிறான் Dre, ஆனால் அப்படி ஒரு கணத்தில் Mr.Han அவனைத் தாக்க வர, தன்னை அறியாமலே அவனால் சட்டென்று தடுக்க முடிகிறது. ஆச்சரியத்தின் உச்சத்திற்குப் போகும் Dre, Mr.Han மேல் அதிக மதிப்பு வைக்கிறான். Kung Fu வெறும் சண்டை மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை முறை என்பதை Mr.Han சொல்லித் தருகிறார். (இது Jackie Chan ஆ என்று மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு "அடக்கி வாசித்திருக்கிறார்"!

Jaden Smith முழுப் படத்தையுமே தனது குட்டித் தோளில் அருமையாகத் தாங்குகிறார் என்று சொல்லாமல் விட்டால் அடிப்பாரோ?)
I will never say never (I will fight)
I will fight till forever (make it right)
Whenever you knock me down
I will not stay on the ground
Pick it up, pick it up
Pick it up, pick it up
And never say never

இறுதிக் காட்சியில் நடக்கும் Kung Fu போட்டி, பரபரப்புக் களம்! பல்வேறு பேரோடு போராடி Cheng ஓடு அடிபட Dre பாடுபடும் காட்சிகள் ஜோர்! ஒரு போட்டியின் போது மிருகத்தனமாக காலில் தாக்கப்பட்டு காயப்படும் Dre யிடம், "போட்டியை விட்டு விலகி விடுவோமா?" என்று Mr.Han கேட்க, "என் நெஞ்சில் இன்னும் பயம் இருக்கிறது, நான் இன்று போட்டியின் முடிவில் வீடு செல்லும் போது எந்தப் பயமும் இல்லாமல் போக விரும்புகிறேன்" என்று Dre சொல்வது touching!

And there's just no turnin back
When your heart's under attack
Gonna give everything I have
It's my destiny

படத்தின் கடைசி நிமிடங்கள், Cheng உம் Dre உம் சந்திக்கிறார்கள்! "அந்த ஒரு அடி" அடிக்க Dre துணிவானா? நாளைக் காலை விடியும் போது அவன் அச்சம் அவனை விட்டு விலகி இருக்குமா? 'The Karate Kid' ஒரு உயிர் உள்ள படம்! வாழ்க்கை நம்மை நூறு முறை அடித்து வீழ்த்தினாலும், ஒரு முறை, ஒரு விநாடி இடைவெளியில் நமக்கு வாழ்க்கையைத் திருப்பி அடிக்க சந்தர்ப்பம் இருக்கிறது என்று சொல்லும் படம்! வாருங்கள், ஒரு முறை, ஒரே ஒரு முறை திருப்பி அடிக்கலாம்!

பின்குறிப்பு: Justin Bieber, கனடிய 16 வயது இசைப் புயல்! அவரும், Jaden Smith உம் பாடிய 'Never say Never' பாடல் வரிகள் தான் கட்டுரையில் ஆங்காங்கே வந்து போனது. பாடல் படத்தின் முடிவில் வருகிறது. உங்கள் வீட்டு பதின் வயசுகளைப் பிடித்துப் போட்டுக் காட்டச் சொல்லுங்கள்!

COMPLETE MAINTENANCE SERVICES
Cleaning - We come to your home door
(Interior Exterior) - Van, car, bus, carpet upholstery - Area Rug
உங்கள் வீட்டிற்கு நாங்கள் நேரடியாக வருகின்றோம்
416.829.0970

Complete Basement Works
Hard Wood, Laminate, Title Flooring, Pluming, Electrical works.
குறித்தநேரத்தில் வேலைகள் முடித்துத் தரப்படும்
416.666.5627/647.269.0912

Complete Painting Works
Interior & Exterior - Houses, Basement, Offices
416.666.5627 / 416.319.1106

19 வருட கூட்டு அனுபவமிக்கவர்களின் சேவை

212

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



ஒரு நாள் கலாட்டா ஒருநாள் கலவரம்



ஒரு நாள் 3 மணிநேரம் மழையில் தடுத்துவைத்தல் உலகம் முழுவதும் அமளிதுமளிப்படுகிறது..



பத்திரிகை வானொலி தொலைக்காட்சி இன்ரநெற் ஈ மெயிலெல்லாம் G20 கனடா கலாட்டா பற்றித்தான் பேச்சு..



பல வருடங்கள் கலாட்டா, தினமும் குண்டுவீச்சு

மாதக்கணக்காக மழைநீரில் வாழ்க்கை..கேட்பதற்கு ஆட்களில்லை



ஊர்வலம் வைத்தால் உங்கடை நாட்டுக்காரருக்கு வேறை வேலையில்லையோ எண்டு கேட்டவை.. ஒருநாள் கலாட்டாவுக்கு எழும்பிக் குதிக்கினமெண்டு துள்ளிக்குதித்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா..



உலகர் ரி.வி யில் கனடாக் கலாட்டா, கண்ணாடி உடைப்பு, கார் எரிப்பு, சுறா சிங்கம் படக்காட்சிகளை விட விறுவிறுப்பாக இருக்கு எனச்சொல்லிச் சிரித்தார்.



இந்த நேரம் ரூபனும் ரூபியும் யேர்மனியிலிருந்து வந்த சினேகிதர்களை ஈற்ரன் சென்ரருக்கு சொப்பிங் கூட்டிக்கொண்டுபோய்



இந்த அமளி ஒருபுறமிருக்க..
உலகரும் தாமோதரமும் நேரம் தவறாது உலகக்கோப்பை உதைபந்தாட்டமும் தெரிந்ததோ தெரியவில்லையோ கூக்காட்டி விசிலடிக்கத் தவறவில்லை. இதனால் கோவில் தேர் திருவிழாக்கள் விரதம் பிடித்து பகலில் தூக்கம் போடும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவின் தூக்கம் கெட்டதுதான் மிச்சம்.

இதற்கிடையில் கோபத்தை அடக்க முடியாமல் ஆட்டிலறி அன்னம்மா சொன்னா அங்கை கோல் அடிக்கிறாங்கள் இஞ்சை (கனடாவிலை) பொலிஸ் கலவரகாரரை அடிக்கினம். வேலையில்லாதவை இருந்து பாக்கினம் என்று உலகரைப்பாத்து முணுமுணுத்தா..

உலகக்கோப்பையாலை ரி.வி சீரியல்கள் பாக்கமுடிவதில்லை. குஸ்புவின் ஜாக்கெட் (மன்னிக்கவும் ) ஜாக்பொட் பார்க்கமுடிவதில்லை.



நாட்டில் அவரவர்க்கு 1008 பிரச்சனைகள். இந்தச்செய்திகளிடையே கனடா டே. கனடாவுக்கு வயது 143. அதுமட்டுமல்ல எலிசபேத் மகாராணியும் வருகை தந்துள்ளார்.



மழை விட்டும் தூவாணம் விடவில்லை என்பதுபோல ஜி-20 முடிந்துவிட்டது. ஆனால் கைது செய்யப்பட்டவர்கள்..உரியமுறையில் நடத்தப்படவில்லையென ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன.

அங்கை பிடிபட்ட கனபேரைக்காணேல்லை. லிஸ்ரிலை இல்லாதாக்கள் உயிரோடை இல்லையெண்டு சனம் அழுதுகொண்டிருக்குது இஞ்சை யென்னண்டா என சலித்தபடி செக்கண்ட்புளோர் செல்லம்மா கதைக்க கோல் என்று ரூபனும் ரூபியும் தாமோதரமும் கத்த திடுக்கிட்டெழுந்தா ஆட்டிலறி அன்னம்மா..

# ஒருவரால் பத்துப்பேரை...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

சண்டைக் கலைஞர்களுக்கு இன்சூரன்ஸ் ஏதாவது இருக்கிறதா?

முரளி: இப்போ இயக்குநர் சசிகுமார் படங்களில் சண்டைக் காட்சி இயல்பா இருக்கும். அதனால், ரொம்ப அடிபடாது. இந்த யதார்த்தம்தான் இப்போதைய தேவையா இருக்கு. இதைத்தான் ஆடியன்ஸும் ஏத்துக்குவாங்க, விரும்புவாங்க. ஆனா, பெரிய படங்கள் பண்றப்போ, பைக்ல



மோதி விழறது, தீ வச்சுக்கறது, இந்த மாதிர-ியான காட்சிகள்ல ஸ்பைனல் கார்ட் அடிபடும், கால், கை உடைஞ்சிடும். சில சமயங்கள்ல சண்டைக் கலைஞர்கள் இறந்தும் போயிருக்காங்க. ஷகண்ணுக்குள் நிலவு'ன்னு ஒரு படத்துல ஒரு சண்டைக் கலைஞர் அப்படி இறந்துட்டார். இயக்குநர் பாசில் அந்தக் கலைஞரின் குடும்பத்துக்கு ஒரு லட்சம் குடுத்தார். விஜய் ஒரு லட்சம் குடுத்தார். யூனியன்ல இருந்து அவரோட சர்வீஸ் பணத்தைக் குடுத்துடுவாங்க. இப்போதான், சமீபத்துல யூனியன்ல இருந்து எல்லா சண்டைக் கலைஞர்களுக்கும் இன்ஸ்யூரன்ஸ் போட்டு வச்சிருக்கோம். நடிகர் சூர்யா, சண்டைக் கலைஞர்களுக்காகவே வருஷத்துக்கு ரெண்டு லட்சம், மூணு லட்சம் இன்ஸ்யூர்ன்ஸுக்குன்னு குடுக்குறார். இதுக்காக தனியா யூனியன்லருந்து, உறுப்பினர்கள்கிட்ட எதுவும் வாங்கறதில்லை. பொது நிதின்னு வரும், அதையும் நடிகர் சூர்யா மாதிரியானவர்கள் கொடுப்பதையும் சேர்த்து, வருஷத்துக்கு பன்னண்டு லட்சம், பதிமூணு லட்சம்னு மொத்தமா இன்ஸ்யூரன்ஸுக்கு கட்டிடுவோம். இந்த இன்ஸ்யூரன்ஸ்ல எம்பதாயிரம் ரூபா வரைக்கும் க்ளெயிம் பண்ணலாம்.

கேள்வி: எல்லா சண்டைக் கலைஞர்களுக்கும் சினிமாவில் நடிக்க வாய்ப்பு கிடைப்பது என்பது சிரமம். நீங்கள் தமிழ்நாடு திரைப்பட சண்டைக் கலைஞர்கள் சங்கத்தில் துணைத் தலைவராகவும் இருக்கிறீர்கள். உங்களைப் போன்ற கலைஞர்களுக்கு முக்கியமான பிரச்சனை என்று எதை நினைக்கிறீர்கள்?

முரளி: சண்டைக் கலைஞர்கள் இல்லைன்னா, எந்த கதாநாயகரும் முன்னுக்கு வந்திருக்க முடியாதுங்கறதுதான் உண்மை. எம்.ஜி.ஆரே. சண்டைக் கலைஞர்களால்தான் பேசப்பட்டார். ஒரு காலத்துல எங்க யூனியனுக்கு ரஜினி, கமல்னு எல்லாரும் உதவி செஞ்சாங்க. இப்போ அப்பிடி இல்லை. காலம் மாறிடுச்சு. ஒவ்வொரு நடிகரும், அவங்கவங்க வேலையைப் பாத்துட்டு போய்க்கிட்டே இருக்காங்க. முன்னாடில்லாம் சரத்குமார், பிரபு இவங்கல்லாம் ஏதாவது கூட்டம்னா, பாதுகாப்புக்கு எங்களைக் கூப்பிடுவாங்க. இப்போ, அடியாட்கள், செக்யூரிட்டி, கம்பெனி ஆர்ட்டிஸ்ட் இவங்களை எல்லாம் துணைக்கு வச்சுக்கறாங்க. அந்த மாதிரி சூழல்ல ஏதாவது கம்பெனி ஆர்ட்டிஸ்ட் யாரையாவது அடிச்சிட்டாலோ, குத்திட்டாலோ, ரேப் செஞ்சுட்டாலோ ஸ்டண்ட் ஆர்ட்டிஸ்ட்னு எங்க பேரு வந்துடுது. ஆனா, எங்க யூனியன்ல ஒருத்தர் தப்பு பண்ணினாலும், கார்டை வாங்கிட்டு வெளியில அனுப்பிடுவோம். மீடியாவுல இதையெல்லாம் கேக்கறதில்ல. தப்பு பண்ணினவனை விசாரிச்சுப் பாத்தா அந்தப் படத்துல சின்ன கேரக்டர் பண்ணின ஆளா இருப்பான். எங்க யூனியன்ல கடுமையான சட்ட திட்டங்கள் இருக்கு. கட்டுப்பாடோட இருந்தாதான் எங்க யூனியன்ல யாரும் இருக்க முடியும்.

கேள்வி: உங்கள் சங்கத்தில் ஐநூறுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே இந்த சண்டைக் காட்சிகளை நம்பித்தான் வாழ வேண்டியிருக்கிறது. நிறையபேர் கஷ்டப்படுகிறார்கள். அப்படியும் ஏன் இந்தத் துறையில் இப்படி பிடிவாதமாக இருக்க வேண்டும்?

முரளி: எல்லாரும் சினிமாவில் கொடிகட்டிப் பறக்கறதில்ல. அதுல நூறு பேர் ரொம்ப பிசியா, நல்லா இருக்காங்க. இன்னொரு நூறு பேர் நடுத்தரமா இருக்காங்க. ரொம்ப கஷ்டப்படுற கலைஞர்களும் இருக்காங்க. சில பேருக்கு கை, கால்ல அடிபட்டு, எலும்பை எடுத்துட்டு இரும்பு ராடு வச்சுட்டு நடமாடிக்கிட்டும் இருக்காங்க. அப்போ எல்லாம் சண்டை மேல பயங்கர ஈடுபாட்டோட சேந்தவங்க அதிகம். எங்கப்பாவே அதுக்கு ஒரு உதாரணம். அவர் எம்.ஜி.ஆர். ரசிகர். எம்.ஜி.ஆர். பத்தி யாராவது ஏதாவது சொல்லிட்டா அடி, பிச்சி எடுத்துடுவார். முரட்டுத்தனமான ஒரு அன்பு, விசுவாசம். ஆனா, இப்போ காலம் மாறிடுச்சு. சண்டைக் கலைஞர்கள் எல்லாருமே, எல்லாரையும் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு போக கத்துக்கிட்டாங்க. ஆனா, இப்பிடி அட்ஜஸ்ட் பண்ற நேரத்துல யாராலயும் நிறைய சம்பாதிக்க முடியல. சம்பாதிக்கிற காலத்துல யாரும் அட்ஜஸ்ட் பண்ணலை.

கேள்வி: ஒரு சண்டைக் கலைஞரின் சம்பளம் எவ்வளவு?

முரளி: ஒரு சண்டைக்கு, ஒரு கலைஞருக்கு இரண்டாயிரத்தி ஐநூறு ரூபாய் கிடைக்கும். ஆனா, அதுவும் எப்போ கிடைக்கும்னு சொல்ல முடியாது. மாசத்துக்கு பத்து படம் கிடைச்சாலும் கிடைக்கும். ஒரே ஒரு படம் கிடைச்சாலும் கிடைக்கும். எல்லாருக்கும் வேலை கிடைக்கறதுதான் கஷ்டம்.

கேள்வி: தமிழ் சினிமா சண்டைக் கலைஞர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? இதை நம்பி ஒரு கலைஞர் வாழ முடியுமா?

முரளி: தமிழ் சினிமா சண்டைக் கலைஞர்கள் எதிர்காலம்னு பிரிச்சுப் பாக்க முடியாது. இப்போ தமிழ் சினிமா நல்லா இருக்கு. அதனால, சண்டைக் கலைஞர்கள் எதிர்காலமும் நல்லாத்தான் இருக்கும். ஸ்டண்ட் கலைஞர்கள் மட்டும் இல்லை, அசோசியேட் டைரக்டர்கள், அசிஸ்டெண்ட் டைரக்டர்கள், டைரக்டர்கள், எல்லாருமே ஏதோ ஒரு நம்பிக்கையோடுதான் இங்க வாழ்ந்துக்கிட்டு இருக்கோம். நான் ஸ்டண்ட்ல அசிஸ்டெண்ட்டா இருந்தப்போ, 250 படத்துக்கும் மேல நடிச்சேன். நல்லா சம்பாதிச்சேன், நல்லா இருந்தேன். மாஸ்டர் ஆனதுக்கப்புறம் பத்து பதினைஞ்சு படம் பண்ணினேன். அதுல ஏழெட்டு படம் ரிலீஸ் ஆச்சு. ஆனா, அதிக நாள் சும்மாதான் இருக்கேன். இப்போ போராடிக்கிட்டு இருக்கேன். என்ன காரணம்னா, ஒரு டைரக்டர் படம் வெற்றி அடைஞ்சுதுன்னா, அதுல வேலை செஞ்ச மாஸ்டருக்கு பத்து படம் கிடைக்கும். இல்லைன்னா, வாய்ப்பே கிடைக்காது. எல்லா வி'யமும் செய்யக்கூடிய திறமை எங்ககிட்ட இருந்தாலும், எதுவும் எங்க கையில இல்லை. ஜெயிக்கறவங்க யாரோ அவங்கதான் பேசப்படுறாங்க. நாங்களும், நாங்க பண்ற படம் ஜெயிக்கும்ங்கற நம்பிக்கையிலதான் போய்க்கிட்டு இருக்கோம். என்னைப் பொறுத்தவரைக்கும் எங்க யூனியன்ல இருக்கற அத்தனைபேரும் நல்லா இருக்கணும். நல்ல திறமையான கலைஞர்கள் நிறையபேர் இருக்காங்க. அவங்களையெல்லாம் இந்த இயக்குநர்கள் யூஸ் பண்ணாம, ஏற்கெனவே குடுத்த ஆளுக்குத் திரும்பத் திரும்ப வாய்ப்புக் குடுக்கறாங்க. அவங்க, எங்க யூனியன்ல இருக்கற எல்லா கலைஞர்களுக்கும் வாய்ப்புக் குடுக்க முன் வரணும். அப்பிடி செஞ்சா சண்டைக் கலைஞர்களின் வாழ்க்கையும் நல்லா இருக்கும்.

# Chill out with a McFlurry®.

McDonald's® has a variety of delicious McFlurry flavours like Smarties®, Oreo® and Rolo® to help keep your cool this summer.




i'm lovin' it.

At participating McDonald's® restaurants in Canada.
Product availability varies by restaurant.
©2010 McDonald's.
Oreo is a trademark of Kraft Foods Global Brands, LLC/Inc. ROLO®, Smarties® T.M. OWNER / PROP. DES MARQUES: SOCIÉTÉ DES PRODUITS NESTLÉ S.A., VEVEY, SWITZERLAND/SUISSE. LICENSEE / LICENCIÉ: NESTLÉ CANADA INC.

| | |
|---|---|
| ***Markham and Progress*** | ***Drive thru open 24 hours*** |
| ***Markham and Finch*** | ***Drive thru open 24 hours*** |
| ***Markham and Highglen*** | ***Drive thru open 24 hours*** |
| ***Port Union and Kingston Rd*** | ***Drive thru open 24 hours*** |
| ***Malvern Town Centre*** | |
| ***Markham and Steels Wal Mart*** | |

# பிறரின் வாழ்வைப் பாதிக்காமலிருக்க

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 173

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புருடி

பிறரைத் துன்புறுத்தி பலிக்கடாக்களை உருவாக்கும் சக்தி எனக்கு இருக்கின்றது என இதுவரை நம்பியதற்காக என்னை மன்னித்திட இன்று நான் உடன்படுகிறேன்.

வாழ்க்கையில் ஏதோ ஒரு சமயத்தில் பிறருக்கு துன்பம் விளைவித்த செயல்களை நாம் யாவரும் நிச்சயம் செய்திருப்போம். சிலவேளைகளில் எமது செயல்களின் பிரதிபலிப்பு எமக்குத் தெரியவரும். ஆனால் சிலசமயங்களில் பிறர் சுட்டிக்காட்டு மட்டும் அது எமது பிழை என்பது எமக்குக் கொஞ்சங்கூட விளங்காது. நாம் புரிந்த தவறினால் மிகவும் மனம் வருந்துவோம். எமது அக்கறையற்ற அசட்டையான நடவடிக்கையினால் துன்புற்றவருக்கு வாழ்நாள்பூராவும் நாம் கடமைப்பட்டிருக்க வேண்டும் எனப்பிழையாக நம்பி விடுகிறோம்.

உனது தகாத செயலால் ஒருவர் பலிக்கடாவாகி விட்டார் என நீ நினைப்பது மிகத்தவறு. அவ்வாறு நீ நினைத்தாயானால் தொடர்ந்தும் நீ மனவருத்தப்படத்தான் போகிறாய். நீ முன்பு எப்பேர்ப்பட்டவராக இருந்தபடியாலோ அல்லது இப்போ இருக்கிறபடியாலோ மற்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என நீ நம்பக் கூடாது. அப்படி நீ நம்புவது வேறொருவர் வாழ்வில் சாதாரணமாக உனக்கிருக்கும் உரிமையைவிட அத்துமீறிக்



குறுக்கிடுவதால் உனக்கிருக்கும் மேலதிக சக்தியைத் தம்பட்டம் அடிப்பதாக மாறி உனது இறுமாப்பையே காட்டுகின்றது. இன்னொருவரைப் பாதித்துவிட்டோம் என நீ நினைப்பது அவரின் நிலைக்கும் செயலுக்கும் நீ தான் பொறுப்பாளி என்பதாகி விடும். இவ்வாறு தவறாக நீ நினைப்பது, அவசியமில்லாத துன்பத்தைத்தான் உனக்குத் தரும். உனது தவறான நடத்தையால் ஒருவர் பாதிக்கப்பட்டபடியால் அவர் உனது பலிக்கடாவாகிவிட முடியாது.

**நீ செய்த தவறினால் வாழ்நாள் பூராவும் பிறருக்குக் கடமைப்பட்டிருக்க வேண்டும் எனத் தவறாக இன்றுவரை நீ நம்பியிருக்கலாம். பிறரைத் துன்புறுத்தி அவர்களைத் துன்புறுத்திய தருணங்களை இன்று நினைவு கூர்ந்து, நான் செய்தது பெரிய பிழைதான் என உனது தவறை உன்னிடமே ஒப்புக் கொண்டு விடு. பின்பு உன்னை நீயே மன்னித்துவிடு'. நீ துன்புறுத்தியவர்களிடமிருந்தும் மன்னிப்புக்கேட்டு, அதைப் பெற்றுக்கொண்டு நிம்மதியாக வாழ்க்கையில் நடனமாடிக்கொண்டிரு.**








